வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 229 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஆனி 29, சனி 13.07.2013

கொழும்பு விலையில் கிளிநொச்சியில்...
மொத்தமாகவும் சில்லறையாகவும்
புதிய மக்கள்வங்கி முன்பாக, 79/2, A9 வீதி, கிளிநொச்சி.
தொடர்புகளுக்கு:
077 2612452, 077 3357333
077 3322993, 021 2283829
Fax : 0212283829
அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும், ஒப்பந்தகாரர்களுக்கும், வியாபாரிகளுக்கும் விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

இந்தியா

பக். 06
உடையுமா ஆந்திரா?

உலகம்

பக். 07
சிறையில் பெரும் கலவரம் 200 பேர் தப்பியோட்டம்

விளையாட்டு

பக். 22
வவுனியா தமிழ் ம.ம.வியிடம் வீழ்ந்தது நெடுக்குளம் ம.வி.



பக். 23
டோனியின் மிரட்டலுக்கு பணிந்தன சிங்கங்கள்

# நினைத்ததை முடிப்போம்

## '13' திருத்தம் தொடர்பாக சம்பந்தனிடம் ஜனாதிபதி திட்டவட்டம்

கொழும்பு, ஜூலை 13
நாட்டின் நலனைக் கருத்திற்கொண்டு மேற்கொள்ளும் '13' திருத்தம் உள்ளிட்ட எந்தவொரு முயற்சியிலும் அரசு முன்வைத்த காலைப் பின்வைக்கப் போவதில்லை. நாங்கள் நினைத்ததை முடித்தே தீருவோம். இதனைத் தெட்டத் தெளிவாக இந்தியாவுக்கும் தெரிவித்து விட்டோம். வடக்கு மாகாண சபைத் தேர்தல் நீதியாகவும் நேர்மையாகவும் நடைபெறும். இதில் கூட்டமைப்பே வெற்றிபெறும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தனிடம் தெரிவித்துள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

ஜனாதிபதி மாளிகையில் நேற்றுக்காலை நடைபெற்ற முக்கிய சந்திப்பு ஒன்றின் போதே சம்பந்தனுக்கு ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார். அவசர அவசரமாக ஏற்பாடு செய்யப்பட்ட இந்தச் சந்திப்பில் ஜனாதிபதியுடன் அவரது செயலாளர் லலித் வீரதுங்க, வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

சுமார் ஒன்றரை மணி நேரத்திற்கும் மேலாக நடைபெற்ற இந்தச் சந்திப்பின் போது வடக்கு, கிழக்கில் தற்போதுள்ள காணி சுவீகரிப்புப் பிரச்சினை, மீள்குடியேற்றம், இராணுவப் பிரசன்னக்குறைப்பு, படையினரை முகாம்களுக்குள் முடக்குதல், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, நீதியும் சுதந்திரமானதுமான வடக்குத் தேர்தல் என்பன போன்ற விடயங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டன.



இதன்போது சம்பந்தனிடம் ஜனாதிபதி தெரிவித்ததாவது, தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விடயத்தில் இலங்கை அரசு அக்கறையாகவே இருக்கின்றது. எனினும் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக நியமிக்கப்பட்ட தெரிவுக்குழுவுக்கு வராமல் தமிழ்க்கூட்டமைப்பு வெளியில் இருந்து கொண்டு அரசைக் குறைகூறுவது அர்த்தமற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தெரிவுக்குழுவுக்கு வரச்செய்வதற்கான அழுத்தங்களையும், ஆலோசனைகளையும் வழங்குமாறு இந்தியாவிடமும் வலியுறுத்தியுள்ளோம். தமிழர் பிரச்சினைத் தீர்வில் பொறுப்புடன் செயற்பட வேண்டிய கடப்பாடு தமிழ்க்கூட்டமைப்புக்கும் உண்டு.

நாட்டுக்கு நன்மையான விடயங்களைச் செய்வதில் எப்போதும் எனது அரசு பின்நிற்கப்போவதில்லை. '13'ஆவது திருத்தத்தில் உள்ள பொலிஸ், காணி அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்குவதில் நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன. எனவே '13' ஐ திருத்தும் விடயத்தில் ஒருபோதும் நாங்கள் பின்வாங்கப் போவதில்லை. இதனை இந்தியாவுக்குக் கூட திட்டவட்டமாகச் சொல்லி விட்டோம். சிறிய தொகையான முன்னாள் போராளிகளே இன்னமும் புனர்வாழ்வு பெற்று வருகின்றனர். அவர்களும் விரைவில் விடுவிக்கப்படுவர்.

(ங-5)

## மிதிவெடி அகற்றியவர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஜூலை 13
மிதிவெடி ஒன்றை அகற்றிக் கொண்டிருந்த பணியாளர் ஒருவர், திடீரென அது வெடித்ததனால் முகம் மற்றும் உடல் பகுதியில் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நாகர் கோயில் பகுதியில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் இடம்பெற்றது.

இந்த வெடிச் சம்பவத்தில் நாகர் கோயில், குடாரப்பு பகுதியைச் சேர்ந்தவரும் 'ஹலோ ட்ரஸ்ட்' நிறுவனப் பணியாளருமான ஜேசுராஜா லியோ (வயது-29) என்பவரே படுகாயமடைந்தார். இந்த வெடிப்புச் சம்பவம் தொடர்பில் அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(ங-4-8)

## தேர்தல் வன்முறைகளை தடுக்க யாழில் சோதனைச் சாவடிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 13
வடமாகாண சபைத் தேர்தலை முன்னிட்டு யாழ். மாவட்டத்தில் சோதனைச் சாவடிகளும், முறைப்பாடுகளைப் பதிவு செய்யும் பிரிவுகளும் அமைக்கப்படவுள்ளன.

இந்தத் தகவலை யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம். ஜெவ்றி தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

வழமையாகவே தேர்தல் காலங்களில் குழப்பங்கள் நிகழ்வது வழமையானது. எனவே செப்ரெம்பரில் நடைபெறவுள்ள வடமாகாண தேர்தலை ஒட்டி மக்கள் அதிகமாகக் கூடும் இடங்கள், சந்திகள் என்பவற்றில் சோதனைச் சாவடிகள் அமைக்கப்படவுள்ளன.

இதேவேளை, தேர்தல் காலத்தில் இடம்பெறவுள்ள குற்றச்செயல்கள், வன்முறைகள் தொடர்பில் முறையிடுவதற்கு வசதியாக யாழ். மாவட்டத்தில் உள்ள 17 பொலிஸ் நிலையங்களிலும் தேல்தல் முறைப்பாடுகளை பதிவுப் செய்வதற்கென தனியான ஒரு பிரிவும் இயங்கும் - என்றார்.

(ங-4)

## தேர்தல் செலவு 150 கோடி



கொழும்பு, ஜூலை 13
வடக்கு, வடமேல் மற்றும் மத்திய மாகாணசபைகளுக்கான தேர்தலை நடத்த ஆயிரத்து 500 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளது. தேர்தல் செலவுகளுக்காக ஆயிரத்து 350 மில்லியன் ரூபாவே முன்னர் கணிப்பிடப்பட்டிருந்தது. எனினும், மின்கட்டண உயர்வு, எரிபொருட் செலவு, பாதுகாப்பு என்பவற்றுக்கான செலவீடுகள் இவ்வருடம் அதிகரித்துள்ளதால் தேர்தலுக்கான மொத்தச் செலவிலும் அது தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

– இப்படித் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். (ங-சி)

## முதல்வர் வேட்பாளர் நேற்றும் முடிவில்லை

யாழ்ப்பாணம், ஜூலை 13
முதலமைச்சர் வேட்பாளர் தெரிவில் கூட்டமைப்புக்குள் இழுபறி நிலையே தொடர்கின்றது.

முதலமைச்சர் வேட்பாளரை தீர்மானிப்பதற்காக நேற்று நடைபெற்ற கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் நள்ளிரவு வரை எந்தவித முடிவுகளும் எட்டப்படவில்லை. மாவை சேனாதிராசா, நீதியசரர் சி.வி.விக்னேஸ்வரன் இருவரில் யாரை முதல்வர் வேட்பாளராக தெரிவுசெய்வது என்பது குறித்து ஒருங்கிணைப்புக் குழுவில் உள்ள அனைவரதும் கருத்துக்கள் நேற்று கேட்டறியப்பட்டன. இன்று மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ள கூட்டத்தில் இறுதித் தீர்மானம் எடுக்கப்பட்டு முதலமைச்சர் வேட்பாளர் யார் என்பது அறிவிக்கப்படும் என்று கூட்டமைப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.(ங-5)

## வடக்குத் தேர்தலைத் தடுக்க 18 இல் முக்கிய அறிவிப்பு

### சிங்கள அமைப்புகளின் ஒன்றியம் தீட்டுகிறது சதித் திட்டம்

கொழும்பு, ஜூலை 13
வடக்குத் தேர்தல் தொடர்பில் எதிர்வரும் 18ஆம் திகதி சிங்கள மக்களுக்கு முக்கிய அறிவிப்பொன்றை விடுக்கவுள்ள கடும் போக்குடைய சிங்கள தேசியவாத அமைப்புகளின் ஒன்றியம், அதன் பின்னர் இதுவிடயம் சம்பந்தமாக அரசிடம் மனு ஒன்றையும் கையளிப்பதற்கு உத்தேசித்துள்ளது. (ங)

## மஹியங்கனைப் பள்ளிவாசல் மீது தாக்குதல்

கொழும்பு, ஜூலை 13
நாட்டில் முஸ்லிம் மக்களின் மதத் தலங்கள் மீது தொடர்ச்சியாக நடத்தப்படும் தாக்குதல்கள் வரிசையில் மஹியங்கனை நகரில் உள்ள முஸ்லிம்களின் வணக்கத் தலமான மஸ்ஜிதுல் அரபா மீது இனந்தெரியாதோரால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதல் வியாழக்கிழமை இரவு நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரிவிக்கப்படுவதாவது:



ரம்ழான் காலத்தில் முஸ்லிம்களின் இராக்கால தொழுகையான தராவிஹ் தொழுகை முடிந்தபின் வியாழக்கிழமை பள்ளிவாசல் மீது கல் வீசப் பட்டுள்ளது. பள்ளிவாசலின் உட்பகுதியில் பன்றி இறைச்சியும் வீசப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் பள்ளிவாசலின் ஜன்னல் மற்றும் கதவின் கண்ணாடிகள் சேத முற்றதுடன், கழிவறைப் பகுதியும் சேதமடைந்துள்ளது.

இதனையடுத்து மஸ்ஜிதுள்

தொடர்ச்சி: பக்கம் 21

## 'உதயன்' ஊடகவியலாளர் மீது தாக்கு: பொலிஸ் விசாரணை தொடர்கிறது

யாழ்ப்பாணம், ஜூலை 13
'உதயன்' பத்திரிகையின் அலுவலகச் செய்தியாளர் தாக்கப்பட்ட விடயம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறு யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜெப்றி தெரிவித்தார்.

நேற்று நடந்த வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

'உதயன்' அலுவலகச் செய்தியாளர் குணாளன் டிலீப் அமுதன் கடந்த புதன் கிழமை பணி முடிந்து தனது

தொடர்ச்சி: பக்கம் 21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு புகுந்து திருடியோர் மாட்டினர்

யாழ்ப்பாணம், ஜூலை 13
சுன்னாகத்தில் வீடொன்றில் இருந்து 4 லட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான தாலிக்கொடியைத் திருடிய குற்றச்சாட்டின் பேரில் இருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த புதன்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது. கைது செய்யப்பட்டவர்கள் மட்டுவில் மற்றும் நுணாவில் மேற்குப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும், அவர்களை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ந-4)

# போதும் பொலிஸார்!

### யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு



பொலிஸார் சம்பவ இடத்துக்கு வருவது வழமை'' என்று மக்கள் குற்றஞ் சுமத்துகின்றனர். கடந்த புதன்கிழமை கூட நகரின் முக்கிய சந்திகளில் ஒன்றான வின்சர் சந்தியில் விபத்துச் சம்பவமொன்று இடம்பெற்று அரைமணி நேரத்தின் பின்னரே பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-4)

யாழ்ப்பாணம், ஜூலை 13
யாழ். மாவட்டத்தில் தற்போது போதியளவு பொலிஸார் உள்ளனர். இதனால் மேலதிகமாக இங்கு பொலிஸார் நியமிக்கப்பட வேண்டிய அவசியம் ஏதுமில்லை. உரிய பணிகளை முடிக்க தற்போதுள்ள பொலிஸாரின் எண்ணிக்கையே போதுமானது. இவ்வாறு யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம். ஜெப்றி தெரிவித்தார்.

நேற்று நடந்த வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

> குற்றச்செயல்கள் நிகழ்ந்தால் அல்லது விபத்து ஏற்பட்டால் கூட சம்பவ இடத்துக்கு உடனடியாகப் பொலிஸார் செல்வது அரிதான விடயம் என்கிறார்கள் பொதுமக்கள்

யாழ்ப்பாணத்தில் கடமையில் உள்ள பொலிஸாரின் எண்ணிக்கை போதுமானதாகவே காணப்படுகிறது. எனவே மேலதிகமாக இங்கு பொலிஸாரை நியமிக்க வேண்டிய தேவையில்லை. தேர்தல் போன்ற விசேட நாள்களில் மட்டும் பாதுகாப்பு நடவடிக்கை போன்ற விடயங்களுக்காக மேலதிகமாக பிற மாவட்டங்கள், மாகாணங்களிலிருந்து பொலிஸாரை வரவழைத்து கடமையில் ஈடுபடுத்துவோம். இதுதவிர சாதாரண நிலையில் கடமைகளை மேற்கொள்ள தற்போதுள்ள பொலிஸாரின் எண்ணிக்கையே போதுமானது- என்று அவர் தெரிவித்தார்.

இதேவேளை, யாழ்.மாவட்டத்தில் புறநகர்ப் பகுதிகளில் மாத்திரமன்றி நகர்ப் பகுதிகளில் கூட ஏதாவது குற்றச்செயல்கள் நிகழ்ந்தால் அல்லது விபத்து ஏற்பட்டால் கூட சம்பவ இடத்துக்கு உடனடியாகப் பொலிஸார் செல்வது அரிதான விடயமாகவே உள்ளதாக பொதுமக்கள் குறைகூறுகின்றனர்.

''பொலிஸாருக்கு ஏதேனும் அசம்பாவிதம் அல்லது விபத்துத் தொடர்பாக அவசரமாக அறிவித்தாலும், இதோ வந்து விடுகிறோம் என்று தொலைபேசியில் தெரிவிப்பார்கள். ஆனால் மணிக்கணக்கின் பின்னரே

## வல்லை நகரசபைத் தலைவரின் வீடு உடைக்கப்பட்டு ஆவணங்கள் திருட்டு

வடமராட்சி, ஜூலை 13
வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் நடராஜா அனந்தராஜின் வீடு உடைக்கப்பட்டு பெறுமதிமிக்க ஆவணங்களும், லப்டொப் கணினியும் அபகரிக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு அவர் வசிக்கும் தெணியம்பையில் உள்ள வீடே உடைக்கப்பட்டதாகும்.

நகரசபைத் தலைவர் ந.அனந்தராஜ் தனது குடும்பத்தாருடன் வியாழக்கிழமை மாலை கொழும்பு சென்றிருந்தார். இதனால் வீட்டில் எவரும் இருக்கவில்லை.

நேற்றுக்காலை சம்பவம் பற்றி அறிந்து கொண்ட அவரது சகோதரனான நடராஜா இராஜேஸ்வரன் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு தெரிவித்ததைத் தொடர்ந்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மோப்ப நாயும் வரவழைக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. லப்டொப் கணினி மற்றும் பெறுமதிமிக்க ஆவணங்களையும் தவிரவேறு பொருள்கள் ஏதாவது அபகரிக்கப்பட்டதா என்ற சரியான விவரம் தெரியவரவில்லை. அவர் கொழும்பு செல்ல முன்னர் தீருவிலில் பூங்கா ஒன்றை திறந்து வைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-8)

### மேர்வின் சில்வா யாழ்ப்பாணத்தில்



பிரதியமைச்சர் மேர்வின் டி சில்வா தலைமையிலான சுமார் 100க்கு மேற்பட்ட நீலப் படையணியினர் நேற்று யாழ்ப்பாணத்துக்கு வந்தனர். இவர்களை கட்சி ஆதரவாளர்கள் கொடிகாமத்தில் வைத்து வரவேற்றனர். பிரதியமைச்சர் மேர்வின் சில்வா சாவகச்சேரி வைத்தியசாலைக்கும் சென்று விடுதிகளில் தங்கியிருந்த நோயாளர்களுடன் கலந்துரையாடினார். அவரிடம் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரியினால் வைத்தியசாலையின் தேவைகள் தொடர்பான மனு ஒன்றும் கையளிக்கப்பட்டது. (ந-9-131)

## கைப்பையை களவாடியோர் கைதாகினர்



யாழ்ப்பாணம், ஜூலை 13
பெண் ஒருவர் வைத்திருந்த 68 ஆயிரம் ரூபா பணத்துடனான கைப்பையைக் கொள்ளையடித்தனர் என்ற சந்தேகத்தில் 2 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 4 ஆம் திகதி இடம்பெற்ற இந்தச் சம்பவத்தின் போது கைது செய்யப்பட்ட இருவரும் மணியந்தோட்டம் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ந-4)

## இரத்ததானம்

யாழ்ப்பாணம், ஜூலை 13
வல்வெட்டித்துறை வைத்தியசாலை மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணி முதல் இரத்ததான முகாம் நடைபெறவுள்ளது. ஆர்வலர்கள் அனைவரையும் இந்த முகாமில் இரத்ததானம் செய்யுமாறு யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவு கேட்டுள்ளது. (ந)

### சாவகச்சேரி பிரதேச சபையின்

## உறுப்பினர் எண்ணிக்கை அதிகரிப்பு

தென்மராட்சி, ஜூலை 13
சாவகச்சேரி பிரதேச சபையின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 15 இல் இருந்து 21 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அரசின் புதிய எல்லை நிர்ணயத்தின் பிரகாரமே இந்த அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி சாவகச்சேரி பிரதேச சபையில் மேலும் இரு வட்டாரங்கள் பிரிக்கப்பட்டு அவற்றுக்கான உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவதுடன் நான்கு போனஸ் ஆசனங்களும் வழங்கப்பட்டுள்ளன. இதன்‌லேயே தற்போது 15 ஆக உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை 21ஆக உயரவுள்ளது.

பிரதேச சபை எல்லைக்குள் தென்மராட்சி தெற்குப் பகுதியில் மறவன்புலோ பிரிவுடன் இருந்த தனங்கிளப்பு பிரிவும் தென்மராட்சி கிழக்குப் பிரிவில் விடத்தற்பளை பிரிவுடன் இருந்த கரம்பகம் பிரிவுமே இனிமேல் தனித்தனி வட்டாரங்களாக இயங்கவுள்ளன என்று பிரதேச சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (ந-9)

## சிறுமியர் துஷ்பிரயோகம் இருவர் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், ஜூலை 13
சிறுமியரை பாலியல் துஷ்பிரயோகம் செய்தனர் என்ற குற்றச்சாட்டில் இரு வேறு சம்பவங்களில் தொடர்புடைய இளைஞன் ஒருவனும், சிறுமியின் தந்தையும் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நெல்லியடிப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியைச் சேர்ந்த 23 வயது இளைஞனும், யாழ்ப்பாண பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிறுமியொருத்தியின் 61 வயதான தந்தையுமே எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ந-4)

# சனி முதல் வெள்ளி வரை குடாநாட்டில் மின்தடை

வீதி அகலிப்புப் பணிகளுக்காகவும் உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடம் நகர்த்த வேண்டியிருப்பதாலும், புதிய உயர் அழுத்த மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காகவும் காலை 8.30-5.30 மணிவரை சில பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

இன்று சனிக்கிழமை கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலி, கல்வயல், சரசாலை, சந்திரபுரம், மட்டுவில், ஊரெழு மேற்கு, ஊரெழு அம்மன் கோயிலடிப் பிரதேசம், கரந்தன், போயிட்டி பிரதேசம், எழுதுமட்டுவாழ் துர்க்கையம்மன் பிரதேசம், சிறுப்பிட்டி எம்.பி.சி.எஸ். செல்லப்பிள்ளையார் பிரதேசங்கள், அச்செழு இராணுவ முகாம் பிரதேசம், எருவன் பிரதேசம் ஆகிய இடங்களிலும்-

நாளை ஞாயிற்றுக்கிழமை உரும்பிராய், கோண்டாவில், மருத்துவ பீடப் பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், பட்டணப்பகுதி நீங்கலாக யாழ்.மாநகரசபைப்பகுதி, ஸ்ரான்லி வீதி, பரமேஸ்வரா, கந்தர்மடம், ஆரியகுளம், வேம்படி, குருநகர், பாஷையூர், இடைக்காடு, வளலாய், பத்தைமேனி, தொண்டமானாறு வீதிப் பிரதேசம், எழுதுமட்டுவாழ் துர்க்கை அம்மன் பிரதேசம், சிறுப்பிட்டி எம்.பி.சி. எஸ். செல்லப்பிள்ளையார் பிரதேசங்கள், அச்செழு இராணுவ முகாம் பிரதேசம், எருவன் பிரதேசம், கரந்தன், நீர்வேலி, அச்சுவேலி, தோப்பு, இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, செம்மணி ஆகிய இடங்களிலும்-

15 ஆம் திகதி திங்கட்கிழமை, 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆகிய இரு தினங்களும் ஊரெழு மேற்கு, ஊரெழு அம்மன் கோயிலடி பிரதேசம், கரந்தன், போயிட்டி பிரதேசம், எழுதுமட்டுவாழ் துர்க்கையம்மன் பிரதேசம், சிறுப்பிட்டி எம்.பி.சி. எஸ். செல்லப்பிள்ளையார் பிரதேசங்கள், அச்செழு இராணுவ முகாம் பிரதேசம், எருவன் பிரதேசம் ஆகிய இடங்களிலும்-

17 ஆம் திகதி புதன்கிழமை சிறுப்பிட்டி எம்.பி.சி.எஸ். செல்லப்பிள்ளையார் பிரதேசங்கள், கரந்தன், போயிட்டி பிரதேசம், எழுதுமட்டுவாழ் துர்க்கை அம்மன் பிரதேசம், அச்செழு இராணுவ முகாம் பிரதேசம், எருவன் பிரதேசம், இடைக்காடு, வளலாய், பத்தைமேனி, தொண்டமானாறு வீதிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும்-

18 ஆம் திகதி ஆம் திகதி வியாழக்கிழமை சிறுப்பிட்டி எம்.பி.சி.எஸ்.செல்லப்பிள்ளையார் பிரதேசங்கள், கரந்தன், போயிட்டி பிரதேசம், எழுதுமட்டுவாழ் துர்க்கை அம்மன் பிரதேசம், அச்செழு இராணுவ முகாம் பிரதேசம், எருவன் பிரதேசம் ஆகிய இடங்களிலும்-

19 ஆம் திகதி ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிறுப்பிட்டி எம்.பி.சி.எஸ்.செல்லப்பிள்ளையார் பிரதேசங்கள், கரந்தன், போயிட்டி பிரதேசம், எழுதுமட்டுவாழ் துர்க்கை அம்மன் பிரதேசம், கொடிகாமம், முதல் வரணி வரையான பிரதேசங்கள், அச்செழு இராணுவ முகாம் பிரதேசம், எருவன் பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று யாழ். பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்ன அக்கிரமம்....இது...



பொம்மைவெளிப் பகுதியில் குப்பை போடப்படும் பகுதியில் எடுக்கப்பட்ட படம் அல்ல இது. யாழ்.நகரில் சனப்புழக்கம் மிகுந்த தட்டாதெரு சந்திப் பகுதியில் தான் இந்தக் குப்பை மேடு காணப்படுகிறது. எதிரே தெரிவது முனீஸ்வரர் ஆலயம் மற்றும் கலாஜோதி சனசமூக நிலையம். அருகில் குடியிருப்புகள், கடை கண்ணிகள் வேறு.

இவ்வாறான இடத்தில் யாழ்.மாநகர சபையினர் நாளாந்தம் காலை வேளைகளில் குப்பை கூளங்களை வண்டில்களில் நாலா பக்கங்களிலும் இருந்து கொண்டு வந்து குவிக்கின்றனர். ஒரு சில மணி நேரத்தில் குப்பைகள் கழிவுகள் அனைத்தும் டிராக்டரில் ஏற்றப்பட்டு எடுத்துச் செல்லப்படுகின்றன.

குவிக்கும் குப்பைகளை ஊழியர்கள் அள்ளி அள்ளி டிராக்டருக்குள் தூக்கி வீசுகின்றனர். அவ்வேளை கழிவுடன் கூடிய காகிதங்கள், பைகள் போன்றவை காற்றில் பறக்கின்றன. வருவோர் போவோர் தூசுகளைச் சுவாசித்தபடி செல்ல வேண்டியுள்ளது. பாடசாலை நேரத்தில் மாணவர்களுக்கும் பாதிப்பு ஏற்படுகிறது.

கோயிலுக்கு முன்னால் மாமிசக் கழிவுகள், பெண்கள் பாவித்து வீசும் பொருள்கள் மற்றும் இன்னோரன்ன சகிக்க முடியாத துர்நாற்றம் எழும் கழிவுகள் போடப்படுவது சரியா....?

> குவிக்கும் குப்பைகளை ஊழியர்கள் அள்ளி அள்ளி டிராக்டருக்குள் தூக்கி வீசுகின்றனர். அவ்வேளை கழிவுடன் கூடிய காகிதங்கள், பைகள் போன்றவை காற்றில் பறக்கின்றன. வருவோர் போவோர் தூசுகளைச் சுவாசித்தபடி செல்ல வேண்டியுள்ளது.

இந்த ஆலய முன்றிலில் அடியார்கள் பொங்கிப் படைப்பது வழமை. இதனை எப்படி- இந்தச் சூழலில் செய்வது...?

'உதயன்' அலுவலகத்துக்கு பத்துக்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்ததை அடுத்து எமது படப்பிடிப்பாளர் நேற்றுக் காலை 7 மணிக்கு அந்தப் பகுதிக்குச் சென்றிருந்தார். அவர் சுமார் 45 நிமிடங்கள் வரை அங்கு காத்திருந்து 7.45 மணியளவில் இந்தப் படத்தை எடுத்தார்.

அந்தப் பகுதியூடாக எத்தனையோ சுகாதார அதிகாரிகள், சுகாதாரப் பரிசோதகர்கள் சென்று வந்தபோதும் இந்தச் சுகாதாரக் கேடு குறித்து கவனத்தில் எடுக்கவில்லை. இது தான் யாழ்ப்பாணத்தின் நிலைமை....! (ஒ-21)

# வவுனியா ஆஸ்பத்திரியில் பெண் தாதியர் பகிஷ்கரிப்பு

## மருத்துவர் ஒருவரின் செயலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து

வவுனியா, ஜூலை 13

திடீர் விபத்துசேவைப் பிரிவில் பணிபுரியும் பெண் தாதிய உத்தியோகத்தர் ஒருவருக்கு எதிராக மருத்துவர் ஒருவர் தகாத வார்த்தைப் பிரயோகம் மேற்கொண்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து வவுனியா பொது வைத்தியசாலையில் பணிபுரியும் பெண் தாதிமார்கள் ஒரு மணிநேரம் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் நேற்றைய தினம் ஈடுபட்டனர்.



நேற்று முன்தினம் பிற்பகல் 5 மணியளவில் திடீர் விபத்துப் பிரிவில் கடமையில் இருந்த பெண் தாதிய உத்தியோகத்தர் ஒருவருக்கு எதிராக பார்வையாளர் முன்னிலையில் தகாதவார்த்தை பிரயோகத்தை மேற்படி மருத்துவர் மேற்கொண்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று மு.ப. 10.30 மணியளவில் பதாகைகள் ஏந்தியவாறு சுமார் ஒரு மணித்தியாலம் பணிப் புறக்கணிப்பில் பெண் தாதிய உத்தியோகத்தர்கள் ஈடுபட்டனர். குறிப்பிட்ட மருத்துவரை திடீர் விபத்துப் பிரிவில் இருந்து அகற்று மாறும், பெண் தாதிய உத்தியோகத்தர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்குமாறு கோரியும் இந்தப் பணிப் புறக்கணிப்புப் போராட்டம் இடம்பெற்றது. இதனால் மருத்துவமனையின் செயற்பாடுகளில் தடையேற்பட்டது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மேற்குறித்த சம்பவம் தொடர்பாக வவுனியா பொது வைத்தியசாலையின் தாதியர் சங்கத்தினர் உயர் மருத்துவ அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளனர். (க-402)

# வடமாகாண சபை தேர்தலில் அனைவருக்கும் அ.அட்டை

யாழ்ப்பாணம்,ஜூலை 13

வடக்கில் 85 ஆயிரம் பேர் தேர்தலில் வாக்களிக்க தகுதி யில்லாமல் உள்ளனர். வடமாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் அவர்களுக்கு அடையாள அட்டை உள்ளிட்ட உறுதிப்படுத்தல்களை வழங்க தாம் நடவடிக்கை எடுத்து வருவதாக 'கபே' அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென் னக்கோன் தெரிவித்தார்.

'கபே' அமைப்பின் யாழ். அலுவலகத்தில் நேற்றுமுன் தினம் செய்தியாளர் சந்திப் பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

வடக்கில் உள்ளவர்களில் 85 ஆயிரம் பேர் இவ்வாறு வாக்களிக்கத் தகுதி இல்லாமல் இருக்கின்றமை எமது கணக்கெடுப்பில் தெரிய வந்துள்ளது. தேசிய அடையாள அட்டைகளைத் தொலைத்தவர்கள், தேசிய அடையாள அட்டையை இதுவரை பெற்றுக்கொள் ளதவர்கள் அதற்கு விண் ணப்பிக்க முடியும். முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலேயே பலர் அடையாள அட்டை இல்லாது உள்ளனர். யாழ். மாவட்டத்தில் முதற்கட்ட மாக எதிர்வரும் வாரம் சாவ கச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 4 இடங்களில் நட மாடும் சேவை நடத்தப்பட உள்ளது - என்றார். (வ-4)

# நில மீட்பு போராட்டத்துக்கு சர்வதேசம் உதவ வேண்டும்

## முல்லையில் அமெரிக்கக் குழுவினரிடம் வேண்டுகோள்

முல்லைத்தீவு, ஜூலை 13

எமது நிலங்களை மீட்பதற்கு நாம் நடத்துகின்ற போராட்டங்களுக்கு சர்வதேசம் உதவ முன்வர வேண்டும்.

இவ்வாறு முல்லைத்தீவுக்கு வருகை தந்த அமெரிக்கத் தூதரகத்தைச் சேர்ந்த குழுவினரிடம் முல்லைத்தீவு பிரஜைகள் குழுவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



முல்லைத்தீவு மாவட்டத்தின் சமகால நிலைமைகளை பரிசீலனை செய்வதற்கென வருகை தந்த இலங்கைக்கான அமெரிக்க தூதரகத்தின் அரசியல் விவ காரங்களுக்கான அதிகாரி மைக்கல் ஏர்வின் தலைமையிலான குழுவினரும், முல்லைத்தீவு மாவட்ட பிரஜைகள் குழுவின் காப்பாளர்களான மனித உரிமை ஆர்வலர் சண் மாஸ்டர், அருள்பணி ஜோய் பெர்ணான்டோ, தலைவர் ரவிகரன் உள்ளிட்ட பிரஜைகள் குழுவினரும் முல்லைத்தீவு நகரில் ஒழுங்குசெய்யப்பட்ட பிரத்தியேக இடமொன்றில் நேற்று முன்தினம் வியாழக் கிழமை காலை சந்தித்து உரையாடியுள்ளனர்.

இந்தச் சந்திப்பின்போது போருக்குப் பின்னரான முல் லைத்தீவு மாவட்டத்தின் நிலைமைகள் தொடர்பாக பிரஜைகள் குழுவினர் புள்ளி விவரங்களுடன் அமெரிக்க குழுவினருக்கு விரிவாக எடுத்துக்கூறினர் .

பரம்பரை பரம்பரையாகப் பேணப்பட்டு வந்த எமது பூர்வீக நிலங்கள் அபகரிக்கப்பட்டு வருகின்றன. வாரி வாரி அள்ளித்தந்த எமது கடல் வளம் தென்னிலங்கையிலிருந்து கொண்டு வந்து இறக்கி விடப்பட்டுள்ள மீனவர்களால் சுரண்டப்படுகின்றது.

தடைசெய்யப்பட்டுள்ள மீன்பிடி உத்திகள் மற்றும் உபகரணங்களைக்கொண்டு கடல் தொழிலில் அவர்கள் ஈடு படுவதை யாரும் கண்டு கொள்வதாகத்தெரிய வில்லை. தடுப்பதற்கும் உரிய அதிகாரிகள் நடவடிக்கைகள் எதனையும் எடுப்பதுமில்லை.

எமது நிலம் அபகரிக்கப்படுவதையும், எமது கடல் வளம் ஆக்கிரமிக்கப்படுவதையும் எம்மால் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. இவற்றுக்கு எதிராக மக்களை ஒன்று திரட்டி ஜன நாயக வழியிலான போராட்டங்களைத் தொடர்ச்சியாக முல்லைத்தீவு மாவட்ட பிரஜைகள் குழுவினராகிய நாம் மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளோம்.

சிறுபான்மைச் சமூகத்தின் மீது கட்டவிழ்த்து விடப்படும் ஒடுக்குமுறைகள், வன் முறைகளுக்கு எதிராக பிரஜைகள் குழு உளத்தூய்மையுடனும், அர்ப்பணிப்புடனும் பணி புரியத் தயாராக உள்ளது.

எனவே பிரஜைகள் குழுவின் உருவாக்கத்துக்குக் காரண மானவர்களுக்கும், குழுவில் அங்கத்துவம் வகிக்கும் நபர்களின் சுதந்திரமான செயற்பாடுகளுக்கும் விடுக்கப்ப டும் அச்சுறுத்தல்களை பிற சர்வதேச நாடுகளுடன் இணைந்து தடுப்பதோடு, எங்களின் பாதுகாப்புக்கு முழுமையான உத்தர வாதத்தை வழங்க அமெரிக்கா முன்வர வேண்டும்.

இதேவேளை தமிழ் மக்கள் காலம் காலமாக வாழ்ந்து வந்த தமது பூர்வீக நில புலங்களிலிருந்து பலவந்த மாக வெளியேற்றப்பட்டு இனங்களுக்கிடையில் முரண்பாட்டைத் தோற்றுவிக்கும் முறையற்ற குடியேற்றங்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

பெரியளவில் காடுகள் சட்ட விரோதமாக அழிக்கப்பட்டு உடனடியாகவே காணிகளுக்கான உறுதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டு இந்த குடியேற்றங்களும், நில ஒதுக்கீடுகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அரசின் இத்தகைய பாகுபாடான குடியேற்ற கொள்கைகளால் தமிழர்கள் நாளாந்தம் பாதிக்கப்படுகின்றனர்.

தமிழர்கள் வாழும் பகுதிகளில் போருக்குப் பின்னர் அரச உயர் பதவிகளில் பெரும்பான்மையினத்தவர்களை நிய மித்து, அரசு தனது கொள்கைகளை தமிழர்கள் மீது திணிப்பதோடு, தமிழ் மக்களின் இருப்பை குலைக்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளது.

இது மொழி உள்ளிட்ட பல் வேறு பிரச்சினைகளை தோற்றுவித்துள்ளதோடு, தமிழ் இனத்தின் தனித்துவமான கலை, கலாசார பண்பியல்புகளைச் சிதைக்கும் செயலாகவும், இன ஐக்கியத்துக்கும், நல்லி ணக்கத்துக்கும் ஊறுவிளை விக்கும் செயலாகவும் உள்ளது.

வெலிஓயா பிரதேச செயலராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த பெரும்பான்மையினத்தைச் சேர்ந்தவரை கரைத் துறைப்பற்று பிரதேச செயலராக நியமித்துள்ளமையை தமிழர்களின் எஞ்சியுள்ள நிலங்களையும் துண்டாடும் நில அபகரிப்பின் ஒரு நிகழ்ச்சி நிரலாகவே பார்க்க வேண்டியுள்ளது.

எமது நிலம் எமக்கு வேண்டும். எமது நிலங்களை மீட்க நாம் நடத்துகின்ற போராட்டங்களின் தன்மையை அறிந்து, எமது வலியை உணர்ந்து சர்வதேச நாடுகள் உதவ முன்வர வேண்டுமென பிர ஜைகள் குழுவினர் மைக்கல் ஏர்வின் குழுவினரிடம் வலியுறுத்தியுள்ளனர். (க-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலராக 11.04.1970 — மாலையாக 14.06.2013



### அமரர் பேரம்பலம் கிருஷ்ணகுமார்

கடந்த 14.06.2013 வெள்ளிக்கிழமை இறைபதமடைந்த எம் அன்புத் தெய்வம் அமரர் பேரம்பலம் கிருஷ்ணகுமார் அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை 14.07.2013) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் அன்றைய தினம் அன்னாரது இல்லத்தில் இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சந்தை வீதி, உடுப்பிட்டி. (C/10338) (10.16,,14) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### இராமலிங்கம் குமாரசாமி (சண்முகநாதன்)

(ஓய்வுபெற்ற அரசாங்க உத்தியோகத்தர்)



கோண்டாவில் மேற்கு, சைவப் பாடசாலை ஒழுங்கையை பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தை, Fussel's Lane ஐ நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட இராமலிங்கம் குமாரசாமி (சண்முகநாதன்) நேற்று (12.07.2013) வெள்ளிக்கிழமை கொழும்பில் இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம்-இராசம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற கனகசபை நாகரத்தினம், கணேஷன் (மலேசியா), காலஞ்சென்ற முருகையா, நடராசா (கோண்டாவில்), விமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற கனகசபை, ஞானரட்ணம் (மலேசியா), சரஸ்வதி, பகீரதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (13.07.2013) சனிக்கிழமை மு.ப. 10 மணி தொடக்கம் 6 மணிவரை கல்கிசை மகிந்த மலர்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நாளை (14.07.2013) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.00 மணியளவில் ஈமக்கிரியைகள் நடைபெற்று, பி.ப. 4.30 மணியளவில் தகனக் கிரியைக்காக கல்கிசை பொது மயா னத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

86/1-½, Fussel's Lane,
Wellawatte,
Colombo-06.
(சி/10339) (10.16,14)

தகவல்: இ.நடராசா (சகோதரன், கோண்டாவில்)
கு. விமலாதேவி (சகோதரி)
கு. ஜீவகுமார் (மருமகன்)
011 2365746/ 0777583199

## வல்லிபுரம் கந்தசாமி

### (மில்மாமா)



நாவலர் மடம், நவிண்டில் கரவெட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் கந்தசாமி 10.07.2013 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்- செல்லம்மா தம்பதியரின் கனிஸ்ட புதல்வரும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் மற்றும் இலட்சிமிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், கணேசலிங்கம், காலஞ்சென்ற பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரனும், அருள்மோகன், துஷ்யந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், முகுந்தன், கலைவாணி ஆகியோரின் அன்பு மாமனாரும், இராஜேஸ்வரி, சிறிதரன், பரஞ்சோதி ஆகியோரின் மைத்துனரும், அகிஷன், அனிக்ஷன், ஜகஜித், அக்ஷயன், ஆதேஷ் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.07.2013) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக எள்ளங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவலர் மடம்,
நவிண்டில், கரவெட்டி.
021 226 2427
(37641) (10.16,14)
தகவல்: குடும்பத்தினர்.

## உயர்தர மாணவருக்கு தமிழ்ப் பாட கருத்தரங்கு

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தால் பூநகரி கல்விக் கோட்டப் பாடசாலைகளில் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான தமிழ்ப் பாட வழிகாட்டல் கருத்தரங்கு நேற்றுமுன்தினம் பூநகரி மகா வித்தியாலயத்தில் நடத்தப்பட்டது.

லயன் க.வீரசுதாகரின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட கருத்தரங்கில் பூநகரி ம.வி, அக்கராயன்குளம் ம.வி, கணுக்காய்தீவு வித்தியாலயம், வேரவில் இந்து ம.வி, முழங்காவில் ம.வி, ஜெயபுரம் ம.வி ஆகிய பாடசாலை மாணவர்கள் கலந்து கொண்டதாக கழகத் தலைவர் லயன் பி.தளிர்ராஜ் தெரிவித்தார். (வ-9)

## வன்னியில் 4 பாடசாலைகள் தரமுயர்த்தப்பட்டன

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் 4 பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

இதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கிளிநொச்சி மத்திய கல்லூரியும் முழங்காவில் மகா வித்தியாலயமும் தேசிய பாடசாலைகளாக தரமுயர்த் தப்பட்டுள்ளன. முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியும் மல்லாவி மத்திய கல்லூரியும் தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மத்திய கல்லூரி போர் காலத்தில் பெரும் அழிவுகளை எதிர்கொண்டு மீள் குடியேற்றத்தின் பின் பௌதிக வள நெருக்கடியுடன் இயங்கி வருகிறது. (வ-18)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை செல்வி சியாமளா கனகரட்ணம் அவர்களின் அன்புத் தாய் *திருமதி*

### *புவனேஸ்வரி கனகரட்ணம்* அவர்கள்

நேற்றுமுன்தினம் (11.07.2013) வியாழக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார். அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிக் கழகம்,
வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

செல்வன்

### அல்ட்ரிக் சௌஜன்யன்



வவுனியாவைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும். ஜோர்தானை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட அல்ட்ரிக் சௌஜன்யன் 10.07.2013 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார். கிறிஸ்ரிரூபன் நிமலினி தம்பதியரின் அன்பு மகனும். றொமோல்ட் சைதன்யன். பியோ சின்மயன் ஆகியோரின் அன்புச் சகோதரனும். தம்பியையா மனோன்மணி தம்பதியரினதும். காலஞ் சென்றவர்களான அகஸ்ரின் திரேசம்மா தம்பதியரினதும். அன்புப் பேரனும். குமணன் - பத்மபிரியா (கனடா). மேரிஎலிசபெத் (ஜெயராணி) - சூசைநாதன். குயின்மேரி - குலேந்திரறாஜா (பிரான்ஸ்). காலஞ்சென்ற சுதர்ஜினி ஆகியோரின் அன்பு மருமகனும். எழிலினி - சஞ்சீவன். ஞானரூபன் (ஜோஜ்) - அஞ்சலா (பிரான்ஸ்). காலஞ்சென்ற வசந்தரூபன் ஆகியோரின் அன்பு பெறாமகனும். யாமளன். றொசாந். லாவண்ஜா. துசான். திரேசிகன். வினி. ஜஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும். அனந்தினி. மலரவன். ஓவியா ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல. 213. சிவசுந்தரம் வீதி. வட்டக்கச்சி. கிளிநொச்சி இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு. **15.07.2013** திங்கட்கிழமை காலை **09.30** மணி அளவில் வட்டக்கச்சி புனித சூசையப்பர் தேவாலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு மாயவனூர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
தம்பியையா : +94 718474749
+94 718455618
சூசைநாதன் ஜெயராணி: +94777402085

தகவல்
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்




### பொன்னையா பரராசசேகரம்

(பட்டய நில அளவையாளர்)

வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும். கொழும்பு 06 ஐ வதிவிடமாகவும் கொண்ட திரு. பொன்னையா பரராசசேகரம் (பட்டய நில அளவையாளர்) 12.07.2013 அன்று கொழும்பில் காலமானார். இவர் வேலணை கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற பொன்னையா - நாகரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும் பம்பலப்பிட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற கனகரத்தினம் - மீனாம்பாள் தம்பதிகளின் மருமகனும். லோகா யோகேஸ்வரியின் (Hayleys Business Solutions International (Pvt) Ltd.) அன்புக்கணவரும். கோபிராமின் (பழைய மாணவர். சென்தோமஸ் கல்லூரி. கல்கிசை) அன்புத்தந்தையுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்: திருமதி லோகா யோகேஸ்வரி பரராசசேகரம்
Dr. கலாநிதிதேவி (மாநகரசபை முன்னாள் பிரதம சித்த வைத்திய அதிகாரி, யாழ்ப்பாணம்) இ.சிவனடியார் (அராலி, வேலணை)
10/22 B, பாமன் கடை வீதி, கொழும்பு 06. T.P: 011-2500178

## மரண அறிவித்தல்



### வஸ்தியாம்பிள்ளை சிறில்

மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும், முணாமலை வீதி, மானிப்பாயை தற்போதய வசிப்பிடமாகவும் கொண்ட வஸ்தியாம்பிள்ளை சிறில் நேற்று முன்தினம் (11.07. 2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் பதுவைப்பவளத்தின் அன்புக் கணவரும், கொலஸ்ரிகா (பிரதேச செயலகம் - வேலணை), லீனஸ் (அண்ணா விவசாயப் பண்ணை -மருதனார் மடம்), எமல்டா (கூட்டுறவுத் திணைக்களம்-யாழ்ப்பாணம்), Dr. கிளமென்ரீனா (வலி. தெற்கு பிரதேச சபை, உப அலுவலகம் - உடுவில்), யேசுரட்ணம் (ஆசிரியர், மு/ முள்ளிவாய்க்கால் மேற்கு, க.உ.வி), பிலிப் (வட மாகாண திட்டமிடல் அலுவலகம்-கல்வியங்காடு), நெல்சன் (பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகம்- திருநெல்வேலி) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருச்செல்வம் (ஆஸ்திரேலியா), அனற்லோஜினி, ஸ்ரீகுமரன், சார்லி விஜினாட் (சவுதி), சுவர்ணா (ஆசிரியை) ஆகியோரின் அன்பு மாமனும், கார்லா, போல்றஜிந்தன், மரின் றயிந்தினி, பார்மினா, தேனுசன், மதுசன் ஆகியோரின் பேரனும், மதுரநாயகம் (கனடா), மேரி அற்புதம் ஆகியோரின் சகோதரனும், பற்றிமா, பிலேமினா, சின்னத்துரை, செல்வராணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் திருவுடல் மானிப்பாய் அன்னாள் ஆலயத்தில் இன்று (13.07.2013) சனிக்கிழமை பி.ப 2.00 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, காக்கை தீவு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முணாமலை வீதி, மானிப்பாய்.
077 2395720, 0777361979. (30867) (10.14)
தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்பள்ளி வலய மட்ட விளையாட்டுப் போட்டி

தென்மராட்சி, ஜூலை 13
தென்மராட்சி கல்வி வலய முன்பள்ளிகளின் வலய மட்ட விளையாட்டுப்போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும்.

தென்மராட்சி கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.பாக்கியராசா தலைமையில் நடைபெறும் போட்டிகளுக்கு முதன்மை விருந்தின ராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் செல்வி ர.நவரத்தினமும், கௌரவ விருந்தினராக தேசிய சேமிப்பு வங்கியின் சாவகச்சேரிக் கிளை முகாமையாளர் சீ. என்.ஜெனநாதனும் கலந்துகொள்வர். (வ-9)

## பசுமாட்டை வெட்டியவருக்கு தண்டம்

வலி.வடக்கு, ஜூலை 13
சட்டவிரோதமான முறையில் பசு மாட்டை இறைச்சிக்காக வெட்டிய நபருக்கு மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தால் ஆறாயிரம் ரூபா தண்டமாக விதிக்கப்பட்டதுடன் மனித பாவனைக்கு உதவாத இறைச்சியை அழிக்குமாறும் கட்டளையிடப்பட்டுள்ளது.

ஏழாலை வடக்கு, கண்ணகை அம்மன் கோயிலடியில் இறைச்சிக்காக பசுமாடு வெட்டப்பட்டு பங்கு போடப்படுவதாக புதன் கிழமை இரவு சுன்னாகம் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது.


உடனடியாக சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி துஸ்மிந்த தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த இடத்துக்கு சென்ற வேளையில் ஒருவர் பசு மாட்டை வெட்டி இறைச்சிக்காக பங்கு போட்ட நிலையில் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரைக் கைது செய்து இறைச்சியையும் கைப்பற்றிய பொலிஸார் மல்லாகம் மாவட்ட நீதி மன்றத்தில் சந்தேக நபரை நேற்று முன்தினம் வியாழக்கிழமை முன்னிலைப்படுத்திய போது அந்த நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதைத் தொடர்ந்து நீதிமன்றத்தினால் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (வ-86)

### மாணவர்களுக்கு பால், முட்டை வழங்க

# அதிபர்கள் அலைந்து திரிகின்ற நிலைமை

### யாழ்.மாவட்டத்தின் களநிலைமையால் சிரமங்கள்



அச்சுவேலி, ஜூலை 13
யாழ்.மாவட்டபாடசாலை மாணவர்களுக்கு பால் மற்றும் முட்டை வழங்குவதற்கு அதிபர்கள் அலைந்து திரிய வேண்டியுள்ளது. உரிய முறையில் அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை உள்ளது.

மாணவர்களுக்கு போஷாக்கு உணவு வழங்கும் திட்டத்தின் கீழ் பாடசாலை நடைபெறும் நாள்களில் ஒவ்வொரு மாணவருக்கும் 150 மில்லி தூய பசுப்பாலும் வாரத்தில் இரண்டு முட்டைகளும் வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த விடயத்தில் யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்கள் ''கைக்கு எட்டியது வாய்க்கு கிட்டாத நிலையில்'' எதிர்பார்ப்போடு காத்திருக்கின்றனர்.

பெரும்பாலான பாடசாலைகளில் மேற்படி செயற்பாட்டை நடைமுறைப்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது.

யாழ்.மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் பாலின் முழு அளவையும் மாணவர்களுக்கு வழங்கினாலும் பற்றாக்குறை நிலவலாம். ஆனால் யாழ்.மாவட்டத்தில் உற்பத்தியாகும் பாலில் கணிசமான அளவு நெஸ்லே நிறுவனத்தினால் கொள்வனவு செய்யப்பட்டு தினசரி பால்மா தயாரிப்புக்காக கொண்டு செல்லப்படுகின்றது.

அதே சமயம் பாலர் முன்பள்ளிக்கு, முன்பள்ளி நடைபெறும் நாள்களில் ஒரு மாணவருக்கு 150 மில்லி என்ற விகிதத்தில் பால் வழங்கப்படுகின்றது. இந்த நிலையில் உள்ளூரில் பாடசாலைகளின் தேவைக்குரிய பாலை பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு பால் வழங்கும் விடயத்தில் சுற்றறிக்கை மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ள போதிலும் பொருத்தமான ஏற்பாடுகளை மாவட்ட ரீதியில் ஒருங்கிணைந்த நிலையில் மேற்கொள்வதற்கு இது வரை எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை. இந்த விடயத்தில் வடக்கு மாகாண நிர்வாகமோ யாழ்.மாவட்ட நிர்வாகமோ பொருத்தமான நடைமுறை எதனையும் மேற்கொள்ளவில்லை என பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

முட்டை ஒன்றுக்கும் கல்வித் திணைக்களம் வழங்கும் கொடுப்பனவுக்கும், நடைமுறை சந்தை விலைக்கும் இடையே பெரும் இடைவெளி இருப்பதால் முட்டையை உரிய முறையில் கொள்வனவு செய்ய முடியாத நிலை இருப்பதாக அதிபர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

யாழ்.மாவட்டத்தின் களநிலைச் சூழ்நிலைக்கு அமைவாக பால், முட்டை என்பவற்றை கொள்வனவு செய்வதற்கு பொருத்தமான விசேட ஏற்பாடு செய்யப்படா விட்டால் யாழ்.மாவட்ட மாணவர்களுக்கான பால், முட்டை விநியோகம் கேள்விக்குறியாகவே இருக்கும் என விசனம் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-11)

## மும்மொழிக் கொள்கை நடைமுறை துரிதகதியில்

### வலிகாமம் கல்வி வலயத்தில்




வலி.வடக்கு, ஜூலை 13
வலிகாமம் கல்வி வலயத்தில் மும்மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் துரிதமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திரராசா தெரிவித்தார்.

இதன் ஒரு கட்டமாக வலிகாமம் கல்வி வலயத்தில் மும்மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்த தனியான அலுவலகம் ஒன்று திறக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய வலயப் பிரிவுகளுக்கும் மும்மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் வகையில் மும்மொழிகளிலும் பெயர் பலகைகளும் இடப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (வ-86)

## தொடர்ந்து தாக்கப்படும் ஊடகப் பணியாளர்கள்

### கபே கண்டனம்

யாழ்ப்பாணம்,ஜூலை 13
வடக்கில் ஊடகங்கள் மற்றும் ஊடகப் பணியாளர்கள் மீதான தாக்குதல் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். முன்னரும் ஊடகங்கள் தாக்கப்படும் போது நாம் குரலெழுப்பியுள்ளோம் என்று கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்தார். 'கபே'யின் யாழ்.அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:-
வடக்கில் பத்திரிகை நிறுவனங்கள், பணியாளர்கள் தாக்கப்படும்போது நாம் கொழும்பில் குரலெழுப்பினோம். பத்திரிகைச் சுதந்திரத்தைப் பறிப்பதற்கு எதிராகவும் நாம் குரலெழுப்பினோம். தேர்தல் காலத்தில் பத்திரிகைகள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. அது பாதுகாக்கப்பட வேண்டும்-என்றார். (வ-4)

## மதுவுக்கு எதிரான இளைஞர் அணியால் பிரதான வீதிகளில் சுவரொட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 13
வடமாகாண சபை தேர்தலில் சிறந்த வேட்பாளர்களை வாக்காளர்கள் தெரிவு செய்யும் நோக்குடன் மதுசாரத்துக்கு எதிரான தமிழ் இளைஞர் அணி நகரின் பிரதான வீதிகளிலும் கிராமப் புறங்களிலும் சுவரொட்டிகளை ஒட்டுவதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளது.

வடமாகாணத்தில், குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் மதுபாவனையாளர்கள் அதிகரித்து வரும் சூழலில் எதிர்காலத்தில் சமூக ரீதியாக பெரிய விளைவுகளை எதிர்கொள்ள வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் மதுபாவனையாளர்களைக் கட்டுப்படுத்துவதற்கான தலைமைத்துவம் தேவைப்படுவதால் எதிர்வரும் வடமாகாண சபைத் தேர்தலில் வாக்காளர்கள் இதனை முன்னெடுக்கக் கூடிய வேட்பாளர்களை தெரிவு செய்ய வேண்டும் என்பதே இதன் நோக்காக உள்ளது.

தமிழ் மக்களுக்கு மதுசாரப் பாவனையை புகட்டும் முயற்சிகளைத் தடுக்கும் தலைவர்களே எமக்கு வேண்டும். அவர்களுக்கே எமது வாக்குகள் எனும் வாசகங்கள் அடங்கிய சுவரொட்டிகளை மதுசாரத்துக்கு எதிரான தமிழ் இளைஞர் அணி ஒட்டி வருகிறது.

இதனூடாக வாக்காளர்கள் விழிப்படைந்து சிறந்த வேட்பாளர்களைத் தெரிவு செய்ய வேண்டும் என்பதே இதன் நோக்கமாகவுள்ளது. (வ-14)




# ஊடகவியலாளர் மீதான தாக்குதலுக்கு உரிய நடவடிக்கை அவசியம்

### ஜனநாயக மக்கள் முன்னணி கோரிக்கை

'உதயன்' பத்திரிகை அலுவலகச் செய்தியாளர் மீதான தாக்குதல் காட்டுமிராண்டித்தனமானது. இத்தகைய தாக்குதல் மீண்டும் மீண்டும் நடைபெற்றுவருகின்றது.

தற்சமயம் வடமாகாணம் தேர்தலை நோக்கியுள்ள வேளையில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவத்தை உலகநாடுகள் அக்கறையுடன் கவனிக்க வேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணியின் ஊடகச் செயலாளரும் கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான சி. பாஸ்கரா விடுத்துள்ள கண் டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

போருக்கு பின்னரான காலத்தில் அமைதி ஏற்படுகிறது என அரசு கூறிக் கொண்டிருக்கிறது. ஆனால் மக்கள் அன்றாடம் துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். மீள்குடியேற்றம் இன்றி அகதி வாழ்க்கை வாழும் மக்களை அரசு கண்டு கொள்வதே இல்லை. இவ்வேளையில் படைத்தரப்பு மயிலிட்டி வாழ் மக்களை தமது சொந்த ஊர்க் கோயிலுக்கு செல்ல அனுமதி வழங்கியிருந்தது.

மக்கள் சென்றபோது அவர்களை செல்லவிடாது படைத்தரப்பு தடுத்தமை உலகறிந்த விடயம். அந்தச் செய்தி வந்த இரு தினங்களில் இத்தாக்குதல் நடைபெற்றுள்ளமை குறித்து பல கோணங்களில் சிந்திக்க வேண்டியுள்ளது. உதயன் செய்தியாளர் தனது அலுவலக வேலையை முடித்து வீடு சென்ற போது தாக்குதல் நடைபெற்றுள்ளது.

தாக்குதல் நடத்தியவர்களை உடனடியாக கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை வழங்க வேண்டும்.

வடமாகாணசபைத் தேர்தல் இடம்பெறவுள்ள இவ் வேளையில் பத்திரிகைகள் உண்மையான செய்திகளை வெளியிடுவதைத் தடுப்பதற்கான ஒரு செயலாக இந்தச் சம்பவம் உள்ளது. மேலும் இது பத்திரிகைகளை முடக்கி தமிழ் மக்களின் ஜனநாயக தீர்ப்புக்கு சவால் விடுவதற்கான ஒரு முன்னோட்டமா? என்று சிந்திக்க வேண்டியிருக்கிறது.

அடாவடித்தனமான இந்தத் தாக்குதல் குறித்து உலகநாடுகள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மீண்டும் இத்தகைய தாக்குதல் நடைபெறாமல் பத்திரிகைகள் சுதந்திரமாக இயங்க உலகநாடுகள் ஆவன செய்ய வேண்டும் என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நள்ளிரவில் தொடங்கியது கூடங்குளத்தில் மின் உற்பத்தி

சென்னை, ஜூலை 13
கூடங்குளம் அணுமின் நிலையத்தில் மின் உற்பத்திக்கான பணிகள் நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் ஆரம்பமாகியுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.
கூடங்குளம் அணுமின் நிலையத்தில் ஒவ்வொன்றும் 1,000 மெகாவோட் மின் உற்பத்தித் திறன் கொண்ட இரண்டு மின்உலைகள் அமைக்கப்பட்டுள்ளன.
அதன் முதலாவது மின் உலையில் உற்பத்திகளை ஆரம்பிப்பதற்கான அனுமதியை, இந்திய அணுசக்தி ஒழுங்குமுறை ஆணையம் நேற்றுமுன்தினம் வழங்கியது. அதையடுத்து நள்ளிரவு தொடங்கம் செறிவூட்டப்பட்ட யுரோனியத்தைக் கொண்டு உற்பத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
உற்பத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டபோதும், மின் சாரத்தைப் பயன்பாட்டுக்குப் பெற இன்னும் சிலநாள்கள் ஆகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# உடையுமா ஆந்திரா?

## தெலுங்கானா விவகாரம் குறித்து காங்கிரஸ் முக்கிய கலந்துரையாடல்



புதுடில்லி, ஜூலை 13
தெலுங்கானா என்ற பெயரில் புதிய மாநிலத்தை உருவாக்குவதற்காக ஆந்திராவை மூன்று மாநிலங்களாகப் பிரிக்க காங்கிரஸ் முடிவு செய்துள்ளது என்று தெரியவருகின்றது. இதற்கான முடிவு அக்கட்சியின் உயர்மட்டக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட உள்ளது. ஆந்திரா, தெலுங்கானா மாநிலங்களுடன், ராயலசீமாவும் தனி மாநிலமாக உருவாகலாம் எனவும் எதிர்பார்க்கப் படுகிறது.
அண்மைக் காலமாக தெலுங்கானா மாநில போராட்டம் மீண்டும் வலுத்துள்ளதால் ஆந்திராவை, ஆந்திரா, தெலுங்கானா, ராயலசீமா என்று மூன்றாகப் பிரித்து பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்று காங்கிரஸ் தலைமையிலான மத்தியில் ஆளும் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு முடிவு செய்துள்ளது.
அரசியல் சட்டத்தை திருத்தினால் மட்டுமே, இது போன்ற மாநில பிரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்பதால், மிகவும் கவனமாக இந்த விடயத்தை இந்திய மத்திய அரசு கையாளுகிறது.
தெலுங்கானா மாநிலம் ஏற்படுத்துவது தொடர்பாக காங்கிரஸ் உயர்மட்டக் குழு கூடி முக்கிய முடிவு எடுக்க உள்ளதாக என அக்கட்சியின் பொதுச் செயலர்களில் ஒருவரான திக்விஜய் சிங் தெரிவித்துள்ளார். (ற)

## நீதிமன்ற தீர்ப்புக்கு பெரும் வரவேற்பு



புதுடில்லி, ஜூலை 13
சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் குற்றவியல் தண்டனை பெற்றால் அவர்கள் உடனே பதவி நீக்கம் செய்யப்படுவார்கள்என்ற உச்சநீதி மன்றத்தின் தீர்ப்புக்கு இந்திய தலைமை தேர்தல்ஆணையர்வி.எஸ். சம்பத் வரவேற்புத் தெரிவித்துள்ளார்.
நீண்ட நாள்களாக நிலுவையில் இருந்த இந்த விவகாரத்தில் நல்ல தீர்ப்பு அளிக்கப்படுள்ளது என்று கூறியுள்ள சம்பத், இது கண்டிப்பாக இந்திய அரசியலைத் தூய்மைப்படுத்தும் நடவடிக்கையாக அமையும் என்று தெரிவித்துள்ளார். (ற)

# மரண அறிவித்தல்கள்

## தேவசகாயம் யேசுதாசன்



(பாக்கியதுரை யேசுரெட்ணம்)

பாஷையூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தேவசகாயம் யேசுதாசன் புதன்கிழமை (10.07.2013) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாக்கியதுரை - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பேதுறுப்பிள்ளை- அன்னம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும் பிரான்ஸிஸ்காவின் பாசமிகு கணவரும் மியூறா (பிரான்ஸ்),மிருளின், மிலன், மிதுன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் றொபின் (பிரான்ஸ்), சுதர்சினி ஆகியோரின் பாசமிகு மாமனும் ஜொவ்றீனா, றுடிக், திவேறா, ஷெரபோவா, ரபேல் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (13.07.2013) சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு, பாஷையூர் புனித அந்தோனியார் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

35/4, 5ஆம் குறுக்குத் தெரு,
பாஷையூர், யாழ்ப்பாணம்.
(30813)

## திருமதி அன்னபூரணம் கந்தையா



கோண்டாவில் கிழக்கு வைரவர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட அன்னபூரணம் கந்தையா அவர்கள் 11.07.2013 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு- சின்னத்தங்கம் தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை கந்தையாவின் அன்பு மனைவியும், சிறினிவாசகம், யோகேஸ்வரன் காலஞ்சென்ற விமலச்சந்திரன் மற்றும் பாலச் சந்திரன், ஜெயந்தி, ஸ்ரீரஞ்சன் ஆகியோரின் அன்புத் தாயாரும் பரமேஸ்வரி, அருந்தவச் செல்வி, சுலோசனா, தாமோதரம்பிள்ளை, சாமினி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான திருமதி கந்தையா, குஞ்சம்மா, கனகசபை, செல்லத்துரை (மலேசியா), சின்னத்துரை, சபாபதி ஆகியோரின் சகோதரியும், சுஜித்தா, பிரஜயன், சஜீவன், சஜானா, சஜய், காலஞ்சென்ற அஜித் மற்றும் டினோஜா, டனுசியா, கஜன், யதார்த்தன், கவாஸ்கர், தர்மினா, ஷாலினா, டினுஷா, நிரூஜன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், விநாயக் இன் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(14.07.2013) ஞாயிற்றுக் கிழமை மு.ப 10 மணிக்கு கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கல்கிசை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ.தாமோதரம்பிள்ளை
(மருமகன்).

58-2/10, 37 ஆவது ஒழுங்கை,
வெள்ளவத்தை.011 236 1864
(30807)
(3.6.11)

# உத்தர்காண்ட் உயிரிழப்புகள் 11 ஆயிரத்துக்கும் அதிகம்

பட்னா, ஜூலை 13
உத்தர்காண்ட் மாநிலத்தில் இடம்பெற்ற மழை மற்றும் வெள்ளப் பெருக்குக் காரணமாக 11 ஆயிரத்து 600க்கும் மேற்பட்டோர் காணாமற் போயுள்ளனர் என்று தற்போது தகவல் வெளியாகியுள்ளது.
தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் விடுத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
''உத்தர்காண்ட் மாநில பேரழிவில் இது வரை ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். ஆயிரக்கணக்கானோர் தங்கள் வீடுகளையும் உட்மைகளையும் இழந்துள்ளனர். தன்னார்வ தொண்டு நிறுவனம் ஒன்று நடத்திய கணக்கெடுப்பின் படி 11 ஆயிரத்து 600 பேரைக் காணவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. எனினும் அவர்களது அறிக்கையை அப்படியே ஏற்றுக் கொள்ளவும் முடியாதுள்ளது. அதேவேளை அதனைப் புறக்கணிக்கவும் முடியாது.
உயிரிழப்புக்ள் குறித்து அரச அதிகாரிகள் கணக்கெடுத்து வருகின்றனர். அதன்பின்னரே உறுதியான விவரங்களை வெளியிட முடியும்''- என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## ராகுல் பிரதமர் இல்லை

புதுடில்லி, ஜூலை 13
எதிர்வரும் தேர்தலில் காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுலை பிரதமர் வேட்பாளராக காங்கிரஸ் அறிவிக்காது என அக்கட்சியின் பொதுச் செயலாளர் திக் விஜய் சிங் தெரிவித்துள்ளார்.
பிரதமர் தேர்தலில் குஜராத் முதல்வர் நரேந்திர மோடிக்கு எதிராக ராகுல் களமிறக்கப்பட உள்ளதாக எழுந்த கருத்தையும் அவர் திட்டவட்டமாக மறுத்துள்ளார்.
மன்மோகன் சிங்கே மீண்டும் பிரதமர் பதவிக்கு தேர்வு செய்யப்படுவார் என்று திக் விஜய் சிங் தெரிவித்துள்ளார். (ற)

# மரண அறிவித்தல்

## நாகலிங்கம் சுப்பிரமணியம்



(ஓய்வுபெற்ற இ.போ.ச நடத்துநர்)

அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும், மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சுப்பிரமணியம் 09.07.2013 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்- தெய்வானை தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா-மதியாபரணம் தம்பதியரின் அன்பு மருமகனும், புஸ்பகாந்தியின் பாசமிகு கணவரும், சாரங் கன் (ஆசிரிய ஆலோசகர்), ஜெயரங்கன் (கனடா), சிறீரங்கன் (கிராமசேவையாளர்), புஸ்பரங்கன் (ஆசிரியர்), காந்திமதி ஆகியோரின் அன்புத் தந்தையும், நளினி (ஆசிரியை), இந்திரா (கனடா), நளினா, ஜெகன் (SDA, பிரதேச, செயலகம், தெல்லிப்பழை) ஆகியோரின் பாசமிகு மாமனும், கபினேஷ், லஜன், யதுஷன், அபிஷன், டினேசன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான புண்ணியமூர்த்தி, கந்தசாமி மற்றும் சிவபாக்கியம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பொன்னம்பலம், தில்லைநாதன், ஜெகநாதன், புஸ்பநாதன், சற்குணநாதன், மகேந்திரநாதன், ஜெயரூபகாந்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.07.2013) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10.30 மணியளவில் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள் ளவும்.

இல.30, சந்தை கிழக்கு ஒழுங்கை,
மானிப்பாய்.
T.P_ 0213210203

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி செல்லம்மா பிறைசூடி



கரவெட்டி மத்தி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பிறைசூடி செல்லம்மா 11.07.2013 காலமானார்.

அன்னார் பிறைசூடியின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னையா- பத்தினி தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான வீரகத்தி - பார்வதி தம்பதியரின் பாசமிகு மருமகளும் சரஸ்வதி, கந்தசாமி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் நந்தகுமார் (லண்டன்), பிறேமகுமார் (லண்டன்), கிருஷ்ணகுமார் (ஆசிரியர், பொலிகண்டி இந்து தமிழ்கலவன் பாடசாலை), மோகனகுமார் (கனடா), வாசுகி (ஆசிரியை, கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயம்), சாந்தகுமார் (கனடா), சிறீதா (ஆசிரியை, யாக்கருக்கு விநாயகர் வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயும் கனகாம்பாள் (லண்டன்), வானதி (லண்டன்), மணிமேகலை, குகா (கனடா), ஸ்கந்தபாபு (நிறைவேற்று அதிகாரி HNB, வடபிராந்தியம்), காயத்திரி (கனடா), இலக்குணராஜா (தொழில்நுட்ப உத்தியோகத்தர், பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம், வவுனியா) ஆகியோரின் பாசமிகு மாமியும் நித்தியா, பிருந்தன், செந்தூரன், கீர்த்தனா, சாதனா, யதுஷா, சானுகா, ரமநீதன், கார்த்தீபன், வைஷ்னிகா, அபிநயன், அபிநயா, ஹரிப்பிரியா, ஹரிஷன், மோகனப்பிரியா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (14.07.2013) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று காலை 10 மணியளவில் அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வாரியத்தனை, கரவெட்டி மத்தி,
கரவெட்டி.
0774194235
(37640)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீனாவின் பொருளாதாரம் சரிகின்றது

பீஜிங், ஜூலை 13
உலகின் இரண்டாவது பெரிய பொருளாதாரத்தைக் கொண்டுள்ள சீனாவில் ஏற்றுமதியிலும், இறக்குமதியிலும் எதிர்பாராத வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. சீனப் பொருளாதாரம் பலவீனமடைவதைக் காண்பிக்கும் மேலதிக சமிக்ஞையாக இது கொள்ளப்படுகின்றது என்று பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.
இது குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள சீன சுங்கத்துறையின் பேச்சாளர் ஒருவர், ''வெளிநாட்டுத் தேவைகளில் ஏற்பட்டுள்ள நீடித்த குறைபாடு காரணமாக சீன வெளிநாட்டு வணிகம் மிகவும் மோசமான சவாலை எதிர்கொள்கின்றது'' என்று தெரிவித்துள்ளார்.
பொருளாதாரத் தரவுகள் குறித்த தகவல்கள் வெளியிப்படாமல் இருப்பதை தடுக்க, அரசு எடுத்த நடவடிக்கைகளும், இந்த வீழ்ச்சி பற்றிய தகவல் வெளிவரக் காரணம் என்றும் ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். இதற்கான ஏனைய காரணங்களில் தொழிலாளர் கூலி அதிகரிப்பு, அதிக எண்ணிக்கையிலான வணிகப் பிணக்குகள் ஆகியனவும் அடங்குகின்றன. செலவினத்தை குறைப்பதற்காக சீன மத்திய வங்கி எடுத்துள்ள நடவடிக்கைகள், இறக்குமதியை குறைக்க உதவியுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## ஸ்நோடன் விடயத்தில் அமெ. – சீனா முறுகல்

வொஷிங்டன், ஜூலை 13
அமெரிக்க சி.ஐ.ஏ. முன்னாள் அதிகாரி எட்வர்ட் ஸ்நோடன் விவகாரத்தில் சீனா நடந்து கொண்ட விதம் குறித்து அமெரிக்கா அதிருப்தி வெளியிட்டுள்ளது.
அமெரிக்க உளவுத் தகவல்களை அம்பலப்படுத்திய ஸ்நோடனை சீனா ஒப்படைத்திருக்க வேண்டுமென அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது.
இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள அமெரிக்க பிரதி ராஜாங்கச் செயலாளர் எட்வர்ட் போன்ஸ்,
''இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவிற்கு பங்கம் ஏற்படும் வகையில் சீனா நடவடிக்கை மேற்கொண்டுள்ளது'' என்று தெரிவித்துள்ளார்.
எனினும் ஹொங்கொங்கின் சட்டங்களுக்கு அமைவாகவே நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றும், அதில் எவ்வித பிழைகளும் கிடையாது எனவும் சீனா தெரிவித்துள்ளதுடன், எட்வேர்ட் ஸ்நோடன் ரஷ்யாவிற்கு செல்வதனை தடுக்க சட்டத்தில் இடமில்லை எனவும் குறிப்பிட்டுள்ளது. (ற)



### போர் நிறுத்தத்துக்குக் கோரிக்கை

ரம்ழான் மாதம் ஆரம்பமாகியுள்ளதை அடுத்து நோன்பு காலம் முடியும் வரை சிரியாவில் இடைக்காலப் போர் நிறுத்த ஒப்பந்தம் போட வேண்டும் என அந்நாட்டு எதிர்க்கட்சிகள், அரசிடம் வலியுறுத்தியுள்ளன. சிரியாவின் எதிர்க்கட்சித் தலைவரான அஹமத் ஜர்பா, துருக்கி நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சரை சந்தித்த போது, இந்தக் கோரிக்கையை வலியுறுத்தினார். இதனிடையே ஐக்கிய நாடுகள் அவையின் பொதுச் செயலாளர் பான் கீ மூன், இந்த ரம்ழான் மாதத்தில் அனைத்துக் கட்சிகளும் இணைந்து சிரிய விவகாரத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

# ரோந்துப் பணிகளில் மாற்றம் எதுவுமில்லை

## இந்தியாவிடம் சீனா திட்டவட்டம்

பீஜிங், ஜூலை 12
இந்தியாவின் எல்லைப் பகுதியில் மேற்கொள்ளப்படும் வழக்கமான ரோந்துப் பணிகளில் எந்தவித மாற்றத்தையும் மேற்கொள்ள முடியாது என்று சீன வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.
சீனாவுக்கும் இந்தியாவுக்கும் நீண்டகாலமாக நிலவி வரும் எல்லை தொடர்பான பிரச்சினை அண்மைக் காலமாக விஸ்வரூபம் எடுத்துள்ளது.
கடந்த ஏப்ரல் மாதம் ஜம்மு – காஷ்மீர் பகுதியில் சீன இராணுவத்தினர் ஊடுருவியதைத் தொடர்ந்து, இருநாடுகளுக்கும் இடையிலான எல்லைப் பிரச்சினை மீண்டும் கிளம்பியுள்ளது.
தற்போது சுமர் எனப்படும் இந்தியாவின் எல்லைப் பகுதியில் இந்திய இராணுவத்தினரால் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்புக் கமராக்களை, சீன இராணுத்தினர் எல்லை தாண்டி வந்து சேதப்படுத்தியுள்ளனர் என்று இந்தியத் தரப்பால் குற்றஞ்சாட்டப்படுகின்றது.
இதுகுறித்துக் கருத்து வெளியிட்டுள்ள சீன வெளியுறவு அமைச்சகத்தின் அதிகாரி ஹுவா, ''எல்லைப் பகுதிகளில் சீன இராணுவம் வழமையான ரோந்துப் பணிகளையே மேற்கொண்டு வருகின்றது. அதில் மாற்றம் ஏதும் செய்வதற்கில்லை. தற்போது அங்கு என்ன நடந்தது என்ற விவரம் தெரியாத போதும், இந்தியாவுடனான எல்லை விவகாரத்தில் சீனா அமைதியான முறையிலேயே செயற்பட்டு வருகின்றது''– என்று தெரிவித்தார். (ற)

## விக்கிலீக்ஸ் குறித்த திரைப்படமும் தயார்

லண்டன், ஜூலை 13
விக்கிலீக்ஸ் நிறுவுநரான ஜூலியன் அசாஞ்சே மீது தனதுகவனத்தைதிருப்பியுள்ள ஒஸ்கார் விருது பெற்ற ஆவணப்பட இயக்குநர் விக்கிலீக்ஸ் குறித்த ஆவணப் படம் ஒன்றை உருவாக்கியுள்ளார்.
ஆயிரக்கணக்கான ஆவணங்களையும், அரசுகளின் இரகசியங்களையும் அம்பலப்படுத்தியதால் பிரபல்யமானது விக்கிலீக்ஸ்.
அசான்சேக்கும், விக்கிலீக்ஸுக்கும் உலகம் முழுவதும் ஆதரவு பெருகியுள்ள நிலையில் விக்கிலீக்ஸை மையமாக வைத்து ஒரு ஆவணப்படம் ஒன்றை எடுத்துள்ளார் கிப்னி. அந்த படத்தின் பெயர் 'வீஸ்டீல் சீக்ரேட்ஸ்'.
பிரிட்டனில் வெளியிடப்பட்டுள்ள இந்தப் படத்தின் இயக்குநர் கிப்னி இதுகுறித்துக் கருத்துக் கூறும்போது, ''மடிக்கணினியுடன் சுற்றித் திரியும் இந்தக் கால இளைஞர்கள் திடீரென அவர்கள் பைகளில் இருக்கும் மடிக்கணினியை வைத்து கொண்டு உலக நாடுகளின் ரகசியங்களை சேகரித்து அதனை அம்பலமாக்கினால் எப்படி இருக்கும்?. அதைத் தான் இந்தத் திரைப்படம் சித்திரித்துள்ளது. வல்லரசு நாடுகளின் இரகசியங்களை அம்பலமாக்கும் இளைஞர்கள் நிச்சயம் பல வகையில் குறி வைக்கப்படுவார்கள் அப்படி துரத்தப்படும்போது அந்த இளைஞர்கள் பலம் வாய்ந்த நாடுகளை எதிர்த்து துணிச்சலாக போராடினால் விளைவு எப்படி இருக்கும்? இதுவே இந்தப் படத்தின் கதை.
ஜூலியான் அசாஞ்சேயைத் தழுவி உருவாக்கப்பட்டுள்ள இந்தத் திரைப்படத்தின் கதாநாயகன் கதாபாத்திரத்திற்கு மேலும் வலுசேர்க்கும் வகையில் அசாஞ்சேயைப் பிடித்த பல மனிதர்களையும், பிடிக்காதவர்களையும் சந்தித்து பேசினோம்'' என்று தெரிவித்துள்ளார்.
ஜூலியன் அசாஞ்சே 2006 ஆம் ஆண்டு ஆரம்பமாகிய பயணத்திலிருந்து, 2010 ஆம் ஆண்டு ஈராக் போர் குறித்த ஆவணங்களை உலகிற்கு வெளியிட்டு உலகில் மிகவும் வேண்டப்படும் மனிதனாக மாறியது வரை அனைத்து அம்சங்களும் இந்தப் படத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## அசிங்கமானவர் மிச்செல்


### நடிகையின் கருத்தால் பரபரப்பு

நியூயோர்க், ஜூலை 13
அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவும், அவரது மனைவி மிச்செல் ஒபாமாவும் பார்ப்பதற்கு அசிங்கமாக உள்ளனர் என்று தெரிவித்து ஹொலிவுட் நடிகை அமண்டா பைன்ஸ் பரபரப்பு ஏற்படுத்தியுள்ளார்.
பிரபல ஹொலிவுட் நடிகை அமன்டா பைன்ஸ் சமூக வலைத்தளமான டுவிட்டரிலேயே இந்தக் கருத்தை தெரிவித்துள்ளார்.
''அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவும், அவரது மனைவி மிச்செல் ஒபாமாவும் அசிங்கமாக இருக்கின்றனர்'' என்று அதில் அவர் தெரிவித்துள்ளார்.
அமன்டா முன்னரும் இது போன்ற கருத்துகளை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியிருந்தார். (ற)

## ஆண்டுக்கு 60 லட்சம் பேர் புகைத்தலால் உயிரிழப்பு

லண்டன், ஜூலை 13
புகை பிடிக்கும் பழக்கத் தால் ஆண்டுக்கு 60 லட்சம் பேர் இறக்கின்றனர் என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.
அவர்களில் பெரும்பாலானோர் குறைந்த மற்றும் நடுத்தர வருவாய் கொண்ட நாடுகளைச் சேர்ந்தவர்களே என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.
இந்த நிலை நீடித்தால் 2030ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 80 லட்சமாக உயரும் என்றும் அந்த அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.
இந்த ஆண்டில், உயிரிழந்த 50 லட்சம் பேர் புகையிலைப் பொருள்களை நேரடியாகப் பயன்படுத்தும் பழக்கம் கொண்டவர்கள். அதே சமயம், 6 லட்சம் பேர் மற்றவர்கள் விடும் புகையை சுவாசித்து அதன்மூலம் ஏற்பட்ட விளைவினால் உயிரிழந்துள்ளனர்.
20ஆம் நூற்றாண்டில், புகையிலைப் பழக்கத்தால் சுமார் 100 கோடி பேர் உயிரிழந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது. இந்த நூற்றாண்டில் இது அதிகரிக்கும் என்றும் சுகாதார நிறுவனம் எச்சரித்துள்ளது.
இது குறித்து உலக சுகாதார அமைப்பின் பொது இயக்குநரான மருத்துவர் மார்கரெட் சான் கூறுகையில், ''புகையிலை நிறுவனங்களையும், அதன் விளம்பரங்களையும் கட்டுப்படுத்தத் தவறினால், இப்பழக்கத்துக்கு அடிமையாகும் இளைஞர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். புகையிலைப் பொருள்களின் மூலம் மக்கள் உயிரிழப்பதைத் தடுக்கும் கடமை ஒவ்வொரு நாட்டுக்கும் உண்டு'' என்று தெரிவித்தார்.
92 நாடுகளில் புகைப் பிடிப்பதற்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டதால், 23 லட்சம் பேர் பயனடைந்துள்ளனர் என்று சுகாதார அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. (ற)

## சிறையில் பெரும் கலவரம் 200 பேர் தப்பியோட்டம்



மேதன், ஜூலை 13
சுமத்திராதீவு மேதன் நகரில் உள்ள டேன்ஜங் கஸ்டவ் சிறைச்சாலையில் ஏற்பட்ட கலவரத்தை அடுத்து 200 கைதிகள் தப்பிச் சென்றுள்ளனர்.
இந்தச் சிறைச்சாலையில் சுமார் 2,400 கைதிகள் அடைக்கப்பட்டிருந்தனர். 400 பேர் அடைத்து வைக்கப்பட வேண்டிய இடத்தில் அதிகமானோரை வைத்திருந்ததால், அவர்களிடையே நேற்று முன்தினம் பெரும் கலவரம் மூண்டது. இதில் சிறைச்சாலை தீ வைத்து கொளுத்தப்பட்டதுடன், மின்சாரத்தையும், தண்ணீரையும் கைதிகள் நிறுத்திவிட்டனர். அதையடுத்து தீ பல இடங்களுக்கும் பரவியது. கைதிகள் அங்கிருந்த துப்பாக்கியை எடுத்துக் கொண்டு சிறைக் காவலாளிகளைச் சிறை வைத்தனர்.
அத்துடன்சிறையை உடைத்துக் கொண்டு 200 கைதிகள் தப்பித்து சென்று விட்டனர். அதில் தீவிரவாதச் செயல்களில் ஈடுபட்ட 12 பேரும் தப்பித்துச் சென்றுவிட்டனர். பின்னர் நூற்றுக்கணக்கான பொலிஸாரும் இராணுவத்தினரும் அங்கு வரவழைக்கப்பட்டு நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தபோதும், தப்பியோடியவர்களில் 10 பேரே மீளவும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.(ற)

## கைத்தொலைபேசி வைத்திருந்தவர் கல்லால் அடித்துக் கொலை

இஸ்லாமாபாத், ஜூலை 13
பாகிஸ்தானில் கைத்தொலைபேசி வைத்திருந்த பெண், அவரது உறவினர்களாலேயே கல்லால் அடித்துக் கொல்லப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.
தேரா காஜி கான் என்ற கிராமத்தை சேர்ந்த பெண் ஒருவர் கைத்தொலைபேசி பயன்படுத்தி வந்துள்ளார். இது குறித்த தகவல் தெரியவந்ததும், அந்த ஊர் பஞ்சாயத்து கூட்டப்பட்டது. பின்னர் பஞ்சாயத்து உத்தரவை மீறி செல்போன் பயன்படுத்தியமைக்காக 2 குழந்தைகளுக்குதாயான அப்பெண்ணை கல்லால் அடித்துக் கொல்லுமாறு தீர்ப்பு வழங்கப்பட்டது. அதனையடுத்து அப்பெண்ணை அவரது மாமா மற்றும் உறவினர்கள் கல்லால் அடித்துக் கொன்றுள்ளனர்.
இச்சம்பவம் பாகிஸ்தானில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.ஆயரை 75 ஆவது அகவையில் வாழ்த்துகின்றோம்



மேதகு இ.தோமஸ் சவுந்தரநாயகம்,
யாழ்.ஆயர்.



எமது ஆயரின் 75ஆவது பிறந்த தினத்தில் குருக்கள் துறவிகளுடன் இணைந்து வாழ்த்துக் கூறுவதில் பெருமகிழ்வடைகின்றேன். எமது ஆயர் 32 ஆண்டுகளாக ஆயராகப் பணியாற்றி வருகின்றார். குறிப்பாக போர்ச்சூழலிலும், சுனாமி இயற்கை அனர்த்தத்தின் போதும் எம் மக்கள் பல நூறு உயிர்களை இழந்து வாழ வழி தெரியாது இருந்த வேளைகளில் நல் ஆயனாக மக்களின் துன்ப துயரத்தைச் சுமந்து, அவர்களை இறை விசுவாச வாழ்வை வாழ ஆயராக வழிகாட்டியிருக்கிறார்.தமிழ் மக்களின் துன்பங்களை, அரசபடைத்தரப்பிற்கும் போராட்டக் குழுவினருக்கும் அவ்வப்போது எடுத்துக் கூறி புரிந்துணர்வுகளை ஏற்படுத்தி, அமைதி வழிக்கு வழிகாட்டியவர். இவரது பணிக்காலம் மிகவும் சவால்கள் நிறைந்தது. ஆயினும் பொறுப்புடன் வழிகாட்டிய ஆயரை நெஞ்சார வாழ்த்தி மகிழ்கின்றேன்.

**அருள்முனைவர் யஸ்ரின் ஞானப்பிரகாசம், குருமுதல்வர், யாழ்.மறைமாவட்டம்.**



I Wish God's Choicest blessings on Bishop Rt. Rev. Dr. Thomas Savun daranayagam on his 75th Birthday on 13th of July. The Roman Catholic Churches in Jaffna would remember all his benevolent services rendered to build up Christian communities in his diocese. May these wishes be a reflection to His Lordship's love and the many lives he has touched and inspired.

My Congratulations for the 75 and 50 years of Priesthood. Rt. Rev. Dr.Thomas Savundranayagam was appointed as the Bishop of Mannar Diocese in 1981 and, then became as the Bishop of Jaffna Diocese in 1992. I have had several occasions to spend time with His Lordship and have always been touched by his kindness and thoughtfulness.

Very best wishes for good health, energy, and spirit for all the endeavours that he may undertake in the coming years. May God Bless You.

**G.A.Chandrasiri Governor, Northern Province.**



யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் 75ஆவது பிறந்த நாள் விழாவுக்கு வாழ்த்துச் செய்தி எழுதுவதில் மிக்க மகிழ்ச்சி. 1996 லிருந்து சமாதானத்திற்கும், நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவின் செயற்பாடுகள் மூலம் ஆயருடன் இணைந்து செயற்படும் வாய்ப்புக் கிடைத்தது. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல்வகைப்பட்ட சேவைகளை ஆற்றினார். தமிழ் மக்களின் உரிமைகளுக்காகவும், அவர்தம் வாழ்வுக்காகவும் அயராது பாடுபட்டார். அவர் மேலும் பல ஆண்டுகள் வாழ்ந்து இறைபணியிலும், சமூகப் பணியிலும் தொடர்ந்து ஈடுபட இறைவன் அருள்புரிவராக.

**பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை (Ph.D)**
**முன்னாள் துணை வேந்தர், வாழ்நாள் பேராசிரியர்,**
**தலைவர், சமாதானத்திற்கும்**
**நல்லெண்ணத்துக்குமான மக்கள்குழு.**



யாழ்ப்பாண ஆயராகப் பணியாற்றும் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் 75ஆவது பிறந்ததினத்தில் வாழ்த்துக் கூறுவதில் மகிழ்ச்சியடைகிறோம். இன, மத, பேதமின்றி அனைத்து மக்களையும் மனித நேயப் பண்புகளுடன் அரவணைக்கின்ற பண்பைக் கொண்டவர். புனிதமான குருத்துவப் பணியை நிறைவாகச் செயற்படுத்தி கிறிஸ்தவ மத மக்களிற்கு மட்டுமன்றி ஏனைய தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமையோடு வாழ்வதற்கு உலகத்தில் வாழும் அனைத்து மக்களிற்கும் கேட்கும் வகையில் குரல் கொடுக்கின்ற தனித்துவமான ஆயராக வாழ்ந்து கொண்டிருக்கிறார். இன்னும் பல்லாண்டு காலங்கள் இப்பணியை நிறைவாகச் செய்து இறை ஆசியோடு வாழ வாழ்த்துகின்றோம்.

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், இரண்டாவது குருமகா சந்நிதானம், நல்லை ஆதீனம்.**



வரலாற்றிலும் பண்பாட்டிலும் இறையுணர்விலும் நீண்ட பாரம்பரியம் கொண்ட மன்னார், யாழ்ப்பாண மறைமாவட்டங்களின் ஆயராக ஏறக்குறைய 32 ஆண்டுகள் பணியாற்றி இன்று 75ஆவது அகவையில் மகிழும் மேதகு கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களை தமிழ் பேசும் மக்களின் சார்பில் வாழ்த்தும் பாக்கியம் எனக்கு கிடைத்ததை இட்டு பெரும்மகிழ்ச்சியுடன் இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன். மனிதர் மத்தியில் இறை வாக்குரைப்போராக, ஒடுக்கப்பட்டோரின் குரலாக, பாதிக்கப்பட்டோரின் பணிப்பாளனாக திக்கற்ற மக்களுக்கு திசை காட்டியவராக, தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் தாய் நாட்டுக்கும் அவர்கள் செய்த அரும் பணிகள் அளப்பரியவை. போர்க்கலத்திலும் சம காலத்திலும் ஈடு இணையற்றவை. ஆயரின் இந்நன்நாளில் தமிழ்கூறும் நல்லுலகின் சார்பில் மனம் நிறைந்த வாழ்த் துக்களை கூறி மகிழ்கின்றேன்.

**இரா. சம்பந்தன், தலைவர், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு.**




யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தமது 75ஆவது வயதினை நிறைவு செய்யும் இந்நன்நாளில் நாம் அளவில்லா ஆனந்தம் அடைகின்றோம். அருளாசி பெற வரும் அடியார்களுக்கு அடக்கமுடன் நற்சிந்தனைகளை, தன்னலமற்ற தூய உள்ளத்தால் உபதேசித்து, உளரீதியாக உற்சாக மூட்டி நற்பிரசைகளாக வாழ்வதற்கு அரும் தொண்டாற்றி வருகின்றார். கடமையுணர்வு, கட்டுப்பாடு, அன்பு, தயை, பணிவு ஆகியவை அவர் வகிக்கும் பதவிக்கு மேலும் மெருகூட்டுகின்றன. இழந்த தமிழினத்தை மீட்டு வளர்க்க ஆயர் அவர்கள், ஆளுமையுடன் திடகாத்திரமான ஆலோசனைகளை முன்னெடுத்து அரும்பணியாற்றி வருகின்றார். இறைபணி ஆற்றி வரும் அவருக்கு நீண்ட ஆரோக்கிய மங்களகரமான வாழ்வை இயேசுநாதர் அருள வேண்டும் என்று நாங்கள் பிரார்த்திப்போமாக.

**சு.பரமநாதன், இணைச் செயலாளர்**
**சமாதானத்திற்கும், நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழு.**



இன்று தனது எழுபத்தைந்தாவது அகவை நிறைவிலே நிற்கின்ற எம் அதிவணக்கத்திற்குரிய ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவாகளுக்கு எனது வாழ்த்துக்க ளைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். யாழ். மறை மாவட்டத்திலே அசாதாரண சூழ்நிலை நிலவிய காலப்பகுதியில் மக்களோடு மக்களாகத் தன்னை இணைத்து ஒரு நல்லாயராய் எம் மக்களை வழி நடத்தி காத்துநின்றமை மிகவும் போற்றுதற்குரியதாகும். இனமத பேதமின்றி அனைவரையும் மதிக்கும் அன்பு செய்யும் உயர்ந்தவொரு நற்பண்பை தன்வாழ்விலே கொண்ட ஆயர் அவர்கள் இன்று தனது எழுபத்தைந்தாவது அகவையில் கால்பதிப்பது பெருமைக்குரியதும் மகிழ்ச்சிக்குரியதுமான விடயம். ஆயருக்கு எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

**சுந்தரம் அருமைநாயகம்**
**அரசாங்க அதிபர், மாவட்ட செயலர்,யாழ் மாவட்டம்.**



ஆயர் சவுந்தரநாயகம் பல தரப்பட்ட மக்களினாலும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சிறந்த தலைவர். அல்லற்பட்டு ஆற்றாது கண்ணீர் வடிக்கும் நமது சமுதாயத்தில் ஒருவர் நிலையாக இருந்து முப்பத்திரண்டு வருடகாலம் திருச்சபைக்குத் தலைமை தாங்கினாரெனின் அவருடைய சொல்லை எல்லோரும் கவனத்துடன் செவிமடுக்க வேண்டும். அவருடைய நிதானம், நடுவுநிலை தவறாத அணுகு முறை, உணர்ச்சி வசப்படாத பேச்சு என்னும் பண்புகள் இலங்கைப் பிரச்சினையில் ஆர்வம் கொண்ட அனைத்து மக்களினதும் நன்மதிப்பைத் தேடிக்கொடுத்தன. பிரச்சினைகள் நிறைந்த நமது பிரதேசத்தில் அவரை ஒரு கலங்கரை விளக்காகவே கண்டேன். இவருடைய காலத்திலே தமிழ் மக்கள் மத்தியில், கத்தோலிக்க திருச்சபையின் மதிப்பு முன்னெப்பொழுதும் இல்லாத அளவுக்கு வளர்ந்தது. இத்தகைய அருளாளன் நம்மத்தியிலே வாழ்ந்து கொண்டிருக்க இறைவன் அவருக்கு வேண்டிய ஞானத்தையும், ஆரோக்கியத்தையும் வழங்கினார்.

**மேதகு எஸ்.ஜெபநேசன்,**
**தென்னிந்தியத் திருச்சபை முன்னாள் பேராயர்.**



ஆன்மீகப் பணிக்காக தன் வாழ்வை அர்ப்பணித்து அகவை எழுபத்தைந்தை சந்திக்கும் ஆயர் அவர்களை அகமகிழ்ந்து வாழ்த்துகின்றேன். மானிடவாழ்வு மகத்தானது. மானிட வாழ்வில் மானிடம் தழைக்க மகத்தான துறவு வாழ்வினை மேற்கொண்ட பெருந்தகையின் பெருவாழ்வைப் போற்றுகின்றேன். போர்ச் சூழலில் தன் தூய பணியைத் தொடர்ந்து ஆற்றி மக்கள் மனதை வென்ற பெரியவரின் வாழ்வு என்றும் நன்றிக்குரியது. எந்நேரமும் எவ்விடத்தும் எவ்வித தயக்கமுமின்றி எம்மவரின் ஏதிலி நிலைமைகளை எடுத்துக் கூறி உதவி வருபவர். ஆண்டவன் குரலாக ஒலிக்கும் நம் ஆயரின் அருள்வாக்கால் உண்மை நிலையறிந்து உதவும் அபயக் கரங்கள் பல. நற்பணிகளை நாளும் புரிந்து பிறரையும் நல்வழிப்படுத்தி மகிழ்ந்து மகிழ்விக்கும் மாண்புறு நல்லாயர் ஆரோக்கியமாக நீடு வாழ்ந்து நற்பணிதொடர இறைவனை என்றும் பிரார்த்தித்து உளமார வாழ்த்திப் போற்றி நிறைவு செய்கிறேன்.

**கலாநிதி ஆறு. திருமுருகன், தலைவர்,ஸ்ரீதுர்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.**



யாழ் ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் 75வயதை அடைந்து பவள விழாக் காணும் நேரத்தில் வாழ்த்துத் தெரிவிக்க சந்தர்ப்பம் கிடைத்தமை எனது பாக்கியமே.

நலிவுற்றோர், நோயாளிகள், காயப்பட்டோர் , துன்ப துயரத்தில் அவதிப் படும் மக்களுக்கு அருள் ஆசியை வழங்கி அவர்களுக்கு ஏற்படும் துன்பத்தில் பங்கு பற்றியும் துணிச்சலுடன் பணியாற்றியும் மக்களுக்கு சேவை புரியும் ஆண்டகை அவர்கள் நூற்றாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றேன்.

**திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா,**
**மாநகர முதல்வர், யாழ்ப்பாணம்.**



யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் தமிழ் மக்களுக்குக் காலமும் கடவுளும் அளித்த மகத்தான கொடையாகும். ஆயர் அவர்கள் பன்னெடுங் காலமாக யாழ்ப்பாணத் திருச்சபையின் தலைவராக இருந்து பொது நிலையினரைச் சிறந்த இறை நம்பிக்கையிலும், ஒழுக்க நெறியிலும் வழிப்படுத்தி வருகின்றார். சிறந்த ஆளுமைப் பண்புகளைக் கொண்ட ஆயர் அவர்கள் பக்கச் சார்பற்ற நடுநிலைப் பண்பு கொண்ட மாமனிதராவார். தமிழ் மக்களின் இன்னல் கள் நிறைந்த இக்கட்டான காலகட்டத்தில் நேரிய நோக்கு டனும் தீர்க்க தரிசனப் பார்வையுடனும் செயற்பட்டவர். ஆயர் அவர்களின் பவள அகவையில் அவர் நலமும் பணியும் சிறக்க வாழ்த்துகின்றோம்.

**யோ.கீதபொன்கலன், தலைவர்,**
**பொதுநிலையினர் கழகம், யாழ். மறை மாவட்டம்.**

(C/10440)(2.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைதடி முதியோர் இல்லத்தில் 176 பேர்

யாழ்ப்பாணம், ஜூலை 13
கைதடி அரச முதியோர் இல்லத்தில் தற்போது 176 முதியவர்கள் பராமரிக்கப்பட்டு வருவதாக இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரன் தெரிவித்தார்.

உறவினர்களால் கைவிடப்பட்ட மற்றும் பொருளாதார நெருக்கடிகளால் உதவிகள் இன்றி அல்லல்படும் முதியவர்களைப் பராமரித்து ஆற்றுப்படுத்தும் வகையில் கைதடி முதியோர் இல்லம் செயற்பட்டு வருகிறது.

இங்கு யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமன்றி வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

இல்லத்தில் தற்போது ஆண்கள் 100 பேரும் பெண்கள் 76 பேரும் உள்ளனர். இவர்களுக்கான சகல வசதிகளையும் இல்ல நிர்வாகம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது ன அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-14-51)

# குளிரூட்டி வசதிகள் இன்றி 'ஸ்கானிங்' கிளினிக் அறை

## சாவகச்சேரியில் நோயாளர் அவதி

தென்மராட்சி, ஜூலை 13
சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நடத்தப்படும் 'ஸ்கானிங்' கிளினிக் அறைக்கு குளிரூட்டி பொருத்துமாறு நோயாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

'ஸகானிங்' கிளினிக்கில் பரிசோதனைக்குச் செல்லும் நோயாளர்கள் பரிசோதனை முடியும் வரை மூடிய அறைக்குள்ளேயே நீண்டநேரம் காத்திருக்க வேண்டியுள்ளது. இதனால் வியர்வையில் குளிக்கும் நிலை ஏற்படுகிறது.

பின்லாந்து செஞ்சிலுவைச் சங்கத்தினால் வழங்கப்பட்ட 15 லட்சம் ரூபா பெறுமதியான 'ஸ்கானிங்' கருவி இந்த அறையில் பொருத்தப்பட்டுள்ளது.எனினும்அறைக்கு குளிரூட்டி வசதிகள் ஏற்படுத்தப்படவில்லை. இதனால்பெறுமதிமிக்க கருவியும் பழுதடையும் நிலையே காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.



இது தொடர்பாக வைத்தியசாலைநிர்வாகத்துடன்தொடர்பு கொண்டபோது:

யாழ்.போதனா வைத்தியசாலை கதிர் இயக்கப் பிரிவின் பொறுப்பதிகாரி வைத்திய நிபுணர் ச.நிமலன் மற்றும் வைத்தியசாலை பிரசவ விடுதிப் பொறுப்பதிகாரி ஆகியோரால் இந்தப் பரிசோதனை நடத்தப்பட்டு வருகிறது.

கடந்த ஆறு மாதங்களில் கர்ப்பிணிகள் உட்பட சுமார் 2ஆயிரம் பேர் 'ஸ்கானிங்' கிளினிக்கில் கலந்து கொண்டுள்ளனர். இந்த அறைக்கான குளிரூட்டிகள் சுகாதார அமைச்சிடம் கோரப்பட்டுள்ளன. அதனை விரைவில் வழங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## தாக்குதல்களில் மூவர் காயம்

தென்மராட்சி, ஜூலை 13
தாக்குதல் சம்பவங்களில் காயமடைந்த மூவர் நேற்று முன்தினம் வியாழக் கிழமை சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த சிவலிங்கம் அன்பழகன் (வயது-33) என்பவர் உடைந்த போத்தலால் குத்தப்பட்டும் கடியுண்ட நிலையிலும்,

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பைச் சேர்ந்த தங்கராசா தங்கவேல் (வயது-40) என்பவர் தலையில் பலத்த காயத்துடனும், மட்டுவில் மத்தியைச் சேர்ந்த சந்திரன் மயூரன் என்பவர் தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்த நிலையிலும் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதில் தங்கவேல் என்பவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ந-9)

## மாநகர சபை முன்னாள் உறுப்பினர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 13
யாழ். மாநகர சபை முன்னாள் உறுப்பினர் எஸ்.நிசாந்தன் யாழ்.பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார். யாழ். நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட அவரை மன்று விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்.கோயில்வீதியில்ஹயஸ்ரக வாகனம் ஒன்றை அடித்து நொருக்கியதோடு அதற்குத் தீ வைத்துக் கொளுத்தினார் என்று அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

தனிப்பட்ட தகராறு காரணமாக சம்பவம் நடந்ததாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-4)

## கைதடி முதியோர் இல்லத்தில் தாயை சேர்த்தார் அவரது மகன்

### பராமரிப்பதற்கு வசதியில்லையாம்

பராமரிப்பதற்கு தன்னிடம் போதுமான பொருளாதார வசதியில்லை எனத் தெரி வித்து, மகன் ஒருவர் தனது 76 வயதான தாயாரை கைதடி முதியோர் இல்லத் தில் சேர்த்தார்.

இந்தத் தகவலை இல்லத் தில் அத்தியட்சகர் த.கிருபா கரன் தெரிவித்தார்.

பருத்தித்துறைப் பகுதியைச் சேர்ந்த மகன் ஒருவரே பால சுப்பிரமணியம் சிவரெத் தினம் (வயது-76) என்ற தனது தாயாரையே இவ்வாறு ஒப்படைத்துள்ளார்.

தாயாரை வீட்டில் வைத்துப் பராமரிப்பதற்கு தன்னிடம் போதுமான வசதியில்லை என்றும், தனக்கு தொழில் வாய்ப்பு இல்லை என்றும் மகன் தெரிவித்துள்ளார்.

அவரது குடும்ப நிலையைக் கருத்தில் கொண்டு தாயாரை தாம் இல்லத்தில் சேர்த்துக் கொண்டுள்ளதாகவும் அவர் மேலும்தெரிவித்தார். (ஐ-14-17)

## உடுவில் நடமாடும் சேவையில் 2,268 அ. அ. விண்ணப்பங்கள்

வலி.வடக்கு, ஜூலை 13
உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் இடம்பெற்ற நடமாடும் சேவையின் போது சுமார் 2 ஆயிரத்து 268 பேருக்கு தேசிய அடையாள அட்டை விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளதாக பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

பவ்ரல் அமைப்பும் இலங்கைக்கான ஒபர் அமைப்புக்களின் ஆதரவுடன் இடம்பெற்ற இரண்டு நாள் நடமாடும் சேவையின் போது குறித்த விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

ஆவணங்கள் அற்ற நிலையில் தேசிய அடையாள அட்டை பெறுவதில் சிரமங்களுக்கு உள்ளாகி அவற்றைப் பெற முடியாமல் இருந்த பலர் தேசிய அடையாள அட்டைத் திணைக்களத்தில் இருந்து வருகை தந்த அதிகாரிகளும் நடமாடும் சேவையில் கலந்து கொண்ட நிலையில் பிரதேச செயலாளர் ஊடாக உரியவர்களை அணுகி தமது பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு கொண்டதன் மூலம் நடமாடும் சேவையால் நன்மை அடைந்துள்ளனர்.

குறிப்பாக புதிய அடையாள அட்டை பெறுவோர்களில் ஐநூறுக்கு மேற்பட்டவர்கள் நன்மை அடைந்துள்ளதுடன் முதியவர்கள் பலரும் தமது தேசிய அடையாள அட்டைகளை புதுப்பிக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

பொலிஸ் முறைப்பாட்டைப் பெற்ற முன்னூறுக்கும் மேற்பட்டவர்களும் பயன் அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-86)

## கைதடி முதியோர் இல்ல வளாகம் சிரமதானம்

யாழ்ப்பாணம், ஜூலை 13
தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு கைதடி அரச முதியோர் இல்லத்தில் 2 நாள்கள் தொடர்ந்து சிரமதானப் பணிகள் அண்மையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கிறிஸ்துவுக்கான இளைஞர் அமைப்பும், பருத்தித்துறை மெதடிஸ்த மிஷன் திருச்சபையும் சிரமதானப் பணிகளை மேற்கொண்டன. இரண்டு அமைப்புக்களும் வெவ்வெறு நாள்களில் மேற்கொள்ளப்பட்ட சிரமதானப் பணிகளில் இல்ல வளாகம் புதுப்பொலிவு பெற்றுள்ளது. (வ-14, 17)

## நகைகளை சூறையாடிய பெண்கள் நால்வருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஜூலை 13
கோண்டாவிலில் கோயிலில் நகைகளைச் சூறையாடிய புத்தளத்தைச் சேர்ந்த 4 பெண்களையும் 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்க யாழ். நீதிமன்று உத்தரவிட்டது.

கடந்த புதன்கிழமை கோயிலில் நின்றிருந்த பெண்ணிடம் இருந்து 15 பவுண் நிறையுடைய சங்கிலிகள் இரண்டைஅபகரித்துக்கொண்டு தப்பிச் செல்ல முற்பட்டபோது கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். நகைகளும் மீட்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (வ-4)

# சமூக சுட்டிகள் முன்னேற்றம் கண்ட போதிலும் போசாக்கு சுட்டியில் முன்னேற்றம் இல்லை

### சுகாதார கண்காட்சி விழிப்புணர்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது

தென்மராட்சி, ஜூலை 13
சுகாதார அமைச்சினால் வைத்தியசாலைகள், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகள் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு சமூக சுட்டிகள் முன்னேற்றம் கண்டுள்ள போதிலும் போசாக்கு குறைவு தொடர்பான சுட்டியில்குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கூட காணப்படவில்லை. வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் போசாக்கு குறைவு தொடர்பான விழிப்புணர்வு மக்களிடையே காணப்படாமை ஆய்வுகளின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது என்று தென்மராட்சி பிரதேசத்தில் இடம்பெற்று வரும் சுகாதாரக் கண்காட்சிகள் தொடர்பாக விடுக்கப்பட்டுள்ள விழிப்புணர்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது:

மனித வாழ்க்கையில் உணவு என்பது முக்கிய இடத்தை வகிக்கிறது. குழந்தைகள் தொடக்கம் முதியோர் வரை காலத்திற்கேற்ப உணவின் தன்மையை மாற்ற வேண்டும். இலங்கையில் இரு வகையான உணவு தொடர்பான நோய் காணப்படுகிறது. ஒன்று குறை உணவு மற்றது அதிகளவு உணவு. இவை இரண்டுமே மனிதனை நோயாளியாக்கி விடும்.

2015 ஆம் ஆண்டு ஆரோக்கியமான மனித சமூகத்தை உருவாக்க சுகாதார அமைச்சு பல திட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்திவருகிறது.

போசாக்கு குறைந்தவர்கள் இனங்காணப்படும் வரை எவரும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்வதில்லை.

குழந்தைகள் தொடக்கம் முதியோர் வரை அவர்களுக்கு ஏற்படும் வயதுக்கேற்ற உயரம், நிறை, உடற்பருமன் குறைவாக உள்ளோர், நிறைகுறைந்த பிள்ளைகள், ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கான நிறைச் சுட்டெண், தொடர்ச்சியான நிறைகுறைந்த பிள்ளைகள், கர்ப்பிணிகளின் உடற்திணிவு சுட்டெண் 18.5 இற்கும் குறைதல், வளரும் பிள்ளைகள், முதியோர் ஆகியோர் போசாக்கு பற்றாக் குறையினால் பாதிக்கப்பட்டு காணப்படுகின்றனர்.

வடக்கு மாகாணத்தில் சாவகச்சேரி வைத்தியசாலையில் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகள், 14 வயதுக்கு உட்பட்டவர்கள் ஆகியோருக்குத் தனித்தனியான கிளினிக்கும் 15 வயதுக்கு மேற்பட்டோர், கர்ப்பிணிகள் ஆகியோருக்கான சுகவாழ்வு கிளினிக் போன்றன வாரத்தில் ஒரு நாள் விசேட வைத்தியர்களால் நடத்தப்பட்டு வருகிறது.

இந்தக் கிளினிக்குகளில் கலந்துகொண்டு போசாக்கு தொடர்பான ஆலோசனைகளைப் பெற்று ஆரோக்கியமானவர்களாக மாற ஒவ்வொருவரும் முயற்சிக்க வேண்டும்.

சுகாதார அமைச்சினால் கடந்த மாதத்தினை போசாக்கு மாதமாக அறிவிக்கப்பட்டிருந்ததால் பல்வேறு செயற்றிட்டங்கள் சுகாதாரப் பகுதியினரால் நடத்தப்பட்டதாகவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுபோக நெற்செய்கை அறுவடை ஆரம்பம்



> நெல்லுக்குரிய நியாய விலையைப் பெற்றுக்கொள்வதில் சிக்கல் நிலைமை தோன்றியுள்ளது.

மட்டக்களப்பு,ஜூலை 13
மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது சிறுபோக நெல் அறுவடை ஆரம்பமாகியுள்ளது.

மாவட்டத்தின் படுவான்கரைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த நெற்செய்கை, தற்போது மிகவும் துரிதமாக அறுவடை மேற்கொள்ளப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

எனினும் நெல்லுக்குரிய நியாய விலையைப் பெற்றுக்கொள்வதில் சிக்கல் நிலைமை தோன்றியுள்ளது என்று இந்தப்பகுதி விவசாயிகள் கூறுகின்றனர்.(ச)

# ஆபத்தான நிலையில் முஸ்லிம்களின் வாழ்வு

## அதனால் போராடும் நிலை ஏற்பட்டுள்ளது என்கிறார் கிழக்கு சுகாதார அமைச்சர்

மட்டக்களப்பு,ஜூலை 13
நாட்டில் முஸ்லிம்கள் ஆபத்தான நிலையில் வாழ்ந்து வருகின்றனர். அதனால் பதவிகளை துறந்து போராடவேண்டிய நிலையில் நாம் உள்ளோம் என்று கிழக்கு மாகாண சபை சுகாதார அமைச்சர் எம்.ஐ.எம்.மன்சூர் தெரிவித்தார்.



சம்மாந்துறையில் வியாழக்கிழமை இடம்பெற்ற வறிய குடும்பங்களுக்கு இலவச நீர் விநியோகத்துக்கான நிதி உதவி வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
முஸ்லிம்கள் மிகவும் ஆபத்தான நிலையில் வாழ்கிறார்கள். இலங்கையில் முஸ்லிம்களை அழித்துவிட வேண்டும் என்ற நோக்கில் சிலர் செயற்படுகின்றனர்.

> மக்களுக்கு சேவை செய்ய நாம் எப்போதும் தயாராகவே உள்ளோம்.

முஸ்லிம்களைப் பாதுகாப்பதற்கு நானும் எமது கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் உட்பட பலரும் எமது அமைச்சுப் பதவிகளைத் துறந்து போராடத் தயாராகவுள்ளோம்.

இந்த குடிதண்ணீர் திட்டத்துக்கான உதவிகள் சவூதி அரேபிய தனவந் தர்கள் வழங்கி உள்ளனர். அவர்களுக்கு நாம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

மக்களுக்கு சேவை செய்ய நாம் எப்போதும் தயராகவே உள்ளோம்- என்றார். (ச-10)

## வீணான பிடிவாதங்கள்-பிரிவினைகள் மருதமுனை கல்விக்கு முட்டுக்கட்டை

### கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் நிஸாம் தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை 13
வீணான பிடிவாதங்களும், பிரிவினைகளும் மருதமுனையின் கல்வி வளர்ச்சி மேலும் வளர்ச்சியடையத் தடையாக இருந்து கொண்டிருக்கின்றன. இந்தத் தடையை தகர்த்தெறிய மருதமுனையின் கல்விமான்கள் முன்வரவேண்டும்.



> படித்தவர்கள் அதிகம் இருப்பதால் தான் இந்தத் தடைகளை உடைக்க முடியாமல் இருக்கிறது என்பதை நான் உணர்ந்து கொண்டேன்.

இவ்வாறு கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எம்.ரி. அப்துல் நிஸாம் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:
நல் சிந்தனையுடைய வளங்கள் பொருந்திய, கல்வியை முன்னேற்றக்கூடிய ஆர்வமுடைய அதிகமான கல்வியாளர்கள், அறிஞர்கள், படித்தவர்கள் மருதமுனையில்தான் அதிகம் இருக்கிறார்கள்.

ஆனால் என்ன துரதிர்ஷ்டமோ தெரியாது, இந்த ஊருக்கு என்ன பிடித்திருக்கிறதோ தெரியாது. தேவையற்ற பிடிவாதங்களும் பிரிவினைகளும், மருதமுனைப் பகுதியின் கல்வியைப் பாழடித்துக் கொண்டிருக்கின்றன.

ஏன் இந்தத் தடைகளை அகற்ற முடியாதென்று நான் சிந்தித்த போது இது படிக்காத மக்களை அதிகமாகக் கொண்ட ஒரு கிராமமாக இருந்தால் எப்போதோ இந்தப் பிரச்சினை தீர்வு காணப்பட்டிருக்கும். ஆனால், படித்தவர்கள் அதிகம் இருப்பதால்தான் இந்தத் தடைகளை உடைக்க முடியாமல் இருக்கிறது என்பதை நான் உணர்ந்து கொண்டேன்.

இந்த விடயத்தில் மருதமுனையிலிருக்கின்ற புத்திஜீவிகள் தவறான சிந்தனைகளை உடைத்தெறிய முன்வர வேண்டும் -என்றார். (ச)



கிழக்கு மாகாண திறைசேரியின் பாதீட்டுப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ள காரைதீவைச் சேர்ந்த கணக்காளர் சி.சசிகரனுக்கு காரைதீவு புஸ்பா பொருளாதார, கல்வி சமூக அபிவிருத்தி அமைப்பு நடத்திய பாராட்டு வைபவத்தில் காரைதீவு பிரதேச சபைத் தவிசாளர் செல்லையா இராசையா, பாதீட்டுப் பணிப்பாளர் சசிகரனுக்கு நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தார். (ச-30)

## மட்டக்களப்பு வந்த பஸ் மரத்துடன் மோதி விபத்து

### 4 பேர் சாவு; 17பேர் காயம்



மட்டக்களப்பு,ஜூலை 13
கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கி சென்ற தனியார் மினி பஸ் வெள்ளிக்கிழமை விபத்துக்குள்ளானதில் நான்கு பேர் உயிரிழந்துள்ளதுடன், 17 பேர் காயமடைந்துள்ளனர்.

உயிரிழந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்கள் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சமுர்த்தி முகாமையாளர்கள் என்று மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி உதவிப் பணிப்பாளர் பி.குணரட்ணம் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற சமுர்த்தி முகாமையாளர்களுக்கான செயலமர்வில் கலந்து கொண்ட பின்னர் மட்டக்களப்பு திரும்பிக் கொண்டிருந்தபோது அவர்கள் பயணித்த தனியார் மினி பஸ் வெள்ளிக்கிழமை அதிகாலை 3மணிக்கு மன்னம்பிட்டியில் மரமொன்றுடன் மோதுண்டதில் இந்த விபத்து ஏற்பட்டது.

இந்தப் பஸ்ஸில் பயணித்த 19 சமுர்த்தி முகாமையாளர்களில் மூன்று சமுர்த்தி முகாமையாளர்கள் உயிரிழந்ததுடன், ஏனைய சமுர்த்தி முகாமையாளர்கள் மற்றும் பஸ் சாரதி, நடத்துனர் உள்ளடங்கலாக 17 பேர் காயமடைந்துள்ளனர். (ச)

## காத்தான்குடியில் 46 டெங்கு நோயாளர்

மட்டக்களப்பு,ஜூலை 13
மட்டக்களப்பு, காத்தான்குடி பிரதேசத்தில் இந்த வருடம் ஜனவரி மாதத்திலிருந்து ஜூன் மாதம் வரை 46 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி, யூ.எல். நசிர்தீன் தெரிவித்தார்.

காத்தான்குடி முதலாம் குறிச்சி, ஊர்வீதி, ஸாவிய்யா வீதி, உள்ளிட்ட பகுதிகளிலேயே இந்த டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார்.


இந்தப் பிரதேசங்களில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதையடுத்து, தற்போது டெங்கு பரவுவது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

டெங்கு நுளம்புகள் பரவாத வகையில் மருந்துகள் விசிறப்பட்டுள்ளதுடன், பொதுஇடங்களிலும் பாடசாலைகளிலும் துப்புரவுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று அவர் தெரிவித்தார். (ச)

## குடும்பங்களுக்கு வாழ்வாதார கொடுப்பனவு

சாய்ந்தமருது பிரதேச செயலகப் பிரிவில் விசேட தேவையுடைய நபர்களைக் கொண்ட வறிய குடும்பங்களுக்கு வாழ்வாதாரக் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு வியாழக்கிழமை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. சாய்ந்தமருது பிரதேச செயலக சமூக சேவை நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் ஏ.ஏ. எம்.அஹ்ஸன் தலைமையில் இடம்பெற்ற இந்தநிகழ்வில், பிரதேச செயலர் ஏ.எல். எம்.சலீம், கணக்காளர் எம்.எம்.உஸைனா, நிர்வாக உத்தியோகத்தர் எம்.எம்.உதுமாலெப்பை உட்பட பலர் கலந்து கொண்டனர். (ச)

## வலையிறவுப் பாலம் மக்கள் பாவனைக்கு



மட்டக்களப்பு,ஜூலை 13
மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதான போக்குவரத்து பாலங்களில் ஒன்றான வலையிறவு பாலம் 23 ஆண்டுகளின் பின்னர் மீண்டும் போக்குவரத்துக்காகத் திறக்கப்பட்டுள்ளது.

கடந்த 1990 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இடம்பெற்ற போரால் முற்றாக தகர்க்கப்பட்ட இந்தப் பாலம் முழுமையாக புனரமைப்புச் செய்யப்பட்டு செவ்வாய்க்கிழமை முதல் மக்கள் பாவனைக்காக திறந்து விடப்பட்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலில் மோசடியைத் தடுக்க ஐ.நா. கண்காணிப்பாளர் தேவை

## சரத் பொன்சேகா கேட்கிறார்

கொழும்பு,ஜூலை 13
மூன்று மாகாண சபைத் தேர்தல்களையும் கண்காணிப்பதற்கு ஐ.நா. கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்த வேண்டும் என்று முன்னாள் இராணுவத் தளபதியும் ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான சரத் பொன்சேகா தெரிவித்தார்.
குருநாகலில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
இந்த நாட்டில் தற்போது நிர்வாகத்திலுள்ள அரசு மக்களின் வாக்குகளை கொள்ளையடிக்க முயற்சிக்கிறது.
மக்களின் வாக்குரிமையைப் பாதுகாக்க வேண்டுமாயின் சர்வதேச கண்காணிப்பாளர்கள் அவசியம். தேர்தல் கண்காணிப்பில் ஐக்கிய நாடுகள்



சபை கண்காணிப்பாளர்களது பிரசன்னம் அவசியம்.
கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது, வாக்கு எண்ணும் நிலையங்கள் மீது தாக்குதல் நடத்தியமை, வாக்களிப்பு நிலையங்களில் கடமையாற்றிய எதிர்க் கட்சிகளின் பிரதிநிதிகளைப் பலாத்காரமாக வெளியேற்றியமை போன்ற கீழ்த் தரமான நடவடிக்கைகளில் இந்த அரசு ஈடுபட்டிருந்தது.
இந்த அராஜக நிலையே செப்டெம்பரில் நடைபெறவுள்ள மூன்று மாகாண சபைத் தேர்தல்களிலும் தொடரும்.
எனவே இவ்வாறான மோசடிகளைத் தடுக்கும் வகையில் ஐ. நா. வின் கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்த வேண்டும்.-என்றார். (ச)

## ஜனாதிபதியை சந்தித்தார் ஹிருனிகா



கொழும்பு,ஜூலை 13
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் காலஞ்சென்ற பாரத லக்ஸ்மன் பிரேமசந்திரவின் புதல்வி ஹிருனிகா ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்துள்ளார்.
இந்த சந்திப்புக்கான ஒழுங்குகளை அமைச்சர் ராஜித சேனாரட்ண செய்து கொடுத்திருந்தார்.
ஹிருனிகாவின் எதிர்காலத் திட்டம் குறித்து ஜனாதிபதி கேட்டறிந்து கொண்டார் என்று ஜனாதிபதி செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
வங்குரோத்து அடைந்த அரசியல்வாதிகளின் பொறியில் சிக்கிவிட வேண்டாம் என்று ஹிருனிகாவுக்கு ஜனாதிபதி எச்சரிக்கை விடுத்துள்ளார். (ச)



பல்கேரியாவில் நடைபெற்ற சர்வதேச கணிதப் போட்டியில் கலந்துகொண்ட இலங்கை மாணவர்கள் வெற்றி பெற்றுள்ளனர்.
அந்த மாணவர்கள் புதன்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்தபோது அவர்களுக்கு ஜனாதிபதி வாழ்த்துக்களைத் தெரிவித்தார். (ச)

## தமிழர் பிரச்சினையை மறந்துவிட்டது அரசு

### ரில்வின் சில்வா குற்றச்சாட்டு



கொழும்பு,ஜூலை 13
தமிழர் பிரச்சினை குறித்து மஹிந்த அரசு கவனம் செலுத்தவில்லை என்று ஜே.வி.பியின் பொதுச் செயலர் ரில்வின் சில்வா குற்றம் சாட்டியுள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:
13 ஆவது திருத்தத்தின் அடிப்படையில் தீர்வு வழங்குவதாக அரசு முழு உலகத்திடமும் வாக்குறுதி வழங்கியது. தற்போது இந்தியா, இலங்கையின் பிரச்சினையைத் தீர்க்கப் போகிறது.
விமல் வீரவன்சவும் சம்பிக்க ரணவக்கவும் இனவாதத்தை தூண்டுவதையே அதிகமாகச் செய்து வருகின்றனர்.
போரில் வெற்றி பெற்றவுடன் 13 ஆவது திருத்தத்தை நீக்கி விட்டு, தமிழ் மக்களின் மனங்களை வென்றிருக்க வேண்டும். எனினும் போர் வெற்றி என்ற போதையில், ஜே.வி.பி காட்டிக் கொடுத்த பாதையில் இந்த அரசு செல்லவில்லை.
தமிழ் மக்கள் தாம் சுதந்திரமாக வாழும் சூழலையே கேட்கின்றனர்;தமது கலாசார அடையாளங்களுடன், வாழ்வதை தமிழ் மக்கள் கோருகின்றனர் ; அவர்கள் நாட்டை பிரிக்குமாறு கேட்கவில்லை -என்றார். (ச)

## மகாபோதிக்கு இலங்கை யாத்திரிகர்கள் மீண்டும் செல்லலாம்



கொழும்பு,ஜூலை 13
இந்தியாவின் பீகார் மாநிலம், புத்தகயாவில் உள்ள மஹாபோதி ஆலயம் திறக்கப்பட்டுள்ள நிலையில், இலங்கை யாத்திரிகர்கள் மீண்டும் அங்கு செல்ல முடியும் என்று இந்திய அரசு அறிவித்துள்ளது.
இது தொடர்பில் இந்தியாவில் உள்ள இலங்கைத் தூத ரகம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
யாத்திரிகர்களின் நன்மை கருதி இந்திய மத்திய அரசும் பீகார் மாநில அரசும் ஆலய நிர்வாகத்துடன் இணைந்து புதிய பாதுகாப்பு முறைகளை ஏற்பாடு செய்துள்ளன என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.
புத்தகயாவில் கடந்த 7 ஆம் திகதி இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் இருவர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## சிறுபான்மையினரைப் பாதிக்காதவாறு எல்லை நிர்ணயத்தை மேற்கொள்ளுங்கள்

### நீதி அமைச்சர் ஹக்கீம் வலியுறுத்து

கொழும்பு,ஜூலை 13
சிறுபான்மை சமூகங்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையிலேயே எல்லை நிர்ணயம் மேற்கொள்ளப்படவேண்டும் என நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் வலியுறுத்தியுள்ளார்.
உள்ளூராட்சி சபை தேர்தலுக்கு புதிய ஏற்பாடுகள் கொண்டுவரப்பட்டு, தேசிய எல்லை நிர்ணய ஆணைக் குழுவின் செயற்பாடுகளுக்கு மேலும் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.



எல்லை நிர்ணய ஆணைக் குழுவின் செயற்பாடுகள் வெளிப்படைத் தன்மையாக இருத்தல் அவசியம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.
நாடாளுமன்றில் வியாழக்கிழமை நடைபெற்ற உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் சட்டவரைவு மீதான விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஆறு மாத கால அவகாசம் மேலதிகமாக வழங்கப்பட்டுள்ளது.
இந்த ஆணைக்குழுவிடம் நாம் எமது சிபாரிசுகளையும் சமர்ப்பித்துள்ளோம்.
இந்த ஆணைக்குழுவின் செயற்பாடுகள் வெளிப்படைத் தன்மையாக இருக்க வேண்டும். எதிரணியும் இவ்வாறானதொரு கோரிக்கையை விடுத்துள்ளது.
மாவட்ட செயலகங்கள் முன்மொழிந்த சிபாரிசுகளை, தேசிய எல்லை நிர்ணய ஆணைக்குழு ஏற்றுக் கொண்டுள்ளது.
இவ்வாறு அரசியல் கட்சிகளினது சிபாரிசுகளும் ஆராய்ந்து ஏற்றுக்கொள்ளப்படவேண்டும்.
விகிதாசார முறைக்குப் பதிலாகக் கொண்டுவரப்படவிருக்கும் பல்தொகுதி உறுப்பினர்கள் முறையில் சிறுபான்மை இனங்களின் வாக்குரிமைகள் பாதிக்கப்பட்டு விடக்கூடாது என்ற விடயம் எல்லை நிர்ணயத்தின்போது கவனத்தில் எடுக்கப்பட வேண்டும் .-என்றார்.(ச-சி)

> ”
> பல்தொகுதி உறுப்பினர்கள் முறையில் சிறுபான்மை இனங்களின் வாக்குரிமைகள் பாதிக்கப் [illegible] கூடாது.

## தண்ணீர் போத்தல்கள் அதிக விலைகளில்

### திடீர் சுற்றிவளைப்பில் கண்டுபிடிப்பு



குறிப்பிடப்பட்ட விலையை விட அதிக விலைக்கு குடி தண்ணீர் போத்தல்களை விற்பனை செய்த 100 வர்த்தகர்களை நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை கண்டு பிடித்துள்ளது.
கூட்டுறவு உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் உத்தரவுக்கமைய நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை சுற்றி வளைப்புப் பிரிவினர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.
இந்த திடீர் சுற்றிவளைப்பு கம்பஹா, களுத்துறை, கண்டி, மாத்தளை, நுவரெலியா, பதுளை, மொனராகலை, மட்டக்களப்பு, புத்தளம் ஆகிய மாவட்டங்களிலேயே இடம்பெற்றுள்ளது.
இந்தப் பகுதிகளில் 20 ரூபா தொடக்கம் 45 ரூபா வரை தண்ணீர் போத்தல்களை விற்பனை செய்து வருகின்றனர். அதிக விலையில் தண்ணீர் போத்தல்களை விற்பனை செய்வதைத் தடுக்க நுகர்வோர் அதிகார சபை தொடர்ந்தும் நடவடிக்கை எடுக்கவுள்ளது (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## எகிப்தின் ஆட்சிக் கைமாற்றம் தாவிப் பரவும் சாத்தியம்...?

இராணுவத்தின் அனுசரணையுடன் எகிப்தில் கடந்த வாரம் உருவாக்கப்பட்ட இடைக்கால அரசின் மூலம், அந்த நாட்டில் அமைதி திரும்புவதற்கான வாய்ப்பு மிகக் குறைவு என்பது மிகத் துல்லியமாகத் தெரிகிறது.

இப்போதுள்ள அரசமைப்புச் சட்டத்தில் மாற்றம் செய்யப்படும். அதற்கான மக்கள் அங்கீகாரம் பெறப்படும், அதன் பின்னர் அடுத்த வருடத்திலேயே நாடாளுமன்றத் தேர்தலும் ஜனாதிபதித் தேர்தலும் நடைபெறும் என்ற அறிவிப்பு உள்நோக்கங்கள் பலவற்றைக் கொண்டதெனக் கொள்ளலாம்.

முன்னாள் ஜனாதிபதி மோர்சி பதவியில் இருந்து அகற்றப்பட்ட பின்னர் இராணுவப் புலனாய்வுத் துறைக் கட்டடத்தில் தடுத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

இஸ்லாமிய சகோதரத்துவ அமைப்பு எகிப்தில் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட, மிகவும் பலம்வாய்ந்த ஓர் அமைப்பு. அரபு நாடுகளில் இந்த அமைப்பின் கிளைகள் இயங்குகின்ற போதிலும் கடந்த காலங்களில் எகிப்திய ஆட்சியாளர்களுக்குச் சவாலாகவே இந்த அமைப்பு செயற்பட்டு வந்துள்ளது.

இந்த அமைப்பின் உறுப்பினர்கள் அல்லது ஆதரவாளர்கள் 6 லட்சம் பேர் வரை உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. புரட்சிகள், சதிகள், அரசியல் கொலைகள் போன்ற குற்றச்சாட்டுகளுக்கு உட்பட்ட இந்த அமைப்பு 1948, 1954, 1965 ஆம் ஆண்டுகளில் ஆட்சியாளர்களின் கடுமையான அடக்குமுறைகளுக்கு உள்ளாகியது. முக்கிய தலைவர்கள் பலர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

அரபு வசந்தம் எனப்படும் மக்கள் எழுச்சி காரணமாக 2011இல் பதவி இழந்தவர் ஹொஸ்னி முபாரக். சிரியாவில் கடந்த இரண்டு வருடங்களாக இடம்பெறும் கிளர்ச்சியில் ஜனாதிபதி அஸாத்தைப் பதவி நீக்கம் செய்யமுடியாது அரபு வசந்தம் பலமிழந்து வருகிறது.

இத்தகைய சூழமைவில் எகிப்தில் அரபு வசந்தம் மூலம் பதவிக்கு வந்த மோர்சி பதவி இழந்துவிட்டார். இது அரபு வசந்தத்தின் பின்னடைவையே கோடி காட்டுகிறது. சிரியாவில் ஜனாதிபதி அஸாத்துக்கு எதிரான கிளர்ச்சியாளர்கள் இறுதித் தோல்வியைத் தழுவும்போது அரபு வசந்தமும் முடிவுக்கு வந்துவிடும் என்று பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது. அரபு நாடுகளில் ஆட்சி ஸ்திரமின்மையை இது ஏற்படுத்திவிட்டிருந்தாலும் இன்னும் சில ஆண்டுகளுக்கு இத்தகைய ஒரு கிளர்ச்சிக்கு வாய்ப்பு இருக்க மாட்டாது என்றே நம்பப்படுகிறது.

லிபியாவில் கடாபி கொலைசெய்யப்பட்டு அவரது ஆட்சி முடிவுக்கு வந்த சமயம் அரச படைகளின் ஆயுதங்கள் சூடான், சினாய் ஊடாக எகிப்திலுள்ள இஸ்லாமிய தீவிரவாத அமைப்புகளிடமும், வட மாலியில் உள்ள அல் - குவைதா இயக்கத்திடமும் சென்றடைந்தன. சிரியாவில் அஸாத் ஆட்சி கவிழ்க்கப்படுமானால் சிரியாவின் அரச படைகளின் ஆயுதங்களும் இதேபோன்று கைமாறக்கூடும். அதனால்தான் சிரியாவில் கிளர்ச்சிக் குழுக்களுக்கு ஆயுதங்கள் வழங்க அமெரிக்கா தயங்குகிறது.

மத்திய கிழக்கில் அரபு வசந்தம் ஏற்பட்டபோது அமெரிக்கா உட்படப் பெரும்பாலான மேற்கு நாடுகள் அதற்கு ஆதரவு தெரிவித்தன. ஆனாலும் அரபு வசந்தம் இஸ்லாமிய தீவிரவாதிகளின் கை ஓங்கவே வழி வகுத்தது. லிபியாவிலும் எகிப்திலும் இப்படியான நிலைமை காணப்படுகிறது. சிரியாவில் அஸாத்தின் ஆட்சி கவிழுமானால் அதிகாரத்துக்கு வரப்போகிறவர்கள் இஸ்லாமிய தீவிரவாத அமைப்புகள்தான். ஆகவே, மோர்சியின் ஆட்சிக்கவிழ்ப்புப் பின்னணியிலும் வெளிநாட்டுச் சதி இருக்கக் கூடும் எனக் கருத இடமுண்டு.

தற்பொழுது எகிப்தில் இடம்பெறும் சம்பவங்கள் இராணுவத்தின் கரங்களைப் பலப்படுத்தவே வழிவகுக்கும். மோர்சி எதிர்ப்பாளர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் இடையில் நடைபெறும் மோதல்களில் பயனடையப் போகிறவர்கள் இராணுவத்தினரே.

இப்போதைய இராணுவத் தலையீடு முடிவுக்கு வந்து எகிப்தில் மீண்டும் ஜனநாயக ஆட்சி ஏற்படுத்தப்பட வேண்டும். மக்களால் தெரிவுசெய்யப்பட்ட மோர்சி மீண்டும் பதவியில் அமர்த்தப்படவேண்டும். அதுவே ஜனநாயகம் அழிந்துவிடாமாலிருக்க வழி வகுக்கும். இல்லையேல் இந்த மறைமுகமான ஆட்சிமுறை, ஆசிய மற்றும் ஆபிரிக்க நாடுகளுக்கு தாவிப் பரவும் மிகப் பொல்லாத பேராபத்து உண்டு.

# காலத்தால் வாழும் ஓவியம்

எஸ்.ரி.கே.

சிறந்த சிற்ப மேதையாக விளங்கிய ஏ.வி.ஆனந்தன் 50 வருடங்களுக்கு மேலாக சிற்பத்துறையில் சிறந்து விளங்கி சிற்பத்துறைக்காகவே தன்னை அர்ப்பணித்த ஒப்பற்ற பெரும் கலைஞராக விளங்கியவர். மரச்சிற்பத்தை வடிவமைப்பதில் தனித்துமான ஆற்றல் பெற்ற இவர் இலங்கை யளவில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் புகழ் படைத்தவராக விளங்கினார். திருமறைக்கலாமன்றத்தின் மூத்த உறுப்பினராக விளங்கி கலைப் பணி ஆற்றியதுடன் மல்லாகம் அரிமாக்கழகத்தின் தலைவராக விளங்கி சமூகப்பணியாற்றிய பெருந்தகை. தெல்லிப்பழை துர்க்காபுரம் சிற்பாலயத்தை உருவாக்கி அதன் இயக்குநராக விளங்கி சிற்பத்துறையில் தன்னுடைய பங்களிப்பை வழங்கியவர் ஏ.வி.ஆனந்தன். ஈழத்துக் கலைத்துறை வரலாற்றைப் பொறுத்த வரையில் சிற்பத்துறையில் தன்னுடைய ஆழ்ந்த புலமையின் காரணமாக எமது மண்ணில் தலைசிறந்த சிற்ப மேதையாக விளங்கியதுடன் வெளிநாடுகளிலும் தன்புகழை நிலைநாட்டிய ஒப்பற்ற கலைஞராக விளங்கிய ஏ.வி. ஆனந்தன் இவ்வுலகை விட்டு நீத்து விட்டார். அவருடைய இழப்பானது சிற்பத்துறையைப் பொறுத்தவரையில் பேரிழப்பாகும்.

ஈழத்தின் புகழ் படைத்த சிற்பியான ஏ.வி.ஆனந்தன் ஜனாதிபதி விருது, ஆளுநர் விருது உட்பட இலங்கை அரசின் கலாபூசண விருதையும் பெற்றுள்ளார். துர்க்காபுரத்தில் சிற்பாலயம் அமைத்து மரத்தில் உருவங்களை அமைக்கும் சிற்பக்கலைஞராக விளங்கியவர். ஒரு கலைப் பரம்பரையின் வாரிசான இவர் முந்நூறுக்கும் மேற்பட்ட சிற்பங்களைச் செதுக்கியும் இருபத்தைந்துக்கு மேற்பட்ட தனி மனித சிற்பக் கண்காட்சிகளை இலங்கையின் பல பாகங்களிலும் நடத்தியதுடன் ஐரோப்பிய நாடுகள் சிலவற்றிலும் நடத்தி பல பட்டங்களைப் பெற்றவர். இவரால் செதுக்கப்பட்ட பனைமரத்திலாலான சிற்பம் ரோமாபுரி வத்திக்கான் கலைக்கூடத்திலும், "மாபெரும் புறப்பாடு" எனப்படும் பெரிய அளவி [illegible] வைக்கப்பட்டுள்ளன. சுனாமிப்பேரலை கோரத்தாண்டவமாடிய சோக நிகழ்வுகளைச் சித்தரிக்கும் தனியொரு மரத்தில் செதுக்கப்பட்ட சிற்பம் மாபெரும் சோக நிகழ்வை வெகு அற்புதமாக வெளிப்படுத்தும் ஆவணமாக இவரால் படைக்கப்பட்டுள்ளமை சிறப்பிற்குரியது.

சுனாமி இலங்கையின் கரையோரங்களில் ஏற்படுத்திய அழிவுகளை என்றும் நினைவில் கொள்ளத்தக்க ஆவணங்களாகப் பலர் பதிவு செய்து வைத்துள்ளார்கள். அதனடிப்படையில், சுனாமிப்பேரலையின் கோரத் தாண்டவங்களை ஒரு தனி மரக்குற்றியில் சிற்பமாகச் செதுக்கி தனது சிற்பக்கூடத்தில் காட்சிப்படுத்தியுள்ளார் சிற்பக்கலைஞன் ஏ.வி.ஆனந்தன். சிற்ப சாஸ்திரத்தில் மேற்கொள்ளப்படும் உயர்புடைப்பு, தாள் புடைப்பு, கோதிச்சிதை முப்பரிமாணம் போன்ற அம்சங்கள் சேர்ந்து சிற்பத்தை முழுமைப்படுத்துகின்றது.





சுனாமிப்பேரலையால் காவு கொள்ளப்பட்ட கரையோரப் பிரதேசங்களுக்கு நேரில் சென்று, கரையொதுங்கியும் புதைந்தும் கிடந்த சடலங்களையும், இருந்த சுவடே தெரியாமல் சிதைந்து கிடந்த வதிவிடங்களையும் மற்றும் அவற்றைப் பார்த்துப் பதறி ஓலமிடும் உற்றார் உறவினரையும் கண்டும் கேட்டும் உணர்ந்தும் துயருற்ற கலைஞனின் ஆவேச வெளிப்பாடாக எட்டடி உயரமும் பத்தடி சுற்றறளவும் கொண்ட மிகப்பிரமாண்டமான ஒரு தனிக்குற்றியில் செதுக்கல் படிமங்களாக இச்சிற்பத்தைப் பொறித்துள்ளார். எவராலும் கற்பனை செய்து பார்க்க முடியாத கலை வடிவமாகவும், உலகின் மாபெரும் சோக நிகழ்வை ஒரு ஆவணமாகவும் ஆனந்தன் வடித்துத் தந்துவிட்டுச் சென்றுள்ளார். பொது கட்புலனில் படிவத்திலிருந்து உய்த்துணர்ந்து பார்த்துப் புரிந்து கொள்ளும் பாங்கிலான சிற்பச் செதுக்கல்கள் அம் மரக்குற்றியில் கலாபூர்வமாகப் பதிந்துள்ளன. சுனாமி அவலத்தை நினைவு கூருவதற்கு ஏற்ற சிற்பமாக இச்சிற்பம் விளங்குகின்ற வகையில் இச்சிற்பத்தினை சிறப்பாக வடித்துள்ளார். தன்னுடைய காலத்தில் கலைமரபினைப் பேண வேண்டும் என்ற அவாவின் காரணமாக இளம் தலைமுறையினருக்கு தனது சிற்பத்துறைசார் கலைச் செயற்பாடுகளைப் பயிற்றுவித்து சிற்பாலயம் என்னும் கலைக்கூடத்தை இவர் நடத்தி வந்துள்ளமை சிறப்பிற்குரியது. சிற்பத்துறை வளர்சிக்காகப் பலர் பணியாற்றியுள்ள நிலையில் ஏ.வி.ஆனந்தனுடைய பங்களிப்பானது சிறப்பிடம் பெறுவதுடன், காலத்தால் நினைவு கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகவும் விளங்குகின்றது. இவருடைய இழப்பு சிற்பத்துறையைப் பொறுத்தவரையில் ஈடு செய்ய முடியாத தொன்றாக விளங்குகின்றது. தன்னுடைய வாழ்க்கையைக் கலைக்காக அர்ப்பணித்து சிற்பத்துறையின் மீது கொண்ட அதீத ஈடுபாட்டின் காரணமாக சிற்பத்துறைக்கு பங்காற்றிய மாபெரும் கலைஞனுடைய கலைச்செயற்பாடானது காலத்தால் என்றும் போற்றப்பட வேண்டிய ஒன்றாகவும், நினைவு கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகவும் விளங்குகின்றது.

> "ஈழத்துக் கலைத்துறை வரலாற்றைப் பொறுத்த வரையில் சிற்பத்துறையில் தன்னுடைய ஆழ்ந்த புலமையின் காரணமாக எமது மண்ணில் தலைசிறந்த சிற்ப மேதையாக விளங்கியதுடன் வெளிநாடுகளிலும் தன்புகழை நிலைநாட்டிய ஒப்பற்ற கலைஞராக விளங்கிய ஏ.வி. ஆனந்தன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலில் நழுவல் போக்கு நன்மை பயப்பதில்லை

உப்புல் யோசெப் பெர்னாண்டோ
தமிழில்- வீஎஸ்ரீ



ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில் மஹிந்த ராஜபக்ஷவை ' றிப்போர்ட்டர் ' என சந்திரிகா விமர்சித்த சந்தர்ப்பங்கள் பலவுண்டு. அமைச்சரவைக் கூட்டங்களில் ஏதாவது பிரச்சினைகளை முன்வைத்து, ஏனைய அமைச்சர்களையும் தூண்டிவிட்டு, அவை குறித்த தகவல்களைப் பத்திரிகைக்காரர்களுக்கு மஹிந்த வழங்குவதாக சந்திரிகா குற்றம் சாட்டியதுண்டு.

ஆனால் மஹிந்த, ஜனாதிபதியானதன் பின்னர் அமைச்சரவைக் கூட்ட இரகசியங்கள் அமைச்சர்கள் எவராலும் தனிப்பட்ட முறையில் செய்தியாளர்களுக்கு வழங்கப்படுவதில்லை. அப்படித்தான் அமைச்சரவைக் கூட்ட விவரங்கள் வெளிச்சென்றாலும், அமைச்சரவைக் கூட்டத்தில் மஹிந்த வெளியிடும் பகிடிகளை மட்டுமே அவர்கள் பத்திரிகைகளுக்கு வழங்குவது வழக்கம். மஹிந்தவுக்கு கேட்கத்தக்கதாக உரத்துக் கருத்து வெளியிடும் அம்மைச்சரொருவரையும் அமைச்சரவைக் கூட்டத்தில் காண முடிந்ததில்லை. அந்த அளவுக்கு அமைச்சர்கள் அனைவருமே ' யேஸ் சேர்' போடும் போக்கே அங்கு நிலவும்.

### அமைச்சரவைக் கூட்டத்தில் வழமைக்கு மாறான வாதப் பிரதிவாதங்கள்

ஆனால் கடந்த மாத நடுப்பகுதியில் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டமொன்றின்போது பெரும் அமளிதுமளி ஏற்பட்டதாக கூறப்படுகிறது. அதற்கான முக்கியமான காரணம் அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தில் அரசு மேற்கொள்ள ஆர்வம் காட்டும் மாற்றங்கள் தொடர்பானதே. சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில் அமைச்சரவைக் கூட்டங்களில் எடுக்கப்படும் தீர்மானங்களை மஹிந்த விமர்சிக்க முயன்ற சந்தர்ப்பங்களில் ஏனைய அமைச்சர்களில் ஒரு சாரார் மஹிந்தவுக்கும், மற்றொரு சாரார் சந்திரிகாவுக்கும் சார்பாக குரலெழுப்பி குழப்பம் விளைவித்த சம்பவங்கள் அண்மைய அமைச்சரவைக் கூட்டத்தில் ஏற்பட்ட அமளிதுமளியின் போது மஹிந்தவின் மனதில் நினைவுக்கு வந்திருக்கலாம்.

அண்மையில் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டமொன்றின்போது மஹிந்தவும், முன்னர் சந்திரிகாவுக்கு ஏற்பட்ட அனுபவத்தை ஒத்ததொரு நிலைக்கு முகம் கொடுக்க நேர்ந்தது. அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தில் மாற்றம் ஏற்படுத்தும் யோசனைக்கு எதிராக அமைச்சர்களான ராஜித சேனரத்ன, வாசுதேவ நாணயக்கார, டியூகுணசேகர ஆகியோரும், அதற்கு ஆதரவாக சம்பிக ரணவக்க, விமல் வீரவன்ச ஆகியோரும் கடும் வாதப்பிரதிவாதங்களில் ஈடுபட்ட வேளை, ஜனாதிபதி மஹிந்த அவ்விடத்தை விட்டு வெளியேறியமை, அப்பிரச்சினை அடுத்த கட்டத்தில் தனது தலைமீது சுமத்தப்படுமுன்னர் தாம் நழுவிவிடும் முனைப்பிலாகும். அன்றைய அமைச்சரவைக் கூட்ட குழப்பங்கள் குறித்தும் பத்திரிகைகள் அடுத்த நாளைய தமது பதிப்பில் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்திருந்தன.

உண்மையில் அன்று ஜனாதிபதி மஹிந்த கைக்கொண்ட அணுகுமுறை முன்னாள்பிரதமர்எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்கா தமது ஆட்சிக் காலத்தில் முக்கிய பிரச்சினைகளைச் சமாளிக்க கையாண்ட விதத்தை ஒட்டியதொன்றே. பண்டாரநாயக நாட்டின் பிரதமர் பதவியை ஏற்றதையடுத்து அரசில் அங்கம் வகித்த அரசின் இடது சாரி மற்றும் வலது சாரித் தரப்புக்களுக்கு மத்தியில் கடுமையான போட்டி நிலை உருவாகியது. அதில் தாம் எந்தவொரு தரப்புக்கும் ஆதரவானவரல்ல என்ற நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் விதத்தில் பண்டாரநாயக்கா தூர விலகி நின்றதால், அரசின் அதிகாரம் நலிவுற நேர்ந்தது. அரசில் அங்கம் வகித்த இடதுசாரித் தரப்பினரும், வலதுசாரித் தரப்பினரும் அதிகாரத்தைத் தத்தமது கைகளில் எடுத்துச் செயற்பட்டு பண்டாரநாயகாவைத் தத்தமது தரப்புக் கைதியாக ஆக்கிக்கொள்ள முயன்றனர். அன்றைய பண்டாரநாயகா அரசின் நிலை குறித்து அவ்வேளை அரசில் அமைச்சராகவிருந்த டி.பி.இலங்கரத்ன பின்னர் தாம் எழுதிய 'யுகமொன்றின் பயணம்' என்றநூலில்தெளிவாகவிவரித்திருந்தார்.

### முன்னாள் அமைச்சர் டி.பி.இலங்கரத்னவின் அனுபவப் பகிர்வு

''இடதுசாரித் தலைவரும் அமைச்சருமான பிலிப் குணவர்த்தனா கூட்டுறவு வங்கிச் சட்டமூலம் மற்றும் காணி உச்ச வரம்புச் சட்டமூலத்தைச் சமர்ப்பித்ததையடுத்தே முதன்முதலாக பண்டாரநாயகா அரசுக்குள் கருத்து வேறுபாடுகளும் கருத்து மோதல்களும் ஆரம்பித்தன. பண்டாரநாயக்காவின் தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்குள் பிலிப் குணவர்த்தனவின் தலைமையிலான புரட்சிவாத சமசமாசக் கட்சி மேலாதிக்கம் செலுத்த முயல்வதாக குற்றம் சாட்டப்பட்டது. காணி உச்ச வரம்புச் சட்டத்தால் பாதிப்பை எதிர்நோக்கிய நில உரிமையாளர்களும், வங்கித் தொழில் தரப்பினரும் இந்த எதிர்ப்பலையை மேலும் தூண்டி வளர்த்தனர். புரட்சிவாத சமசமாசக் கட்சிக்கு எதிரான தமது நிலைப்பாட்டுக்கு பிரதமர் பண்டாரநாயகாவின் ஆதரவையும் ஈட்டிக்கொள்ளும் நோக்கில் பத்து அமைச்சர்கள் அமைச்சரவைக் கூட்டங்களைப் பகிஷ்கரித்தனர். ஆயினும் அதில் நிதி அமைச்சர் எம்.டபிள்யூ.எச்.டி. சில்வா, அமைச்சர் ஏ.பி.ஜயசூரிய ஆகியோர் மட்டுமன்றி நானும் கூட சம்பந்தப்பட்டிருக்கவில்லை. பிரதமர் பண்டாரநாயகா இத்தகைய எதிர்ப்பு நிலைப்பாட்டை சிறிதளவும் எதிர்பார்த்திருக்கவில்லை.

அமைச்சர் பிலிப் குணவர்த்தனா சமர்ப்பித்த சட்ட மூலங்கள் மூலம் நாட்டின் சாதாரண பொதுமக்கள் பெரு நன்மையடைவர் என பிரதமர் பண்டாரநாயகா நம்பினார்.

இதனால் எதிர்ப்பைத் தூண்டி வந்த பத்து அமைச்சர்களையும் பதவிகளிலிருந்து விலக்கி அவர்களுக்குப் பதிலாக புதியவர்களை பிரதமர் நியமித்தமை சுதந்திரக்கட்சி பிளவுபட வழி வகுத்தது.

உறுதியான நிலைப்பாடொன்றைக் கடைக்கொள்ளாது பரஸ்பரம் மாற்று நிலைப்பாடுகள் கொண்ட இரு தரப்புக்களையும் அனுசரித்து நடக்க முயலும் போக்கு சுயமாக முடிவெடுக்கஇயலாதநிலையொன்றை ஏற்படுத்த வல்லது. அதனாலோ என்னமோ தமது தனிப்பட்ட ஆதரவாளர்களது ஆலோசனைகளுக்கமைய பிரதமர் பண்டாரநாயகா அமைச்சரவையின் பெரும்பாலான உறுப்பினர்களின் பக்கக் கருத்துக்களை ஏற்றுச் செயற்படும் போக்கைக் கைக்கொள்ள நேர்ந்தது..

சில நாள்களின் பின்னர் அரசில் அங்கம் வகிக்கும் இடதுசாரி அமைச்சர்களான பிலிப் குணவர்த்தன மற்றும் வில்லியம் சில்வா ஆகியோரின் பதவி அதிகாரங்களில் சிலவற்றை குறைக்கப் போவதாக வெளிவந்த செய்திகளுக்காக பிரதமரிடம் நான் எனது எதிர்ப்பைத் தெரிவித்தேன். பிரதமரும் நான் கேள்விப்பட்ட செய்தி உண்மையானதென்பதை உறுதி செய்தார்.

நானும் அரசில் அங்கம் வகித்த முக்கிய சில நாடாளுமன்ற உறுப்பினர்களும், இடதுசாரி அமைச்சர்கள் இருவரதும் அமைச்சரவைப் பொறுப்புக்களில் எதனையும் மீளப்பெறாது தடுத்து நிறுத்த முயற்சிக்கும் விதத்தில் பிரதமர் பண்டாரநாயக்காவைச் சந்தித்து அது தொடர்பாக வற்புறுத்தினோம். அவ்விடயம் தொடர்பாக நாம் மேற்கொள்ளும் முயற்சிகளுக்குத் தாம் எதிரானவரல்ல எனவும், பிரதமர் பண்டாரநாயக்கா அவ்வேளை தெரிவித்தார்.

குருநாகலில் இடம்பெற்ற சுதந்திரக் கட்சியின் வருடாந்த மாநாட்டில் பிரதமர் உரையாற்றியவேளை எமது எதிர்பார்ப்புக்கு மாறாக இடதுசாரி அமைச்சர்கள் இருவரினதும் செயற்பாடுகள் குறித்து கண்டனம் தெரிவிக்கும் விதத்தில் விமர்சித்தார். அமைச்சரவைக் கூட்டத்தைப் புறக்கணித்த அமைச்சர்கள் தரப்புக்கு தலைமை தாங்கிய ஸ்ரான்லி சொய்சா அவ்வேளை என்னைப் பார்த்து ஏளனப் புன்னகை செய்தார்.

பிரதமர் பண்டாரநாயகாவின் அந்த குருநாகல் மாநாட்டு உரையையடுத்து இலங்கை அரசியல் நிலையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் உருவாகின. பொதுமக்கள் மத்தியில் அரசின் மீதிருந்த நம்பிக்கையும் விசுவாசமும் நலிவடைய ஆரம்பித்தன. எதிர்க்கட்சியினரும் அரசின் போக்குக் குறித்து கடுமையாக விமர்சிக்க ஆரம்பித்தனர்.

1956 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதியன்று பிலிப் குணவர்த்தனவும் வில்லியம் சில்வாவும் தமது அமைச்சுப் பதவிகளைத் துறந்தனர். புரட்சிவாத சமசமாசக் கட்சி அரசதரப்பிலிருந்து விலகிக் கொண்டது. அரசுக்குள்ளிலிருந்து சதி செய்தவர்கள் மற்றும் தமது நெருங்கிய சகாக்களின் வற்புறுத்தல் காரணமாக அரசின் பெரும்பான்மை நாடாளுமன்ற உறுப்பினர்களது தரப்புக்கு ஆதரவாகச் செயற்படும் நிலைப்பாட்டை மேற்கொண்டே பிரதமர் பண்டாரநாயக்கா குருநாகல் மாநாட்டில் இடதுசாரித் தரப்புக்கு அதிருப்தியளிக்கும் வகையிலான உரையை நிகழ்த்தியமை துரதிர்ஷ்டவசமானது. நாம் பிலிப் குணவர்த்தனாவையும் வில்லியம் சில்வாவையும் அரசில் அங்கம் வகிக்க வைக்க மேற்கொண்ட முயற்சிகள் எவையும் வெற்றியளிக்கவில்லை. இடதுசாரி அமைச்சர்கள் இருவரும் அரசிலிருந்து விலகிய பின்னர் புதிய அமைச்சரவை உறுப்பினர்கள் தேசாதிபதியின் முன்னால் பதவிப்பிரமாணம் எடுத்துக்கொண்டதன் பின்னர் மதியபோசன விருந்துக்காக அலரி மாளிகைக்கு வருமாறு பிரதமரால் அழைப்பு விடுக்கப்பட்டது.

என்னையும் ஏ.பி.ஜெயசூரியாவையும் தவிர ஏனைய அனைத்து அமைச்சர்களும் நேரம் பிந்தியே அலரி மாளிகைக்கு வந்திருந்தனர். சத்தியப் பிரமாண நிகழ்வு முடிந்ததும் அமைச்சர்கள் ஸ்ரான்லி டி.சொய்சாவின் இல்லம் சென்று பாற்சோறு உண்டு வெற்றியைக் கொண்டாடிய பின்னரே அலரி மாளிகைக்கு வருவதாக பிரதமருக்கு நான் தெரிவித்தேன். பிரதமர் அவர்களை விழித்து 'உங்களது வெற்றிக்கான பாற்சோறு, எனது அழைப்பை விட முக்கியமாகிப் போய்விட்டதா? இப்போது உண்ணுங்கள் எனது சோற்றை' என்றார் கடுந்தொனியில். அன்றைய மதிய போசன விருந்து போன்று நிசப்தம் நிலவிய விருந்து வைபவத்தை நான் முன்னெப்போதும் கண்டதில்லை'' என ரி.பி.இலங்கரத்ன தமது நூலில் விபரித்திருந்தார்.

### நழுவல் போக்கு நன்மை பயக்காது

முக்கியமான விடயங்களில் அரசுத் தலைவர்கள் உறுதியான நிலைப்பாடொன்றை மேற்கொள்ளாது நழுவல் போக்கைக் கடைப்பிடிப்பதால் அரசின் இருப்புக்கே ஆபத்து ஏற்படும் என்பதற்கான உதாரணமாக இதனைக் கொள்ள இயலும்.

ஜனாதிபதி மஹிந்தவும் இன்று அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தில் மாற்றங்கள் ஏற்படுத்தும் விடயத்தில் தமது உறுதியான நிலைப்பாட்டை தெளிவாக வெளிப்படுத்தாது, அரச தரப்பினர் தமக்குள் கட்சி பிரிந்து அடித்துப் பிடித்து தமது பலத்தை வெளிப்படுத்த இடமளித்தால் பண்டாரநாயக்காவின் அரசுக்கு ஏற்பட்ட கதிக்கே இன்றைய அரசும் உட்பட நேரும்.

புத்தரக்கித்ததேரரின் ஆசீர்வாதத்துடன் தமது பலத்தை வெளிப்படுத்த முயன்ற தென்பகுதி அரசியல் தலைவர்களின் அழுத்தங்களுக்கு அன்றைய பிரதமர் பண்டார நாயக்கா கீழ்ப்படிந்ததால் நட்டமுற நேர்ந்தது. தற்போது ஜனாதிபதி மஹிந்தவும் இந்திய அரசின் ஆசீர்வாதத்துடன் மேற்கொள்ளப்பட்ட அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தில் மாற்றம் மேற்கொள்ள முயலும் கடுங்கோட்பாட்டு அமைச்சர்களின் அழுத்தங்களுக்குக் கீழ்ப்படியும் நிலைப்பாட்டைத் தளர்த்திக் கொண்டுள்ளதாகத் தோன்றுகிறது. 13 ஆவது திருத்தத்தில் மாற்றம் மேற்கொள்ளும் முயற்சி குறித்து இந்தியா வெளியிட்ட அதிருப்தி மற்றும் கண்டிப்பு என்பவை காரணமாகவே ஜனாதிபதி தமது நிலைப்பாட்டைத் தளர்த்திக் கொண்டுள்ளார் என்பதை அரசியல் அனுபவசாலிகள் மட்டுமே அறிவர்.

அந்த வகையில் ஜனாதிபதி மஹிந்த இன்று அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை ஆதரிப்போருக்கும் சரி , எதிர்ப்போருக்கும் சரி ஆதரவாக இல்லாத இரட்டைப் போக்கையே கைக்கொள்கிறார். இது இரு தரப்புக்களின் ஆதரவையும் இழக்க வேண்டிய ஒரு நிலைக்கு ஜனாதிபதியை இட்டுச் செல்லக் கூடும். பண்டாரநாயக்காவின் அரசுக்கும் கடைசியில் இத்தகைய நிலையே ஏற்பட்டதென்பதை வரலாறு உறுதிப்படுத்துகிறது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் கரத்தில்
19.06.1949





திதி: ஸ்கந்த பஞ்சமி
(13.07.2013) சனிக்கிழமை

ஆண்டவன் தாளில்
04.07.1992

## திருமதி பரமேஸ்வரி சரவணமுத்து

கண்ணீரில் கரைந்ததம்மா ஆண்டுகள் இருபத்தொன்று
கண்முன்னே நீங்களில்லை உறவாட எம்மோடு
உங்களை எண்ணாத நாளில்லை இதயத்தில் எப்போதும்
உங்கள் நினைவுகளே எம்மையிங்கு ஆளுதம்மா!
இறுதிவரை எம்மோடு சேர்ந்திருப்பீர்கள் என்றிருந்தோம்
இடைநடுவே தவிக்கவிட்டு எங்கே தாயே சென்றீர்கள்?
எங்கள் உயிர் உள்ளவரை உங்கள் நாமம் மறவோம்
எம் தாயின் ஆத்மா சாந்தியடைய
இறைவனடி வேண்டுகின்றோம்.

கு.சரவணமுத்து (கணவர்- ஓய்வுபெற்றவர்,
இலங்கை துறைமுக அதிகாரசபை,
திருகோணமலை)
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

வேம்படி ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாய்களால் தொல்லை

அக்கராயன், ஜூலை 13
துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் நாய்களின் தொல்லையால் மக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.
பழைய முறிகண்டிக் கிராமத்தில் தற்போது 36 குடும்பங்கள் வசித்து வருகின்றன. இந்தக் குடும்பங்கள் மீள்குடியமர்ந்த போது உதவி அமைப்புக்களால் ஆடு, மாடு, கோழி என்பன வழங்கப்பட்டன.
ஆனால் அலைந்து திரியும் கட்டாக்காலி நாய்கள் அவற்றைக் கடித்துக் குதறி வருகின்றன. இதனால் அவைகளில்சில உயிரிழந்துமுள்ளன.
மேலும் குடியிருப்போர் சிலர் தமது வீடுகளில் அதிகமான நாய்களை வளர்த்து வருவதையும் காணமுடிகின்றது. இவற்றினாலும் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.
பழைய முறிகண்டிக் கிராமத்தில் கால்நடை வளர்ப்பு ஒரு பிரதான தொழிலாக மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)

### முல்லைத்தீவு நாயாற்றுக் கடலில்

# சட்டவிரோதமாக மீன்பிடித்த 9 மீனவர்களுக்கும் பிணை

முல்லைத்தீவு, ஜூலை 13
இரவு வேளையில் வெளிச்சம் பாய்ச்சி சுருக்கு வலையைப் பாவித்து மீன்பிடித்தமை தொடர்பாகக் கைது செய்யப்பட்ட 9 மீனவர்கள் முல்லைத்தீவு நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.
திருகோணமலையில் இருந்து மூன்று பிளாஸ்ரிக் படகுகளில் வந்து முல்லைத்தீவு நாயாற்றுக் கடலில் கடந்த புதன்கிழமை இரவு வெளிச்சம் பாய்ச்சி சுருக்கு வலையைப் பாவித்து மீன்பிடித்த ஒன்பது மீனவர்கள் கைது செய்யப்பட்டு முல்லைத்தீவு நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டபோது அவர்களைப் பிணையில் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.



முல்லைத்தீவுக் கடற்பரப்பில் சுருக்கு வலை மூலமாக பகலில் மட்டுமே தொழில் புரியலாம் மற்றும் இரவில் இந்தத் தொழில் முற்றாகத் தடை செய்யப்பட வேண்டும் என்பது முல்லைத்தீவு மீனவர்களால் கடற்றொழில் அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளில் ஒன்றாகும்.
இதேவேளை யாழ்ப்பாணம் கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள் முல்லைத்தீவுக்குச் சென்று முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்தினர் மற்றும் கடற்படையினருடன் இணைந்து சோதனைகளில் ஈடுபட்டபோது இந்த மீனவர்களைக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தினர். அவர்கள் மீதான குற்றச்சாட்டை விசாரித்த நீதிமன்றம் இந்த மீனவர்கள் ஒன்பது பேரையும் பிணையில் செல்ல அனுமதித்தது.
மேலும் இது பற்றிய மறு விசாரணை எதிர்வரும் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளதாகவும் கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்தினர் தெரிவித்தனர். (க-51)

## அக்கராயன் ம.வி. மாணவர்களுக்கு மூன்று வெற்றிகள்

அக்கராயன், ஜூலை 13
வட மாகாண தமிழ் மொழித் திறன் போட்டியில் அக்கராயன் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த மூன்று மாணவர்கள் வெற்றியீட்டியுள்ளனர்.
பிரிவு 5 க்கான பாவோதல் போட்டியில் பு.வினுஜா இரண்டாவது இடத்தையும், பிரிவு 4 க்கான பாவோதல் போட்டியில் ஜே.சர்மிலா இரண்டாவது இடத்தையும் பிரிவு 5க்கான பேச்சுப் போட்டியில் மோ.அனுசாயினி மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளனர். (க-18)

## பார்வையற்றோர் சங்கத்தில் பதிவுகளை மேற்கொள்ளவும்

பரந்தன், ஜூலை 13
வடமாகாணத்தைச் சேர்ந்த பார்வையற்றவர்களும், பார்வைக் குறைபாடு உடையவர்களும் தமது பெயர் விவரங்களை பரந்தனின் இயங்கும் பார்வையற்றோர் சங்கத்தின் வடமாகாணக் கிளை அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு அதன் செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.
இலங்கை பார்வையற்றோர் சங்கத்தின் வடமாகாணக் கிளை அலுவலகம் தற்போது ஏ-35 வீதியிலுள்ள பரந்தன் பொதுநோக்கு மண்டபத்தில் இயங்கி வருகின்றது.
வடமாகாணத்தைச் சேர்ந்த பார்வையற்றவர்கள் மற்றும் பார்வைக் குறைபாடு உடையவர்கள் தமது பெயர் விவரங்களை கிழமை நாள்களில் காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை பதிவு செய்து கொள்ள முடியுமென பார்வையற்றோர் சங்கத்தின் வடமாகாணக் கிளையின் செயலாளரான தென்னக்கோன் சரத் கேட்டுக் கொண்டுள்ளார்.
இது தொடர்பாக 0770195155, 0772082460 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியுமெனவும் அவர் அறிவித்துள்ளார். (க)

## வயோதிபர் வீட்டில் திருட்டு

வவுனியா, ஜூலை 13
வவுனியா தவசிக்குளம் பகுதியில் வயோதிபர் ஒருவரின் வீட்டில் திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.
வயோதிபர் தனித்திருந்த வேளை திருடர் குழுவொன்று வீட்டினுள் நுழைந்து அவரைக் கட்டி வைத்துவிட்டு வீட்டில் இருந்த நகைகளையும் பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர்.



திருடர்கள் பூட்டியிருந்த கதவை உடைத்த பின்னர் உள்ளே நுழைந்து திருட்டு நடவடிக்கையில் ஈடுபட்ட போது அந்த வயோதிபர் மிகுந்த அச்சத்துடன் உரத்துச் சத்தமிட்டுள்ளார். ஆனால் திருடர்கள் அவரது வாயைப் பொத்தியதுடன் கூரிய ஆயுதங்களைக் காட்டி அச்சுறுதியுள்ளனர்.
இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க-402)



கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையால் கண்டாவளையின் முரசுமோட்டை முறைசாராக் கல்விப் பிரிவினரால் நடத்தப்படும் தையல் பயிற்சியில் கலந்து கொள்ளும் பெண்களின் ஒரு பகுதியினர். (க-18)

## கேப்பாபிலவு வீதியில் யானையின் அட்டகாசம்

முள்ளியவளை, ஜூலை 13
புதுக்குடியிருப்பிலிருந்து முள்ளியவளை செல்லும் கேப்பாபிலவு வீதியில் யானை ஒன்றின் அட்டகாசம் எல்லை மீறிக் காணப்படுகின்றது.
இங்குள்ள கள்ளியடி என்னும் இடத்திலுள்ள கோரை வயல் பகுதிகளிலேயே இந்த யானையின் அட்டகாசம் இடம்பெற்று வருகிறது.
இந்த யானை தென்பகுதியிலிருந்து கொண்டுவரப்பட்டு விடப்பட்டுள்ளதாகவும் இந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.
நெல் வயல்களில் இறங்கிப் பயிர்களைச் சேதமாக்கும் இந்த யானை விவசாயிகளைக் கண்டதும் ஆவேசமடைந்து அவர்களைத் தாக்கும் நோக்கத்துடன் துரத்தி வருகின்றது. இதனால் விவசாயிகள் வயல் நிலங்களுக்குச் செல்வதற்கு அஞ்சுகின்ற நிலை உருவாகியுள்ளது.
மேலும் பயிர்களை அழித்து வரும் இந்த யானை விவசாயிகளின் காவல் குடிசைகளையும் விட்டு வைக்கவில்லை.
இது தொடர்பாக இராணுவத்தினருக்கும், பிரதேச செயலருக்கும் மக்களால் அறிவிக்கப்பட்டுள்ளது.
கடந்த ஆண்டும் அட்டகாசம் புரிந்த யானை ஒன்று வேணாவில் பகுதியில் இறந்து கிடந்ததும் அதற்கு அஞ்சலி செலுத்துமாறு மக்கள் கட்டாயப்படுத்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (க-433)





## தேவை எமக்கொரு விளையாட்டு மைதானம்

### விசுவமடு மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜூலை 13
முல்லைத்தீவு விசுவமடுப் பகுதியில் பொது விளையாட்டு மைதானம் ஒன்றை அமைத்துத் தருமாறு இந்தப் பகுதி மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
முல்லைத்தீவு விசுவமடுப் பகுதியிலும், அதனை அண்மித்த இடங்களிலும் சுமார் 500 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இங்கு நூற்றுக் கணக்கான இளைஞர், யுவதிகள் உள்ளபோதிலும் பொது விளையாட்டு மைதானம் ஒன்று இல்லாத நிலையே காணப்படுகின்றது.
இந்தப் பகுதியில் வசிக்கும் இளைஞர், யுவதிகள் விசுவமடு மகாவித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்தை 1996 ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்தி வந்தனர்.
பாடசாலையின் வேலைத் திட்டங்கள் மற்றும் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுவதைக் கருத்தில் கொண்டு பாடசாலை விளையாட்டு மைதானத்தைப் பயன்படுத்துவது தற்போது தடுக்கப்பட்டுள்ளது.
இந்த நிலையில் இந்தப் பகுதியைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் விளையாட்டுப் பயிற்சிகளில் ஈடுபடும் பொருட்டு பொது விளையாட்டு மைதானம் ஒன்றை அமைத்து வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (க-6)

## 33 போதனாசிரியர்களுக்குப் பதிலாக ஏழு பேர் மட்டுமே கடமையில்

### கிளிநொச்சி விவசாயத் திணைக்களத்தில்

கிளிநொச்சி, ஜூலை 13
கிளிநொச்சி மாவட்ட விவசாய (விரிவாக்க) திணைக்களத்தின் கீழ் 33 விவசாயப் போதனாசிரியர்களுக்கான தேவை உள்ள போதிலும் தற்போது ஏழு போதனாசிரியர்கள் மட்டுமே கடமையில் உள்ளதாகத் தெரிய வருகின்றது.
கிளிநொச்சி மாவட்ட விவசாய விரிவாக்கத் திணைக்களத்தின் கீழான கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய பகுதிகளில் 33 விவசாயப் போதனாசிரியர்கள் கடமையாற்ற ஆளணி அனுமதி உள்ளது.
இந்த நிலையில் தற்போது ஏழு பேர் மட்டுமே கடமையில் உள்ளனர். 26 போதனாசிரியர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன.
இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள சிறுபோக நெற் செய்கையில் நோய்த் தாக்கமும் காணப்படுகின்றது.
ஆனால் அதிகாரிகள் பயிர்களைப் பார்வையிட்டு நோயைக் கட்டுப்படுத்துவதற்கான ஆலோசனைகளை இதுவரை வழங்கவில்லையென விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.
கடந்த 5 ஆம் திகதி மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட விவசாய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது. (க-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**மேடம்:** தன்னம்பிக்கை பிறக்கும். விடாப்பிடியாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். பணப் பற்றாக்குறை நீங்கும். உத்தியோகத்தில் மகிழ்ச்சி தங்கும். பயணங்களால் ஆதாயம் உண்டு.

**இடபம்:** மனதில் பட்டதை பளிச் சென்று பேசுவீர்கள். உறவினர்களால் மனநிம்மதி கிடைக்கும். பணப்பற்றாக் குறை நீங்கும். வியாபாரத்தில் பரபரப்பான சூழல் ஏற்படும். வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும்.

**மிதுனம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்ற பரபரப்புடன் செயற்படுவீர்கள். மனதுக்குப்பிடித்தவர்களுக்காக அதிகம் செலவு செய்வீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். முன் கோபத்தைத் தவிர்ப்பீர்கள்.

**கடகம்:** நட்பு வட்டாரம் விரிவ டையும். பணவரவு திருப்தி தரும். வியாபாரத்தில் மறைமுக எதிர்ப்புகளைச் சமாளிப்பீர்கள். பிரபலங்களைச் சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் மகிழ்ச்சியுண்டு.

**சிங்கம்:** மன இறுக்கங்கள் உருவாகும். அதிக வேலைச்சுமையால் அவ்வப்போது கோபப்படுவீர்கள். சில விடயங்களுக்கு அனுபவ அறிவைப் பயன்படுத்துவது நல்லது. உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பதற்றமடைவீர்கள்.

**கன்னி:** எளிதில் முடித்துவிடலாம் என நினைத்த காரியங்களைக் கூட போராடி முடிக்க வேண்டி வரும். எதிர்பாராத பயணங்கள், செலவுகளால் திணறுவீர்கள். அசதி, சோர்வு வந்து நீங்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் விவாதம் வேண்டாம்.

### நாளை

ஆனி-30 ஞாயிற்றுக்கிழமை 14.07.2013
திதி: ஷஷ்டி மா. 05.59 வரை
நட்சத்திரம்: உத்தரம் மா. 05.59 வரை
சுபநேரம்: 09.00 - 10.30 வரை
இராகுகாலம்: 04.30 - 06.00 வரை

**துலாம்:** சில தினங்களாகத் தடைப்பட்டு வந்த காரியங்களெல்லாம் இன்று சுமுகமாக முடியும். உறவுகளுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் திறமைகள் வெளிப்படும். சக ஊழியர்களின் ஆதரவு உண்டு.

**விருச்சிகம்:** வீண்செலவுகளைத் தவிர்ப்பீர்கள். பேச்சில் தன்னம்பிக்கை பிறக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் ஆதரவைப் பெறுவீர்கள். முன் கோபம் குறையும். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**தனுசு:** திட்டமிட்ட காரியங்களை சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். பணம் தேவையான அளவு இருக்கும். சகோதர வகையில் மகிழ்ச்சி தங்கும். நண்பர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

**மகரம்:** சில நேரங்களில் வெறுப்பாகப் பேசுவீர்கள். குடும்ப அந்தரங்க விடயங்களை வெளி நபர்களிடம் பகிர்ந்துக் கொள்ள வேண்டாம். அநாவசியமாக மற்றவர்கள் விவகாரத்தில் தலையிடாதீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் உங்கள் பெயர் கெடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

**கும்பம்:** எதிர்பார்த்த இடத்திலிருந்து பணம் வரும். புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும்.

**மீனம்:** திறமையுடன் செயற்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். மனக்குழப்பங்கள் நீங்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள். முன்கோபம், வீண் அலைச்சல் விலகும். நண்பர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 8 | | | 6 | | | | |
| 6 | | | 8 | 1 | 7 | 3 | | |
| 2 | | 7 | | | | | 1 | |
| | 7 | | 9 | 2 | 4 | 5 | | |
| | 3 | | 1 | | 6 | | 4 | |
| | | 4 | 7 | 8 | 3 | | 6 | |
| | 9 | | | | | 7 | | 3 |
| | | 3 | 5 | 7 | 8 | | | 2 |
| | | | | 9 | | | 8 | 1 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 2 | 1 | 6 | 3 | 7 | 4 | 5 | 8 |
| 8 | 4 | 3 | 5 | 2 | 9 | 1 | 6 | 7 |
| 7 | 5 | 6 | 4 | 1 | 8 | 9 | 2 | 3 |
| 3 | 8 | 5 | 9 | 7 | 4 | 2 | 1 | 6 |
| 1 | 9 | 7 | 2 | 8 | 6 | 5 | 3 | 4 |
| 4 | 6 | 2 | 1 | 5 | 3 | 8 | 7 | 9 |
| 6 | 1 | 4 | 3 | 9 | 2 | 7 | 8 | 5 |
| 2 | 3 | 8 | 7 | 4 | 5 | 6 | 9 | 1 |
| 5 | 7 | 9 | 8 | 6 | 1 | 3 | 4 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண் களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண் டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவ லாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
19 . 03 . 1967

இறப்பு
17 . 06 . 2010



**அமரர் கணேசமூர்த்தி சசிதரன் (சசி)**

**திதி: 13.07.2013**

மூன்றாண்டு ஆனதுவோ உங்கள் முகம் கண்டு
ஆறவில்லை நம் இதயம்
அன்பும் பாசமும் நிறைந்த பொக்கிசம் நீங்கள்
நித்தம் புலம்புகின்றோம்
உங்கள் திருமுகம் காணாமல்
ஆறவில்லை எம் துயரம்
எமைப் பிரித்த எமன் எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
நிச்சயம் பதில் சொல்லியே ஆகவேண்டும்.

பேக்கரி லேன்,
சீரணி, சண்டிலிப்பாய். (30757)(45.6.3)

உங்கள்
குடும்பத்தினர்.

விற்பனைக்குண்டு
நல்ல இன ஆட்டுக்கடா
விற்பனைக்குண்டு.
20, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி
(c/10300)(3.6.11)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**(2013.07.13)**



பெரியதாய் - செல்லாச்சி தன்குடும்பம்
செழித்திடவே வழிவகுத்து
நல்லாச்சி யாகநின்று நலங்கண்டார் - சொல்லாச்சி
தெளிவாக எனக்கேட்க வேண்டாமே மனமதுபோல்
ஒளிவீசும் "பெரியதாய் அகம்"
என அஞ்சலிக்கும் மகன்
**கலாபூசணம் வ.கந்தசாமி** (ஓய்வுநிலை அதிபர்)
மற்றும் குடும்பத்தினர், உறவினர்.

இடைக்குறிச்சி, வரணி.
(30811)(2.6.3)

## ஓராண்டு நினைவில்

ஆண்டு ஒன்றென்ன ஆயிரம் கடந்தாலும்
ஆற்றாது எம் மனம் உன் நினைவால்
ஆயிரம் ஆயிரம் வாசமிகு மலரினிலே
அழகும் அன்பும் மிக்க மலர் நீ
உன்பால் பெற்றெடுத்த மொட்டுக்கள் இரண்டும்
என்றென்றும் வானத்தையே நோக்கி
அப்பனின் வருகைக்காய் அண்ணார்ந்து பார்த்தபடியே
அக்கினிக் குஞ்சுகளாய் ஏங்கித் தவிக்கிறார்கள்
கண்ணீர்த் துளிகளால் கனவுகளைக் கலைக்கின்றோம்
காண்பதெல்லாமே உன்முகம் தெரியுதே
என்ன சொல்லிப் புரியும் உனக்கு - சொர்க்கமே வாழ்வென்று
பாதி வாழ்வில் பரிதவிக்கவிட்டுச் சென்றுவிட்டாயே
பண்புமிக்க பாஸ்கரா பறந்தோடி வருவாயா
பார்த்திருக்கிறோம் விழிபூத்து ஓராண்டு நிறைவில்.....

இன்று (13.07.2013) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.



தோற்றம்
13.10.1975

மறைவு
08.07.2012

திதி:- பூர்வபக்க பஞ்சமி

**அமரர் கந்தசாமி பாஸ்கரன்**

குமாரசாமி வீதி, புத்தூர் கிழக்கு, புத்தூர்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைலாசநாதர் தேர்த் திருவிழா

நல்லூர் கைலாச பிள்ளையார் ஆலயத்தின் கைலாசநாதர் வருடாந்த திருவிழாவின் தேர்த்திருவிழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. கடந்த 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி திருவிழாக்கள் இடம்பெற்று வருகின்றன. தேர்த்திருவிழாவைத் தொடர்ந்து தீர்த்தத் திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கும், அதனைத் தொடர்ந்து ஆனி உத்தரம், நடராஜர் அபிஷேகம் பிற்பகல் 3 மணிக்கும் இடம்பெறும்.(ஓ-14)

**மணமகள் தேவை**

★ 79இல் பிறந்த செவ்வாய் பாவம் இல்லாமல் 42 பாவம் உடைய Cima Accountant லண்டன் பிரஜாவுரிமை பெற்ற மணமகனுக்கு சைவபோசனமுள்ள அல்லது அசைவமான மணமகள் தேவை.
★ 68 இல் பிறந்த 2 இல் செவ்வாய் 14 ½ பாவம் உடைய லண்டன் பிரஜாவுரிமை பெற்று அத்தோடு விவாகரத்துப் பெற்ற மணமகன் வந்துள்ளார். மணமகள் தேவை.
★ 68இல் பிறந்த செவ்வாய் பாவம் இல்லாமல் 12 ¼ பாவம் உடைய கனடா பிரஜாவுரிமை பெற்ற மணமகன் வந்துள்ளார். படித்த மணமகள் தேவை.
★ 81இல் பிறந்த 2இல் செவ்வாய் 9 ½ பாவம் உடைய ஆஸ்திரேலியா பிரஜாவுரிமை பெற்ற மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.

தொடர்பு: கமலக் கண்ணன் திருமண சேவை
435/3, கோயில் வீதி, நல்லூர்.
T.P:0776070862. (30815) (10,6)

**மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு**

YAMAHA FAZER, WR - X X X X
இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: G.G.செல்வம்,
107, டேவிற் வீதி,
யாழ்ப்பாணம்.

கரம்பொன்

**தூய செபஸ்தியார் ஆலய பெருவிழா - 2013**



மேற்படி பெருவிழா 5 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.
நற்கருணைப் பெருவிழா இன்று (13.07.2013) மாலை 5 மணிக்கும் திருவிழாத் திருப்பலி நாளை (14.07.2013) காலை 6.30 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகும்.
தூய செபஸ்தியார் அருள்பெற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். நாளை (14.07.2013) யாழ்ப்பாணம் பஸ்தியான் சந்தியிலிருந்து விசேட பஸ் ஒன்று காலை 5.30 மணிக்குப் புறப்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பங்குத்தந்தை,
தூய செபஸ்தியார் ஆலயம், கரம்பொன்.

## மெய்வன்மைப் போட்டி

வலி. வடக்கு, ஜூலை13

ஏழாலை மத்தி லெனின் சனசமூக நிலையத்தினால் நடத்தப்படும் லெனின் முன்பள்ளி சிறார்களின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30மணிக்கு ஏழாலை சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் சனசமூக நிலையத் தலைவர் சி. சோதிலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி. தெற்கு உடுவில் பிரதேச சபைத் தலைவர் தி.பிரகாஸ் கலந்து கொள்ளவுள்ளார். (ந-86)

**சிங்கப்பூர் வேலை அனுமதியை பெற்றுக்கொள்வதற்குரிய விளக்கம்**

(Employment Pass)

* இரண்டு வருட வேலை
* மாதாந்த சம்பளம் 1250 சிங்கப்பூர் டொலர்
* மாபிள் தொழிற்சாலை.
* மேலதிக விவரங்களுக்கு நேரில் வரவும்
* நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

107 x 1250 = 133,750/=

முன்பதிவுகளுக்கு மட்டும் 0772 568122

அனி இன்டர்நஷனல் எடியுகேஷன் கன்சல்டன்சி சர்விஸ்
இல.72, இலுப்பையடிச் சந்தி, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 0214 921831, 0214 921832 (சி/10447) (10,6,3)

**காணி தேவை**

யாழ்நகர் பிரதேசத்தை அண்டி வைத்தியசாலை வீதியில் சத்திரசந்தி தொடக்கம் வேம்படி சந்தி வரைக்கும் மணிக்கூட்டு கோபுர வீதியில் மற்றும் ஸ்ரான்லி வீதியில் கே.கே.எஸ். வீதி தொடக்கம் ஆரியகுளம் சந்தி வரைக்கும் பருத்தித்துறை வீதியில் வேம்படி சந்தியில் இருந்து ஆரியகுளம் சந்தி வரைக்கும் 2 தொடக்கம் 3 பரப்பு வெற்றுக்காணி தேவை. 50 அடி அகலத்தினை றோட்டுப் பார்வையைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

குறிப்பு: தரகர் தேவை இல்லை
தொடர்புகளுக்கு: 077 318 8375,
077 329 6407 (30821) (45,6,3)
Email: businessdev@sltnet.lk

**POWER CUT SOLUTION**

A Life Time Un interrupted Comfort
By Online Pure Sine Wave UPS

UPS



625 VA
850 VA
925 VA
1500 VA

(Extrnal Battery Model)
From Rs.16500 Onwards



(Battery 150 AH)
Rs.26900

For Contact
KINGS ELECTRONICS
11A, Stanly Road, Jaffna,
T.P:- 021 222 3857 / 072 794 9242

Complete Set - 43,400/=
4 Hours working
Tube Light (40 W) - 5
Fan (75 W) - 2

**காணி விற்பனைக்குண்டு**

சாவகச்சேரி, தனங்கிளப்பு சந்திக்கு அருகில் உள்ள பனங்காய் குளவயல் காணி70 பரப்பு உறுதியுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 693 6744, 071 627 4916 (30718)(3.6.11)

**வீடு விற்பனைக்கு**

இல.78, இலந்தைக்குளம் வீதி, அரியாலை மாம்பழம் சந்தி A9 வீதியிலிருந்து 500m தொலைவில் சகல வசதிகளுடன் கூடிய 2 பரப்பு குளி 16.75 காணியில் வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 516 9728
(மாலை 4 மணி முதல் 6 மணி வரை பார்வையிடலாம்) (38890)(3.6.11)

**100% CREDIT TRANSFER TO UK,USA,CANADA,NEWZEALAND, AUSTRALIA & FINLAND**

பகுதி நேர வேலை உண்டு

No need IELTS & financial SPONSOR

MALAYSIA வில் மிகக்குறைந்த செலவில் உயர்கல்வியை ஆரம்பித்து கீழே குறிப்பிட்டுள்ள நாடுகளுக்கு விசா அனுமதியை மிக இலகுவாக பெற்றுக்கொள்ள முடியும்

PhD
MASTER
DEGREE
A/L
O/L
DIPLOMA

UK, USA, CANADA, NEW ZEALAND, AUSTRALIA & FINLAND

Nursing / Pharmacy / Physiotherapy
Electrical & Electronic Engineering
Computer Science / Multimedia
Bus.Admin / Accounting
Hospitality Management

OFFER LETTERS within Three Days

DIPLOMA 3000 $ / RS.375,000
COURSE FEE AFTER VISA
BACHELOR 3000$ / RS.375,000
COURSE FEE AFTER VISA
MBA 4000$ / RS.500,000
COURSE FEE AFTER VISA
INTENSIVE ENGLISH 2165$ / RS.270,000

உயர்கல்வியை கற்கும் மாணவர்களுக்கு அனி இன்டர்நஷனல் எடியுகேஷன் கன்சல்டன்சி சர்விஸ் முற்றிலும் இலவச சேவையை வழங்குகின்றது.

NO AGE LIMIT
HOTLINES 0772 568122
0214 921831
0214 921832



LINCOLN UNIVERSITY COLLEGE
www.lincoln.edu.my

அனி இன்டர்நஷனல் எடியுகேஷன் கன்சல்டன்சி சர்விஸ்
இல.72, இலுப்பையடிச் சந்தி,
பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
(C/10447) (10,6,3)

**லண்டன் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு செல்வதற்கான விளக்கம்**

★ மேலே குறிப்பிட்டுள்ள நாடுகளுக்குச் செல்ல விரும்புவோர் நேரில் வரவும்
★ போய்ச் சேர்ந்த பின்பு பணம் செலுத்தலாம்
★ மேலதிக விவரங்களுக்கு நேரில் வரவும்
★ நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

முன்பதிவுகளுக்கு மட்டும்: 077 256 8122

அனி இன்டர் நஷனல் எடியுகேஷன் கன்சல்டன்சி சர்விஸ்
இல. 72, இலுப்பயடிச் சந்தி, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021 492 1831, 021 492 1832

உ
ஸ்ரீ ராமஜெயம்

**விவாஹ சுபமுகூர்த்த அழைப்பு**

அன்புடையீர் !

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான விஜய வருடம் ஆனித்திங்கள் 30-ஆம் நாள் (14.07.2013) ஞாயிற்றுக்கிழமை வளர்ஷஷ்டித்திதியும், ஆனி உத்தரமும் அமிர்தயோகமும் கூடிய பகல் 9.30 மணி முதல் 10.15 மணி வரையுள்ள சிங்க லக்கின சுபமுகூர்த்தத்தில்

இணுவில் அமரர் சிவஸ்ரீ கு. இராமநாதக் குருக்கள் - ஸ்ரீமதி இராசம்மா தம்பதிகளின் பௌத்திரியும், யாழ்ப்பாணம் அமரர் பிரம்மஸ்ரீ சுப்ரமணிய ஐயர் - இராஜாம்பாள் தம்பதிகளின் தௌஹித்திரியும், எமது கனிஷ்ட புத்திரியுமாகிய
சௌபாக்கியவதி கௌசிகாவை

அளவை அமரர் பிரம்மஸ்ரீ இராமலிங்க ஐயர் - ஸ்ரீமதி சீதாலஷ்மி தம்பதிகளின் பௌத்ரனும், அரியாலை அமரர் சிவஸ்ரீ பாலசுப்ரமணியக் குருக்கள் - நாகேஸ்வரி தம்பதிகளின் தௌஹித்ரனும், எமது ஏக புத்திரனுமாகிய பிரம்மஸ்ரீ சிரஞ்சீவி
வெங்கட்ராம சர்மாவுக்கு (அஜினன்)

கன்னிகாதான திருமாங்கல்யதாரண பாணிக்கிரஹணம் செய்ய அளவை பிள்ளையார், இணுவை முருகன், சிங்கப்பூர் செண்பக விநாயகர், மெல்பேன் ரொக்பாங் குன்றத்துக் குமரன் திருவருளும் குருவருளும் கைகூடியிருப்பதால் பெரியோர்களின் ஆசீர்வாதத்துடன் நிச்சயிக்கப்பட்டு மேற்படி சுபமுகூர்த்தம் இணுவில் கந்தசுவாமி கோவிலடியில் நடைபெற இருப்பதால் தாங்கள் தங்கள் இஸ்டமித்ர பந்துக்களுடன் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சமாவர்த்தனம் இன்று (13.7.2013) சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு.
வரவேற்பு உபசாரம் (14.07.2013) ஞாயிறு மாலை 4.00 மணிக்கு மணமகன் இல்லத்தில் நடைபெறும்.


இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

சிவஸ்ரீ இராமநாத விஜயகுமாரக்குருக்கள்
[illegible] தம்பதிகள்
செல்வி [illegible] தீபிகா
கந்தசுவாமி கோவில், இணுவில், யாழ்ப்பாணம்
தொ.பேசி [illegible]734453
Email: [illegible]@yahoo.com.au

சிவஸ்ரீ இராம. சூரியப்பிரபாகரக் குருக்கள்
பாலகௌரி தம்பதிகள்
பிரம்மஸ்ரீ ப. ராதாகிருஷ்ணசர்மா சூரியகலா தம்பதிகள்
செல்வி சூ. அனுராதா, செல்வி ரா. தத்வஜா
கும்பழாவளைப்பிள்ளையார் கோவில், அளவெட்டி, யாழ்ப்பாணம்
தொ.பேசி 94776109862 Email: remo_agi@hotmail.com

(இருவீட்டார் அழைப்பு)
(C/10421)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுழிபுரம் பறாளாய்

# ஈஸ்வர விநாயகர் கோயில்

## புதிய சித்திரத் தேர்த்திருவிழா சிறப்புமலர் - 13.07.2013



### வினை தீர்ப்பான் விநாயகன்

இலங்கையிலே வரலாற்றுச் சிறப்பு டைய கிராமங்களிலே சோழியபுரம் என அழைக் கப்படும் சுழிபுரமும் ஒன்றாகும். இக் கிரா மத்தை அருள்பாலிப்பது பறாளாயம்பதி. பறாளாயம்பதியில் ஈஸ்வர விநாயகர் சர்வ வல்லமை பொருந்தியவராக போர்த்துக்கேய காலந்தொட்டே அருளாட்சி செய்கின்றார். அக்காலத்தில் ஆலயத்தை இடிக்க வந்த போர்த்துக்கேயத் தளபதியின் கண்ணை காகமாக வந்து கோதிய காரணத்தினாலே கண்ணைக் கோதிய காக்காப் பிள்ளையார் என அழைக்கப்படுகின்றார்.மேலும் இங்கே எழுந்தருளியிருக்கின்ற பஞ்சமுக விநாயகனின் அற்புத மான தோற்றம் தும்பிக்கையை மேலே தூக்கி மக்கள் எல் லோரையும் ஆசீர்வதித்துக் கொண்டிருக்கிறார். இத் தோற் றம் இவ்வாலயத்தில் மட்டும் தான் காணக் கூடியதாக இருக் கின்றது என்பதனைப் பெருமையுடன்அறியத் தருகின்றேன்.

ஈஸ்வர விநாயகருக்கு 350 வருடங்களுக்கு மேலாக பழைமை வாய்ந்த சிற்பத் தேர் ஓட முடியாத நிலையில் உள் ளது. இந் நிலையில் நாட்டுப் பிரச்சினை தீர்ந்தவுடன் ஒரு புதிய தேரை வெற்றிச் சின்னமாக உருவாக்கித் தருவோம் என்று அனைத்துத்தரப்பினரும் அன்று நேர்த்தி செய்தோம். ஆனால் தெய்வ நேர்த்தி முன் கூட்டியே செய்ய வேண்டும் என்று உணர்ந்தமையால் ஈஸ்வர விநாயகர் விரும்பிக் கேட்ட புதிய தேரை பெருமானுடைய அனுக்கிரகத்தோடு தேர்த் திருப்பணிச் சபையினர் நிவர்த்தி செய்து வெள்ளோட் டமும் வெகு சிறப்பாக நிறைவு பெற்றது. எனவே ஈஸ்வர விநாயகர் புதிய சித்திரத் தேரினில் ஆரோகணித்துப் பவனி வருவதை யிட்டு எனது மகிழ்ச்சியையும் அருளாசியையும் தெரிவித் துக் கொள்ளுகின்றேன்.

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"

சோழியூரான் - பிறைசூடிக்குரு (சந்ததிப் பூசகர்)



### சித்திரத் தேரேறி வருக விநாயகா!

சுழிபுரம் பறாளாய் ஈஸ்வர விநாயகப் பெருமான் ஆலயத்தின் சந்ததி தர்மகர்த்தா பெரிய பரிகாரியார் வை. ஆறுமுகம். இவ ரின் பின் வைத்தியர் தம்பிப்பிள்ளை தர்ம கர்த்தா வாக இருந்து செயற் பட்டு வந்தார். தற் போது டாக்டர் பூலோக சுந்தரம் கையிலாய நாதனும், மூத்தப்பர் முதலியார் உலகநாதனும் தர்மகர்த்தா வாக இருந்து சிறந்த முறையில் செயற்பட்டு வருகிறார்கள். நானும் தர்மகர்த்தா வழித் தோன்றல் என்ற வகையிலும், ஈஸ்வர விநாயகப் பெருமானின் தீவிர பக்தன் என்ற வகையிலும், தேர்த் திருவிழா சிறப்புமலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

மேலும் இந்த ஆலயத்திற்கு சரித்திர ரீதியாகப் பெருமை தரக்கூடியதாக அமைந்து இருப்பது, சுமார் 350 வருடங் களுக்கு முன் இந்தியாவிலிருந்து வருகைதந்த சிற்பத்தேர் ஆசாரியார்கள், சிவபெருமானின் 64 திருவிளை யாடல் களை சித்திரமாக வடிவமைத்து ஒரு தேர் உருவாக் கித் தந்தார்கள். இத் தேரில்தான் எம் பெருமான் பவனி வந்து கொண்டிருந்தார். தற்பொழுது அது பழுது அடைந்து விட்டது. அப்படியிருந்தும் தற்போது அது மிகவும் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கிறது. தர்ம கர்த்தா வினர் ஆலயத்துக்கு ஒரு சித்திரத்தேர் அமைக்க வேண் டும் என்ற எண்ணம் தோன்ற பக்தர்களை அழைத்து ஒரு தேர்த் திருப்பணிச்சபையை ஏற்படுத்தினர். தர்மகர்த்தா வின் முயற்சியாலும், தேர்திருப்பணிச் சபையினரின் ஊக்கத்தாலும் குறிப்பாக பொன்னுத்துரை ஆசிரியர், கனகரத்தினம் ஆசிரியர், தபால் அதிபர் பூபாலசிங்கம் என்பவர்கள் குறிப்பிட வேண்டியவர்கள். பரம் பரை வழியில் வந்த தற்போதைய பூசகர் சின்னத் துரை பிறைசூடிக்குருவின் விடா முயற்சியா லும் அராலியூர் விஸ்வப்பிரம்ம ஸ்ரீ சின்னத்தம்பி அமரசிங்கம் ஆச்சாரியாராலும், அவரது குழுவினராலும் மிகவும் குறுகிய காலத்தில் அழகான சித்திரத் தேர் அமைக் கப்பெற்றது. இச் சித்திரத் தேருக்கான வெள்ளோட்ட விழா 10.07.2013 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது.

சுழிபுரம் ஈஸ்வர விநாயகருக்கு இன்றைய தினம் இர தோற்சவம் நடைபெறுகிறது."விநாயகனே வெவ் வினையை வேரறுக்க வல்லான்" விநாயகனைத் தொழு தால் விரும்பிய அத்தனையும் கிடைக்கும் என்பது வேத வாக்காகும். அதற்கு அமைய இன்று தேர் ஏறி வரும் விநா யகப்பெருமானை வழிபட்டு இஷ்ட சித்திகளைப் பெற்றுப் பெருவாழ்வு வாழ எல்லாம் வல்ல ஈஸ்வர விநாய கப் பெருமானின் பாதாரக் கமலங்களைப் பணிவுடன் வேண்டி வாழ்த்துகிறேன்.

மு.சண்முகநாதன் (தவம்) (J.P)
(முன்னாள் [illegible], பிரபல சமூக சேவையாளர்) [illegible]

### பழைமைவாய்ந்த புதுமை நிறைந்த பறாளாய் ஈஸ்வர விநாயகர் பாதம் போற்றி



எமது ஆலயத்தின் முன் புறத்தில் விடப்பட்டிருக் கும் பழைய தேரினைப் பார்க்கும்போது இந்த ஆலயத்தின் பழைமை வெளிப்படுத்தப்படுகிறது. பதினைந்தாம் நூற்றாண்டில் போத்துக்கேயர் ஒல்லாந்தர் எமது நாட்டிற்கு வந்து தமது சமயத்தைப் பரப்புவதற்காக சைவ ஆலயங்களை இடித்து சிதைத் தனர். அப்போது எமது ஆலயத்தையும் இடித்து அழிக்க முயற்சி செய்தபோது அங்கே ஓர் அண்டங் காக்கை பறந்து பறந்து கொத்தியது. காகத்தினுடைய தொல்லை தாங்க முடியாமல் காவல் நின்றவன் வைத்திருந்த துவக்கினால் காக்கையைச் சுட இலக்கு வைத்தபோது அவன் தனது கண்பார் வையை இழந்தான். அதனாலே இந்த ஆலயம் இடிக்கப்படாமல் பாதுகாக்கப்பட்டது.

வயலும் வயல் சார்ந்த இடமுமாகிய மருத நிலத்திலே இந்த ஆலயம் அமைந்திருப்பதனால் ஆலயத்தின் சிறப்பை நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் பறாளை விநாயகர் பள்ளு என்னும் நூலில் சிறப்புப் பிரபந்தங்களைப் பாடியுள்ளார்.

அடுத்து ஆயிரத்து தொளாயிரத்து எண்பத்து மூன்றாம் ஆண் டில் நாட்டில் இனக்கலவரம் ஏற்பட்டபோது மார்கழிமாதம் பிள்ளை யார் கதை நடைபெறும் வேளையில் ஒருநாள் ஊரடங்குச்சட்டம் போட்டு இராணுவம் ரோந்துசென்றபோது எமது ஆலயத்துக்கும் வந்தனர். அப்போது அங்கு சிலர் இருந்து பிள்ளையார் கதை படித்துக்கொண்டிருந்தனர். வந்த இராணுவத்தினர் இன்று ஊரடங்கு சட்டம் என்று தெரியாதோ என்று மிரட்டி புத்தகத்தை வாங்கிக் கிழித்தெறிந்தனர். பின்னர் அவர்கள் சிறிது தூரம் சென்றபோது பாலைக்குழி வாய்க்கால் என்னுமிடத்தில் அவர்கள் சென்றவாகனம் புதைந்து எடுக்க முடியாமல் விட்டுவிட்டுசென்று அடுத்த நாள் பாரந் தூக்கி இயந்திரத்தைக்கொண்டுவந்து முயற்சித்த போதும் எடுக்க முடியவில்லை. பின்னர் எமது ஆலயத்துக்கு வந்து கற்பூரம் கொளுத்தி வழிபட்டுசென்றுதான் வாகனம் எடுக்க முடிந்தது.

அன்று ஔவைப் பிராட்டியைத் தனது தும்பிக்கையால் திருக் கைலாயத்தில் வைத்ததுபோல இன்றும் நம்பிக்கையுடன் வழிபடும் அடியவர்களின் துன்பத்தைப்போக்கி தனது தும்பிக்கையினால் அவர்களது நம்பிக்கை வீண்போகாமல் வாழ்வை உயர்த்திய பல பக்தர்களின் வாழ்க்கை வரலாறு சான்று பகர்கின்றது. எனவே எமது ஆலயத்தின் பழைமையும் இங்கு நடைபெறும் புதுமைகளும் அளப் பரியன.

10.07.2013 அன்று வெள்ளோட்டம் ஓடிய புதிய சித்திரத்தேரை அராலியூர் ஸ்தபதி அமரசிங்கம் குழுவினர் அமைத்துத் தந்தனர். இந்தப் புதிய சித்திரத் தேரினில் இன்று 13.07.2013 நடைபெறும் தேர்த்திருவிழாவின்போது பறாளாயம்பதியில் கோயில் கொண் டிருக்கும் விநாயகப் பெருமான் எழுந்தருளி வந்து அங்கு வருகை தரும் பக்தர்களுக்கும் புதிய தேரை நிர்மாணிப்பதற்கு பண உதவி, சரீர உதவி மற்றும் பலவகையிலும் உதவிய அனைவருக்கும் அருள் பாலித்து எல்லோரும் நோய்நொடியின்றி எல்லா நலன்களும் பெற்று நீண்டகாலம் வாழவேண்டும். என்று எல்லாம் வல்ல விநாயகப்பெருமானை வேண்டுதல் செய்கின்றேன்.

***"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"***

சந்ததி ஆலய தர்மகர்த்தாவும்
தேர்த்திருப்பணிச்சபைதலைவரும்,
வைத்திய கலாநிதி பூலோகசுந்தரம் கைலாயநாதன்



### ஆசிச் செய்தி

எமது வலிகாமம் மேற்கு பிரதேசத்தின் இயற்கை யுடன் சூழ்ந்த எழில் மிகு கிராமம் சுழிபுரம். அவ் ஊரின் கண் மருத நிலப்பகுதியில் அமைந்துள்ள வரலாற்றுப் பெருமைமிகு ஆலயமாக அமைந் துள்ளது பறாளாய் ஈஸ்வர விநாயகர் ஆலயம். அவ்வாலயத்தின் புதிய சித்திரதேர் நிறைவு பெற்று விநாயகப் பெருமான் அருளால் இரதோற்சவம் நிகழ்கின்றமை மிக மகிழ்ச்சி யான நிகழ்வாகும். இவ்வாலயத்தின் பெருமையினையும் சிறப் பையும் என்றும் பறைசாற்றும் நற்றமிழ் இலக்கியமாக யாழ்ப் பாணத்தின் சின்னத்தம்பிப்புலவர் எழுதிய பறாளாய் விநாயகர் பள்ளு அமைந்திருக்கின்றது. இவ் இலக்கியத்தின் வாயிலாக வெளிப்படும் இப்பகுதி மக்களின் பண்பாடு, பக்தி, நம்பிக்கை என்பன எமது பிரதேசத்திற்கே சிறப்பான அம்சமாகும். இச் சித்திரத் தேர்த்திருவிழா சிறப்புற எல்லாம் வல்ல இறைவனை வேண்டி [illegible]

[illegible]விசாளர்
[illegible]நா. ஐங்கரன் ,
[illegible]காமம் மேற்கு பிரதேச சபை,சுழிபுரம்.

(சி/10443)(2-6-3)



### ஆசியுரை

வரலாற்று சிறப்பு மிக்க மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவற்றால் பிரசித்தமாக விளங்கும் சுழிபுரம் பறாளாய் ஈஸ்வர விநா யகப் பெருமானின் திவ்ய மகோற்சவத்தின் 11ஆம் திருநாளில் இன்று புதிய சித்திரத் தேரில் முன்னின்று அருள் செய்கின்ற எலிவாகனப் பிள் ளையார் எழுந்தருளுகின்ற வேளையில் அடியவர்கள் தரிசனம் கண்டு இம்மையிலும், மறுமையிலும் சிறந்து வாழ ஆசீர்வதிக்கின்றோம்.

வித்தியாசாகரம்
சிவஸ்ரீ சபா வாசுதேவக்குருக்கள்,
தலைவர், சர்வதேச இந்து மத குருமார்
ஒன்றியம், யாழ்ப்பாணம்.

### தேரேறி வருகிறார் விநாயகப் பெருமான்



யாழ்ப்பாணத்தின்வலிகாமம் மேற்கு பகுதியில், சுழிபுரம் என்னும் புண்ணிய பதி யில் இயற்கை எழில் சூழ எழுந்தருளி இருக் கின்ற ஈஸ்வரவிநாயகப் பெருமான் புதிய சித்திரத்தேரினில் பவனி வரத் திருவுளம் கொண்டுள்ளார் என்பதையிட்டுப் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

மனிதனை மனிதனாக்கும் தன்மை ஆன்மீகத்திலே உண்டு. அந்த ஆன்மீகத்தைக் கற்பிக்கும் இடமாக ஆலயம் விளங்குகிறது. ஆலயத்தின் அதி முக்கிய நிகழ்வாக இடம்பெறுவது தேர் உற்சவமாகும். தேர் என்பது நட மாடும் ஆலயம் என்றே கூறலாம். இந்த நடமாடும் ஆலய மான தேரினைப் பக்தர்கள் ஒன்று கூடி இழுக்கும்போது, விநாயகப்பெருமானின் கருணை கிடைத்து வாழ்வு செழிக்கும்.

மஹோற்சவம் நடைபெறுகின்ற ஆலயத்தில் சித்திரத் தேர் அவசியம் என்பதை உணர்ந்த தர்மகர்த்தா, திருப் பணிச்சபையினர், ஊர் மக்கள் ஒன்று கூடி ஓர் அழகான சித்திரத்தேர் ஸ்தபதி அராலியூர் சி. அமரசிங்கம் மூலம் உருவாக்கப்பட்டதையிட்டு பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

விநாயகப் பெருமான் தேரேறி வலம்வரும் அந்தக் காட்சியைக் காண பக்தர்களின் வாழ்வும் வளம் பெறும் என் பதில் ஐயமில்லை. இப்பதி வாழ் மக்கள் வெள்ளோட்டப் பெருவிழாவையும், இரதோற்ஷவ விழாவினையும் கண்டு களித்து வாழ்க்கைப்பயனை அடைந்து இன்புற வேண்டு மென விநாயகப்பெருமானை வேண்டி வாழ்த்துகிறேன்.

அருள்நெறிச் செல்வர் ஞானசித்தன்
வி.செல்வரத்தினம் (J.P)



### பறாளாயுறை விநாயகனே பாவமெலாம் தீர்ப்பவனே

இயற்கை வனப்பும் இலங்கு திருவடி நிலைத் தீர்த்தமும் சைவத்திருக் கோயில் களும் நிறைந்த சுழிபுரத்தில் மருத நிலமத்தி யில் வீற்றிருப்பது பறாளாய்த் திருத்தலம்.

சின்னத்தம்பிப் புலவராற் பாடப்பெற்ற பறாளாய் விநாயகர் பள்ளு, பள்ளுப் பிரபந்தங்களின் சிகரமாக விளங்குகின்றது. ஒல்லாந்தர்களால் அழிக்கப்பட முனைந்த போது பிரணவ ரூபன் காகமாகச் சென்று ஒல்லாந்தத் தளபதியின் கண்ணைக்கொத்தி செய லுக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

பறாளாய் விநாயகருக்கு முன் அமைக்கப்பட்ட தேர் மிக அற்புதமானது. தெய்வீகத்தன்மை வாய்ந் தது. பிரபஞ்ச வாழ்க்கைத் தத்துவங்களைத் தத் ரூபமாகக் கொண்ட சித்திரங்களை உடையது. இதனை உருவாக்கிய தேவதச்சன் வானுல குக்குக் குருவியாகப் பறந்தார் என்றொரு செவி வழிக் கதையும் உண்டு. 'திருவும் கல்வியும் சீரும் தழைக் கவும் கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும் பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்' செய்யும் பறாளா யுறை ஓங்கார நாதனுக்குப் பல்வகைத் துறைகளிலும் பணிபுரியும் மெய்யடியார்கள் என்றென்றும் வாழ்க. எண்ணிய எண்ணியாங்கெய்திய மெய்யடியாரின் அயரா உழைப்பின் பரிணமிப்பாகிய சித்திரத் தேரைக் கண்டு மகிழ்ந்து திளைத்து அவனடி பரவி அரோகர ஒலி செய்து பிறவிப்பிணி தீர்ப்போம்.

*'பறாளாயுறை விநாயகனே*
*பாவமெலாம் தீர்ப்பவனே'*

பண்டிதை திருமதிபொன் .பாக்கியம்.

மலர் ஆக்கம்:- தேர்த்திருப்பணிச்சபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலயங்களில் இன்று தேர்

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணலிங்கேஸ்வரர் ஆலயம், ஏழாலை புங்கடி சொர்ணாம்பிகை அம்பலவாணேஸ்வரர் ஆலயம், வியாபாரி மூலை அருள்மிகு பத்திரகாளி சமேத ஆதி சிறு வீரபத்திரர் ஆலயம், கொக்குவில் மாத்தனைக் கந்தசுவாமி ஆலயம், துன்னாலை தெற்கு ஸ்ரீ பூதேஸ்வரர் சிவன் ஆலயம், நல்லூர் மூத்த விநாயகர் ஆலயம், புங்குடுதீவு பிட்டியம்பதி ஸ்ரீ காளிகா பரமேஸ்வரி அம்பாள் ஆலயம், சாவகச்சேரி வாரிவனநாதர் சிவன் ஆலயம் ஆகியவற்றில் இன்று சனிக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. ( ந)

## வரவேற்பு ... திறப்பு விழ...

தென்மராட்சி, ஜூலை ...
தென்மராட்சி கல்வி ...ர்
...மாணிக்கப்பட்ட வித்...ு
வாசல் (சரஸ்வதி சின்...ற்
றுக்கிழமை காலை 8....து
வைக்கப்படவுள்ளது.
வலயக் கல்விப் பணி...ன
குமார் தலைமையில் ...ு
விழாவுக்கு முதன்மை ...ல
இலங்கை இந்து மாமன்றத் தலைவர்
கந்தையா நீலகண்டன் கலந்து கொள்வார். (ந-9)

## விழிப்புணர்வுக் கண்காட்சி

வடமாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சின் ஜப்பானிய சமூக அபிவிருத்தி நிதிய நிகழ்ச்சித் திட்ட அனுசரணையுடன் மீசாலை வடக்கு கொடிகாமம்,உசன், மிருசுவில், எழுதுமட்டுவாழ் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த அன்னையர் கழகங்கள் நடத்தும் சுகாதார மற்றும் போஷாக்கு விழிப் புணர்வுக் கண்காட்சி இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு கொடிகாமம் (மிருசுவில்) பிரதேச வைத்தியசாலை மண்டபத்தில் இடம்பெறும். (ந-9)

## கிராம அலுவலர் ஐவர் சித்தி

அச்சுவேலி, ஜூலை 13
வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் பணிபுரியும் கிராம அலுவலர்களில் ஐந்து பேர் ''கிராம அலுவலர் விஷேட தரத்து'' க்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.
சிவசம்பு எழிலரசன், சிவப்பிரகாசம் உதயகுமார், ஐயாத்துரை சிவானந்தம், சுப்பிரமணியம் சண்முகவடிவேல், தியாகராசா வரதராசன் ஆகியோரே சித்தியடைந்தவர்கள் ஆவர். (ந-11)

## நூல் வெளியீடு

நவாலி, ஜூலை 13
இராசவல்லவன் இராசயோகன் எழுதிய 'சொல்லத் துடிக்கிற நினைவுகள்' நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.45 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. வலி.தென் மேற்கு பிரதேச சபை உபதவிசாளர் எஸ்.சிவ குமாரன் தலைமை யில் நடைபெறும் நிகழ்வுக்கு பிரதம விருந்தின ராக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் எஸ். முரளீதரன் கலந்து கொள்வார். (ந-100)

## சமய சந்நிதிகளில்

தென்மராட்சி, ஜூலை 13
மட்டுவில் மருதடி தான்தோன்றி வீரகத்திப்பிள்ளையார் ஆலய அலங்காரத் திருவிழா இன்று சனிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும். (ந-9)

★ ★ ★

சங்கானை செங்கற்படை மகாதேவப்பிள்ளையார் ஆலயப் பெருந்திருவிழா இன்று சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

★ ★ ★

அச்சுவேலி உலவிக்குளம் சித்தி விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந் திருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. தொடர்ந்து 11 தினங்கள் திருவிழா நடைபெறும். (ந-11)

★ ★ ★

அளவெட்டி கணேஸ்வரம் குருக்கள் கிணற்றடி விநாயகர் ஆலய பெருந் திருவிழா இன்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது. (ந-36)

★ ★ ★

மூளாய் ஹரிகர புத்திர ஐயனார் ஆலய வருடாந்த ஆனி உத்தரப் பொங்கல் விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகி மறுநாள் காலை நிறைவு பெறும். (ந)

## கும்பாபிஷேகங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 13
வண்ணை சாந்தையர் மடம் கற்பக விநாயகர் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் 9 மணி வரையான சுபவேளையில் நடைபெறவுள்ளது.
தொடர்ந்து 12 நாள்கள் மண்டலாபிஷேகமும் நடைபெறவுள்ளது.
இன்று காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம்பெறவுள்ளது. (ஒ)

★ ★ ★

சுழிபுரம், ஜூலை 13
சுழிபுரம் ஸ்ரீ வீரபத்திர சுவாமி உடனுறை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயக் கும்பாபி ஷேகம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8.29 மணிக்கு நடைபெறவுள்ளது.
இன்று சனிக்கிழமை காலை 7 மணி முதல் மாலை 6 மணிவரை அடியார்கள் எண் ணெய்க்காப்புச் சாத்தும் நிகழ்வு நடைபெறும். (ந-28)

★ ★ ★

தென்மராட்சி, ஜூலை 13
தென்மராட்சி வரணி கரம்பைக்குறிச்சி பாலைநின்ற அத்தாயில் மூத்த விநாயகர் ஆலய கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறும். இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணி முதல் எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம்பெறும்.

★ ★ ★

கைதடி கயிற்றசிட்டி கந்தசுவாமி ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழ்மை காலை 6 மணி தொடக்கம் நட்சேரபிஷேகமும் ஆனி உத்தர பூசையும் இடம்பெற வுள்ளன. (ந-122)

★ ★ ★

தென்மராட்சி, ஜூலை 13
தென்மராட்சி தெற்கு தனங் களப்பு பெரும்படை அம்மன் என அழைக்கப்படும் கண்ணகை அம்பாள் ஆலய கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8.22 மணிக்கு இடம் பெறும்.
அடியார்கள் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை இடம்பெறும். (ந-9)

★ ★ ★

புலோலி தெற்கு வீரபத்திரர் ஆலய புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.29 மணிக்கு நடைபெறவுள்ளது. (ந-8)

★ ★ ★

கரைச்சி புளியம்பொக்கணை கற்பக விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.29 மணிக்கு நடைபெறும்.
இன்று சனிக்கிழமை எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வும் இடம்பெறும்.

★ ★ ★

இளவாலை சித்திரமேழி ஞான வைரவர் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறும். (ந)



யாழ். வரணி குடமியன்
அருள்மிகு ஆதிசிவன் தேவஸ்தான
வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2013
ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்கலகரமான விஜய வருஷம் ஆடி மாத பௌர்ணமியை முன்னிட்டு இன்று (13.07.2013) ஆனி 29ஆம் நாள் சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றம் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.
தினமும்

| காலை | மாலை |
|---|---|
| கும்பபூசை 9.00 மணி | யாகபூசை மூலஸ்தான பூசை 6.30 மணி |
| யாகபூசை மூலஸ்தான பூசை 10.30 மணி | வசந்தமண்டபப் பூசை 8.30 மணிக்கு |
| வசந்தமண்டபப் பூசை 12.00 மணி | சுவாமி உள்வீதி, வெளிவீதி வருதல் |
| சுவாமி உள்வீதி வருதல் | |

ஆடி 5ஆம் நாள் 21.07.2013 ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழா
காலை 7.00 மணிக்கு கும்பபூசை, 11.00 மணிக்கு சுவாமி தேரில் ஆரோகணிப்பார்.
ஆடி 6ஆம் நாள் 22.07.2013 திங்கட்கிழமை தீர்த்தத்திருவிழா
முற்பகல் 11.00 மணிக்கு தீர்த்தம் ஆடுதல்
சிவஸ்ரீ கதி. இராமலிங்கம் ஐயா ஆசியுடன்
ஆலய பிரதிஷ்டா உற்சவக்குரு
குருமணி சிவஸ்ரீ இராம. ஸ்ரீரங்கக் குருக்கள்
தினமும் சிறந்த முறையில் அன்னதானம் வழங்கப்படும்.
அனைவரும் வாரீர் வாரீர்
வரணி ஆதிசிவன் தேவஸ்தானம்
ஆலய தர்மகர்த்தா
சி. குமாரசாமி
(C/10442)(45,6,3)


மிருசுவில் படித்த மகளிர்திட்டம் - "துர்க்காபுரம்"
ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மன் ஆலய
அலங்கார உற்சவம் - 2013
ஞானதுர்க்கை அம்மன் அடியார்களே!
தன்னை நம்பி வழிபடும் அடியார்களை காலந்தோறும் பாதுகாத்து நல்லருள் பாலித்து மிருசுவில் படித்த மகளிர் திட்டத்தில் "துர்க்காபுரம்" எனும் ஸ்தலத்தில் கோயில்கொண்டு எழுந்தருளி இருக்கும் அன்னை ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மனுக்கு விஜய வருடம் 10 நாள்கள் அலங்கார உற்சவம் நடைபெற எல்லாம் வல்ல அம்பிகை திருவருள் ஈர்ந்துள்ளாள்.
அலங்கார உற்சவம் விஜய வருஷம் ஆனி மாதம் 30 ஆம் நாள் (14.07.2013) ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி ஆடிமாதம் 7ஆம் நாள் (23.07.2013) செவ்வாய்க்கிழமை இறுதி நாள் தீர்த்த உற்சவத்துடன் 10 நாள்கள் நடைபெற உள்ளன.
தேர்த்திருவிழாவாகிய 9ஆம் நாள் ஆடிமாதம் 06ஆம் நாள் 22.07.2013 திங்கட்கிழமை விசேட அபிஷேகங்கள் பூசைகள் நடைபெற்று அதனைத் தொடர்ந்து ஞானதுர்க்கை அம்மன் மீது பாடப்பட்ட இரண்டாவது பக்திப்பாடல் வெளியீட்டு விழாவும் இடம்பெற்று அதன்பின் ஆலயத்தின் வாக்களிக்கும் தாயானவள், ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மனின் தெய்வீக அருட்கலையுடன் கூரிய வாள்களின் மீது ஏறிநின்று துர்க்காதேவியுடன் சேர்ந்து வீதி உலா வரும் காட்சியும் இடம்பெறும்.
தினந்தோறும் காலை 9 மணிதொடக்கம் ஸ்நபன அபிஷேகம், பூசை, திருவிழா என்பனவும் அதனைத் தொடர்ந்து அம்பாள் வீதி உலா, மகேஸ்வர பூசையும் நடைபெறும்.
16978
அடியார்கள் இவ்விழாக் காலத்தில் பங்குகொண்டு எல்லாம் வல்ல ... தொழுது திருவருள் பெற்று நல்வாழ்வு வாழும் வண்ணம் அழைக்கின்றோம்.
"துர்க்காபுரம்"
படித்த மகளிர் திட்டம், மிருசுவில்.
இறைபணியே இன்பப்பணி
சிவத்திரு சி. நவரத்தினம் ஐயா
(சி/10451) (45.6.3)


சங்கானை செங்கற்படை மகாதேவப் பிள்ளையார் தேவஸ்தானம் – 2013
முதலாம் திருவிழா – கொடியேற்றம்
காக்கும் கரங்களாய் கரம் கூப்பும் அடியார்க்கு
வாக்கும் வளமும் தனமும் நலமும் தினம்
ஆக்கும் ஆனைமுக செங்கற்படை மகாதேவனே
சீர்க்கும் கொடியேற்ற நாள் இன்று உன் தாள் தொழுவோம்.
ஆக்கம்: சங்கை – சிவம்
சிறப்புற வாழ்த்துவோர் :
சுப்பையா இராமலிங்கம் குடும்பத்தினர்
வல்லை வீதி, சங்கானை
(சி/9755)(2-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் பிரதேச சபை

## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் - 2013

கீழ்வரும் வேலைகளிற்கான கேள்விகள் நல்லூர் பிரதேச சபையினால் கோரப்படுகின்றன. கீழ்க்குறித்த வேலைகளுக்கான கேள்வி வைப்புப்பணத்தையும், கேள்விப்பத்திரக் கட்டணத்தையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் செலுத்தி படிவத்தை பெற்றுக்கொள்ளலாம்.

01.கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி: 15-07-2013 தொடக்கம் 29-07-2013 பி.ப 4.00 மணிவரை

02.கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி: 30-07-2013 மு.ப10.00 மணிவரை

03.கேள்வி திறக்கப்படும் திகதி: 30-07-2013 மு.ப 10.30 மணிக்கு
(திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமூகமளிக்கலாம்).

04.கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு உரிமை உண்டு.

05.இக்ராட்(ICTAD) வழிகாட்டல்களின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கல்வி ஆற்றலை கொண்டிருக்க வேண்டும்.

06.கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தக்காரர் வலுவுள்ள இக்ராட்(ICTAD) பதிவுப்புத்தகத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

07.கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை 'தலைவர்/செயலாளர், நல்லூர் பிரதேசசபை, கருவப்புலம் வீதி கொக்குவில் என்ற விலாசத்திற்கு பதிவுத்தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப்பெட்டியிலோ இடவேண்டும். மறு பிரதியை, 'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு 2ம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைக்கு அமைவாக கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

08.மேலதிக விபரங்களை நல்லூர் பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| தொ. இல | வேலை விபரம் | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புப் பணம | மீளளிக்கப்படாத கேளவிப்பத்திரக் கட்டணம் (VAT,NBT நீங்கலாக) | இருக்க வேண்டிய ஆகக்குறைந்த ICTAD தரம் |
|---|---|---|---|---|
| 01. | பாரதி வீதி 1ம் ஒழுங்கை கோண்டாவில | 1980.00 | 1000.00 | M10/C10 |
| 02. | மஞ்சத்தடி கொண்டலடி விவேகானந்தா வீதி 1ம் ஒழுங்கை கோண்டாவில் | 2900.00 | 1000.00 | M10/C10 |
| 03. | நாராயணா 3ம் குறுக்கு ஒழுங்கை | 3430.00 | 1000.00 | M10/C10 |
| 04. | காளிகோயில் முன் ஒழுங்கை கோண்டாவில் | 4300.00 | 1000.00 | M10/C10 |
| 05. | வீரபத்திரர் வீதி ஒழுங்கை கோண்டாவில் | 2500.00 | 1000.00 | M10/C10 |
| 06. | உப்புமட பிள்ளையார் கோயில் வீதி கோண்டாவில் | 5850.00 | 1000.00 | M09/C10 |
| 07. | ஞானவீர சனசமூக நிலைய வீதி கோண்டாவில் | 3950.00 | 1000.00 | M10/C10 |
| 08. | முத்தட்டுமட வீதி- 1ம் ஒழுங்கை கோண்டாவில் | 2750.00 | 1000.00 | M10/C10 |
| 09. | சமுர்த்தி வங்கி ஒழுங்கை கோண்டாவில | 3100.00 | 1000.00 | M10/C10 |
| 10. | சோளாவத்தை சிவன் வதி (விவேகானந்தர் வீதி) கோண்டாவில் | 3000.00 | 1000.00 | M10/C10 |
| 11. | மஞ்சத்தடி கொட்டம்பனை வைரவர் கோயில் வீதி | 4300.00 | 1000.00 | M10/C10 |
| 12. | கே.கே.எஸ் குறுக்கு ஒழுங்கை( மஞ்சத்தடி கந்தசாமி கோயிலுக்கு அருகில்) | 3020.00 | 1000.00 | M10/C10 |
| 13. | காளிகோயில் 1ம் ஒழுங்கை கொக்குவில | 1470.00 | 1000.00 | M10/C10 |
| 14. | காளிகோயில் 3ம் ஒழுங்கை கொக்குவில | 2000.00 | 1000.00 | M10/C10 |
| 15. | காளிகோயில் பின் ஒழங்கை கொக்குவில | 4040.00 | 1000.00 | M10/C10 |
| 16. | அச்சுக்கூட வீதி கொக்குவில் | 10700.00 | 1000.00 | M08/C09 |
| 17. | நந்தாவில் 1ம், 3ம் ஒழுங்கை (சம்பியன் ஒழுங்கை) கொக்குவில் | 6380.00 | 1000.00 | M09/C10 |
| 18. | பிரம்படி குறுக்கு ஒழுங்கை(இந்திரா சனசமூக நிலைய பக்கத்து வீதி) | 6000.00 | 1000.00 | M09/C10 |
| 19. | சம்பியன் வீதி 3ம் ஒழுங்கை கொக்குவில் | 3260.00 | 1000.00 | M10/C10 |
| 20. | கலைமகள் வீதி 1ம் ஒழுங்கை கல்வியங்காடு | 3340.00 | 1000.00 | M10/C10 |
| 21. | புலவனார் வீதி கல்வியங்காடு | 7340.00 | 1000.00 | M09/C10 |
| 22. | முருகன் குறுக்கு ஒழுங்கை (அம்மன் பின்) திருநெல்வேலி | 4600.00 | 1000.00 | M10/C10 |
| 23. | பாற்பண்ணை 6ம் குறுக்கு ஒழுங்கை திருநெல்வேலி | 2820.00 | 1000.00 | M10/C10 |
| 24. | கலாசாலை 4ம் ஒழுங்கை திருநெல்வேலி | 5470.00 | 1000.00 | M09/C10 |
| 25. | கலாசாலை முத்துமாரி அம்மன் வீதி திருநெல்வேலி | 5770.00 | 1000.00 | M09/C10 |
| 26. | வீரபத்திரர் வீதி அரியாலை | 5160.00 | 1000.00 | M09/C10 |
| 27. | துறை வீதி அரியாலை | 6870.00 | 1000.00 | M09/C10 |
| 28. | ஆடியபாதம் வீதி 3ம் குறுக்கு ஒழுங்கை கொக்குவில் | 2520.00 | 1000.00 | M10/C10 |
| 29. | சி.சி.ரி.எம்எஸ். 1ம் ஒழுங்கை கொக்குவில் | 2260.00 | 1000.00 | M10/C10 |
| 30. | சி.சி.ரி.எம்எஸ். 2ம் ஒழுங்கை கொக்குவில | 4550.00 | 1000.00 | M10/C10 |
| 31. | வைத்திலிங்கம் வீதி 1ம் ஒழுங்கை வண்ணார்பண்ணை | 1900.00 | 1000.00 | M10/C10 |
| 32. | வெள்ளக்கடவை வீதி கொக்குவில் | 2520.00 | 1000.00 | M10/C10 |
| 33. | பாரதிபுலம் வீதி திருநெல்வேலி | 2210.00 | 1000.00 | M10/C10 |
| 34. | குட்செற்வீதி கோண்டாவில் | 2850.00 | 1000.00 | M10/C10 |
| 35. | சேச் ஒழுங்கை கல்வியங்காடு | 10170.00 | 1000.00 | M08/C09 |
| 36. | வாமஸ் வீதி 2ம் ஒழுங்கை கோண்டாவில | 4840.00 | 1000.00 | M10/C10 |
| 37. | நேதாஜி சனசமூக நிலையத்திற்கு அருகிலுள்ள வீதி | 4330.00 | 1000.00 | M10/C10 |
| 38. | பொன்னையா 1ம் ஒழுங்கை கொக்குவில் மேற்கு | 6950.00 | 1000.00 | M09/C10 |
| 39. | பவலூம் வீதி கோண்டாவில் | 6320.00 | 1000.00 | M09/C10 |
| 40. | தலையாளி வைரவர் கோயில் வீதி கொக்குவில | 6580.00 | 1000.00 | M09/C10 |
| 41. | கேகேஎஸ் வீதி (நாராயணன் கடை முன் வீதி) | 2980.00 | 1000.00 | M10/C10 |
| 42. | வைரவர் கோயில் வீதி பாற்பண்ணை | 6420.00 | 1000.00 | M09/C10 |
| 43. | வாலையம்மன் வீதி கல்வியங்காடு | 5700.00 | 1000.00 | M09/C10 |
| 44. | எம்.எஸ் குறுக்கு வீதி கோண்டாவில் | 2100.00 | 1000.00 | M10/C10 |
| 45. | நெட்டிலிப்பாய் பிள்ளையார் வீதி கோண்டாவில | 12700.00 | 1000.00 | M08/C09 |
| 46. | ஞான வைரவர் வீதி கோண்டாவில் | 21220.00 | 1000.00 | M07/C08 |
| 47. | ஆலடி 2ம் ஒழுங்கை கோண்டாவில் | 1940.00 | 1000.00 | M10/C10 |
| 48. | அம்மன் வீதி 1ம் ஒழுங்கை கோண்டாவில் | 2350.00 | 1000.00 | M10/C10 |
| 49. | பூதவராயர் வீதி | 4000.00 | 1000.00 | M10/C10 |
| 50. | அரியாலை சித்துப்பாத்தி இந்துமயானத்திற்கு எரிக்கும் கொட்டகை அமைத்தல் | 3230.58 | 1000.00 | M10/C10 |
| 51. | அரியாலைப் பகுதியிலுள்ள குப்பைகளைப் புதைக்கும் இடத்திற்கு சுற்றுமதில் அமைத்தல் | 17000.00 | 1000.00 | M08/C09 |

நல்லூர் பிரதேசசபை,
கொக்குவில்.

திரு.ப.வசந்தகுமார்,
தவிசாளர்.



அருள்மிகு மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோயில்
காம்யோற்சவப் பெருவிழா
13.07.2013 முதலாம் திருவிழா
மாவை முருகன் கொடியேற்றம்

மாவைப் பதிமயில் வீரனருளொளி
காட்டும் கொடியேற்றம்
மாநிலம் யாவுமே புகழ்ந்துகொண்டாடிடும்
மார்க்கம் பலகூட்டும்
பாவைகுறமகள் குஞ்சரி யோடொளி
நல்கும் கார்த்திகேயன்
பாதமா மலரிணைத் தானும் நினைந்தவர்
தொழுதிட வருள்கூடும்

(C70445)
(10,16,14)

சு.குகதேவன், கொல்லங்கலட்டி.

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
021 5671111

# பாராட்டி வாழ்த்து



கணபதிப்பிள்ளை சிவநாதன்

எங்கள் அன்புத் தந்தையின்
புகழ் கூற பேனாமை என்ன!
வானின் வண்ணமே போதாது
57 வருட வாழ்வில் வேலணை
தபாலகத்தில் 30 வருடந்தனை அரச
தொண்டாற்றி இன்நன் நாள் தனிலே
சேவையிலிருந்து ஓய்வு பெற்று
சமூக சேவகனாய் உடல்
உளநலத்துடன் பல சகாப்தம் வாழ
வாழ்த்தும்

உங்கள் செல்ப்பிள்ளைகள்
S.டியாஷினி, டிலுஜன்,
டிலூஜினி, டிலாஜினி, டினேஷினி

வவுனியா.

## தவறிவிட்டது

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மனோன்மணி வசந்த நாதன் என்பவருடைய (கண்டி முகவரியை உடைய) தே.அ.அ(438540253 V) மணிபர்ஸ் என்பன யாழ்ப்பாணத்தில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புக்கு: 0777685910 (30856) (10,16,14)

## வீடு வாடகைக்கு

யாழ் நகர மத்தியை அண்டிய பகுதியில் வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்புக்கு:
0789484194 (30881) (10,16,14)

திரு திருமதி நதீசன் ஜெயவாணி தம்பதியரின் மகனும்
கலாவித்தகர் சி.செந்தூரன் அவர்களின் மாணவனுமான
நதீசன் ஜனுசன் அவர்களின்

# மிருதங்க அரங்கேற்றம்



காலம் : 14.07.2013 பி.ப 2.30 மணிக்கு
இடம் : ஏழாலை முத்தமிழ்க் கலாசார மண்டபம்
அரங்கின் தலைவர் : கலாவித்தகர் திரு சி.சிவஞானராஜா
(ஓய்வு நிலை இசையாசிரியர்)
பிரதம விருந்தினர் : கலாநிதி த.கலாமணி
(சட்டத்துறைத் தலைவர், முதுநிலை விரிவுரையாளர், கல்வியியல் துறை, யாழ்.பல்கலைக் கழகம்)
சிறப்பு விருந்தினர்கள்
திரு வி.கே.கணேசராசா (அதிபர், யா/இந்துக் கல்லூரி)
திருமதி லோ.இரகுபதி (ஓய்வுநிலை அதிபர், தலைவர், சாளம்பை முருகன் ஆலயம்)
திரு இ.ஆனந்தன் (ஓய்வுநிலைப் பிரதி அதிபர், யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி)
மதிப்பீட்டுரை : க.கஜன் (விரிவுரையாளர், நடனத்துறை, யாழ்.பல்கலைக் கழகம்)

அரங்கில் அணிசெய்யும் கலைஞர்கள்
பாட்டு : கலைக்குரிசில் த.றொபேட்
வயலின் : இசைக்கலைமாணி சு.கோபிதாஸ்
மிருதங்கம் : செல்வன் ந.ஜனுசன், கஞ்சிரா : கலைமாணி நா.சிவசுந்தரசர்மா
கடம் : கலாவித்தகர் நா.மாதவன், முகர்சிங் கலாவித்தகர் து.சுபேஸ்
தம்புரா : செல்வன் நி.மோகனதர்சன்



அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்

திரு திருமதி நதீசன் ஜெயவாணி,
ஏழாலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழமரக்கன்றுகள் பயனாளிகளுக்கு



மன்னார், ஜூலை 13
பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் மன்னார் முசலி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட 20 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கு பழ மரக் கன்றுகள் வழங்கப்பட்டன.
பிரதேச செயலாளர், உதவித் திட்டப் பணிப்பாளர்களால் பட்டதாரிப் பயிலுநர்களிடம் வழங்கப்பட்ட பழ மரக் கன்றுகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன. (ச-10)

# பள்ளிவாசல் தாக்குதல் கண்டிக்கத்தக்கது

### ஹக்கீம் தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 13
புனித ரம்ழான் நோன்பு அனுஷ்டிக்கப்படும் போது மஹியங்கனை மஸ்ஜிதுல் அரபா பள்ளிவாசல்மீது தாக்குதல் நடத்தப்பட்டமை கண்டிக்கத்தக்கது என்று நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
வியாழக்கிழமை இரவு 11.20 மணிக்கு கற்களை வீசி மஸ்ஜிதுல் அரபா பள்ளிவாசல் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதோடு, பன்றி இறைச்சியும் வீசப்பட்டுள்ளது. இந்தச் செயல் கண்டிக்கத்தக்கது.
இந்தச் சம்பவம் குறித்து பள்ளிவாசலின் முக்கியஸ்தர்களுடன் தொடர்பு கொண்டு நிலைமை குறித்துக் கேட்டறிந்தேன்.
இந்தச் சம்பவம் நடைபெற்ற வேளை அந்தப் பகுதியில் மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாகவும் அந்தப் பிரதேசத்துக்குப் பொறுப்பான மின்சார சபை பொறியியலாளரிடம் வினவியுள்ளேன்.
நாட்டின் பல பகுதிகளிலும் இடம்பெறும் தாக்குதல்களை முடிவுக்கு கொண்டு வருவது அரசின் கடமை. இது குறித்து நான் ஜனாதிபதியுடனும் பேசுவேன்- என்றார். (ச-10)

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

# 'உதயன்' ஊடகவியலாளர் மீது தாக்கு: பொலிஸ் விசாரணை தொடர்கிறது

வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது, அவரை ஓட்டோவில் சென்ற இனந்தெரியாதவர்கள் உதைத்து தள்ளிவீழ்த்தி விட்டுத் தப்பிச் சென்றனர்.
அதனால் காயமடைந்த அவர் தெல்லிப்பழை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றதோடு தெல்லிப்பழைப் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார். அதனை உறுதிப்படுத்தும் முறைப்பாட்டுப் பிரதி ஒன்றும் தெல்லிப்பழை பொலிஸாரால் வழங்கப்பட்டுள்ளது.
எனினும் இது குறித்து சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நேற்றுத் தெரிவிக்கையில்,
''உதயன் செய்தியாளர் சென்று கொண்டிருந்த போது பின்னால் ஓட்டோ ஒன்று சென்றது. அது முன்னே செல்வதற்காக ஒலியெழுப்பியபோதும் உதயன் செய்தியாளர் ஓட்டோ சாரதிக்கு இடம்கொடுக்கவில்லை. இதனால் அவரை ஓட்டோ முந்திச்செல்ல முற்பட்டபோதே விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று எமக்குத் தகவல் கிடைத்துள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில்நாம் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகிறோம்.'' என்றார்.
எனினும் சம்பவம் இடம்பெற்ற வீதி 'காபெற்' இடப்பட்ட இருவழிப்பாதை கொண்ட அகல வீதியாகும். இந்த வீதியில் தான் ஓட்டோ முந்திச் செல்ல இடமில்லாததாலேயே விபத்து இடம்பெற்றதாக பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளது. சம்பவத்துடன் தொடர்புடைய குறித்த ஓட்டோவின் சாரதியோ அல்லது அதில் பயணித்தவர்களோ இதுவரை கைது செய்யப்படவில்லை.
குறித்த ஓட்டோவின் சாரதியை பற்றியோ அவரை விசாரணை செய்தமை பற்றியோ பொலிஸார் இதன்போது எதுவும் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ந-4)

# மஹியங்கனைப் பள்ளிவாசல் மீது தாக்குதல்

அரபாவுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.
இந்தச் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை மஹியங்கனைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.
முஸ்லிம் கவுன்ஸில் தலைவர் என்.எம். அமீன், சட்டத்தரணி சிராஸ் நூர்வீன் ஆகியோர் பாதுகாப்புத் தரப்பினருடன் மேற்கொண்ட பேச்சு வார்த்தையை அடுத்து ஜும்மா தொழுகைக்காக பள்ளி வாசலின் செயற்பாடுகள் வழமைக்குக் கொண்டுவரப்பட்டன. இதேவேளை நாட்டின் பல பகுதிகளிலும் உள்ள பள்ளிவாசல்கள் அண்மைக் காலமாக தாக்குதலுக்கு உள்ளாகும் நிலையில் கடந்த வாரம் கிராண்பாஸ் பள்ளிவாசல் தாக்குதலுக்கு உள்ளானமை குறிப்பிடத்தக்கது.

# தொலைபேசி அழைப்புகள் குறித்து கவனம் வேண்டும்

### பொலிஸார் எச்சரிக்கை

கொழும்பு,ஜூலை 13
பொலிஸ் திணைக்களம், குற்றத்தடுப்புப்பிரிவு, பயங்கரவாத விசாரணைத் திணைக்களம் ஆகிய இடங்களிலிருந்து பேசுகின்றோம் என்று வரும் தொலைபேசி அழைப்புகள் குறித்து கவனமாக இருக்குமாறு பொதுமக்களைப் பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர்.
இவ்வாறான அழைப்பு விடுக்கப்பட்டே பணமோசடிகள் நடந்திருக்கின்றன என்று புலன் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
பயமுறுத்தல், பணம் கேட்டு அச்சுறுத்தல் செய்யும் குழுக்களைப் பற்றிய தகவல்கள் தங்களுக்கு கிடைத்துள்ளன என்று பொலிஸார் கூறினர். (ச)


## யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் நவோதய பாடசாலை க.பொ.த உயர்தர பிரிவுக்கான தொழில்னுட்பக் கல்வித்துறை கால்கோல் விழா 2013

இடம்- ஆ.சி. நடராஜா கேட்போர் கூடம்
காலம்- 15.07.2013 திங்கட்கிழமை மு.ப 9.30 மணி
தலைவர்- திரு.வே.த.ஜயந்தன் (அதிபர்)
வடமாகாண கௌரவ ஆளுநர் மேஜர்.ஜெனரல் G.A.சந்திரசிறி அவர்களால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும் மேற்படி நிகழ்வில் தங்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்.

## பொதுக் கூட்டம்

யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 27.07.2013 சனிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம். பழைய மாணவர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்
கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி

## காணி விற்பனைக்கு

கோப்பாய், கோப்பாய் மத்தியில் நல்ல சுற்றாடலில் வீடு கட்டக்கூடிய 2 பரப்பு 12குளி காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு- 0774285777, 0773561322

## அறிவித்தல்

சாவகச்சேரி பிரதேசசபைக்கு சொந்தமான பழைய தலைமைப் பணிமனை மண்டபம் (பஸ் நிலையம் முன்பாக) வாடகைக்கு விடப்படவுள்ளது. வாடகை பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் தலைமைப் பணிமனைக்கு நேரில் வந்தோ அல்லது 0212050348 இலக்க தொலைபேசி மூலமோ விவரங்களை விசாரிக்கலாம்.

திரு.சிற்றம்பலம் துரைராஜா
தவிசாளர், சாவகச்சேரி
பிரதேசசபை, கொடிகாமம்.
12.07.2013

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## கொழும்பு பல்கலைக்கழக
UCSC இளமாணிப் பட்டப்படிப்பு
BIT Bachelor of Information Technology
UGC Approved
Enroll with 3 A/L passes in any stream
A/Level சித்தியடையாத மாணவர்கள் FIT பூர்த்தி செய்வதன் மூலம் பட்டப்படிப்பை தொடர முடியும்......!!!



ESOFT இனால்
வழங்கப்படும் தொழிற்துறைக்கான அங்கீகார சான்றிதழுடன் உங்களது வேலைவாய்ப்பிற்கான சந்தர்ப்பத்தை இரட்டிப்பாக்குவதற்கு இன்றே இணையுங்கள்.........!!!
பிரிவு 1 ற்கான புதிய பிரிவுகள்
21.07.2013 காலை 9 மணி
Commencement on July 2013
Our Affiliations
bcs The Chartered Institute for IT | BIT | BIT University of Moratuwa | edexcel HND | DiTEC INTERNATIONAL
ESOFT Shaping Lives, Creating Futures.
ESOFT METRO CAMPUS
No.137, K.K.S Road, Jaffna (On top of HSBC Bank)
CALL : 077 309 9 308

## யாழ் ஒடியல் கூழ் விற்பனைக்கு

யாழ்ப்பாண முறைப்படி தயாரிக்கப்பட்ட ஒடியல் கூழ் ஒவ்வொரு சனி, ஞாயிறு கிழமைகளில் நண்பகல் 12.00 மணிக்கு பெற்றுக் கொள்ளலாம்.
500ml - 150/= மட்டுமே
Sunjeya Foodland (Branch)
713, Hospital Road, Jaffna.
T.P- 0212217070, 0776777500

## வரலட்சுமி பிளாஸ்ரிக் வார்ப்புத் தொழிலகம்

சகல விதமான பிளாஸ்ரிக் பொருள்களினதும் உடைவுகள் சீர் செய்து கொடுக்கப்படும். மோட்டார் வாகனங்களின் 01.கண்ணாடிப் பொலிசிங், 02.பெடபின் ரிங், 03.பிளேற்றிங் மொப்பிங், 04.ஸ்ப்பிறே பெயின்ரிங், 05.பைவர் மேர்ட்டிங் என்பன சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும். பிளாஸ்ரிக் பொருள்களுக்கு இரண்டு வருட உத்தரவாதம் வழங்கப்படும்.
கி.கேதீஸ்வரன் இல.286/2, அரசடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். தொடர்பு- 0773512591

## காணவில்லை

கொழும்புத்துறை 1ஆம் குறுக்கைச் சேர்ந்த கடும் கறுப்பு நிற பொமேரியன் 4 வயது நாய்க்குட்டி 10.07.2013 பி.ப 2.00 மணியில் இருந்து காணாமற் போய்விட்டது. இரு சிறுவர்கள் வீட்டின் முன் சைக்கிளில் ஏற்றிச் சென்றதாக பார்த்தவர்கள் கூறுகிறார்கள். தயவு செய்து கண்டுபிடித்து கொடுக்குமாறு தாழ்மையுடன் வேண்டுகிறோம். ஏற்றிச் [illegible] துடன் கேட்கிறோம். தகவல் கொடுப்பவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு- 0771310841, 0779049691, [illegible]215100048



STUDY IN EUROPE (LATVIA)
B.Sc, M.Sc, BBA, MBA
Spot admissions for Feb 2014
இலவச ஆயத்த வகுப்புகள் நடைபெறும்
Schengen Visa members: Austria \Belgium\Czech Republic \ Denmark \ Estonia \ Finland \ France \ Germany \ Greece Hungary \ Iceland \ Italy \ Latvia \ Lithuania \ Luxembourg \ Malta \ Netherlands \ Norway \ Poland \ Portugal \ Slovakia \ Slovenia \ Spain \ Sweden \ Switzerland.
* Medium : English
* Cost : USD 3000 Per annum இலும் குறைவாக
மேலதிக விவரங்களுக்கு:
TezMe Education Consultants
10A, Bharathy Road, Jaffna.
TP: 021 221 7095 Mobile: 774 083570
email: info@tezme.org
(30825)(10,6,3)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெதடிஸ்த மகளிர் அணியை வீழ்த்தியது அராலி சரஸ்வதி

யாழ்ப்பாணம், ஜூலை 13
பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் 175 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 17 வயதுப் பிரிவு பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட பெண்களுக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி சம்பியனாகத் தெரிவாகியது.

நேற்று வெள்ளிக்கிழமை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி வலைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் படசாலை அணியும், அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணியும் மோதிக் கொண்டன.

விறுவிறுப்பாக இடம்பெற்ற ஆட்டத்தில் அராலி சரஸ்வதி மகா வித்தியால அணி 16:13 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றுச் சம்பியனாகத் தெரிவாகியது.

மூன்றாவது இடத்துக்கான ஆட்டத்தில் வடஇந்து மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி மோதிக் கொண்டது.

அதில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி 18:10 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று மூன்றாம் இடத்தைத் தனதாக்கிக் கொண்டது. (ற-422-23)

## புத்தூர் சோமஸ்கந்தா சம்பியனாகத் தெரிவு

யாழ்ப்பாணம், ஜூலை 13
பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் 175 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கரப்பந்தாட்டத் தொடரில் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி அணி சம்பியனாகத் தெரிவாகியது.

நேற்று ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டததில் புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி அணியும், உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி அணியும் மோதிக் கொண்டன.

அதில் புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி அணி 25:23, 25:23 என்ற நேர் செற்களில் வெற்றி பெற்றுச் சம்பியனாகத் தெரிவாகியது.

மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் இளவாலை மெய்கண்டான் வித்தியாசாலை அணியை 25: 17, 25:20 என்ற நேர்செற்களில் வீழ்த்தி வல்வை சிதம்பராக் கல்லூரி அணி மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. (ற-422-23)




வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் வடமாகாண பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட 6 ஆவது தடகளப்போட்டிகளில் சிறந்த தடகள வீரனாகத் யாழ்.இந்துக் கல்லூரி மாணவன் ஜஸ்மின் தெரிவுசெய்யப்பட்டார். (ற-23)

## வவுனியா தமிழ் ம.ம.வியிடம் வீழ்ந்தது நெடுக்குளம் ம.வி.

யாழ்ப்பாணம்,ஜூலை 13
அகில இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் பிரிவுகளுக்கான 15 வயதுப் பிரிவு பாடசாலை அணிகளுக்கிடையே நடத்தப்படும் கிரிக்கெட் சுற்றுத் தொடரின் ஆட்டமொன்றில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியால அணி வெற்றி பெற்றது.

கடந்த வாரம் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியால அணியை எதிர்த்து வவுனியா நெடுக்குளம் மகா வித்தியால அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியால அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. 50 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 266 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய அணி.

பிரவீன் 85 ஓட்டங்களையும், அபூர்வன் 60 ஓட்டங்களையும். வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியால அணி சார்பாக அதிகபட்சமாகப் பெற்றுக் கொண்டனர்.

பந்துவீச்சில் வவுனியா நெடுக்குளம் மகா வித்தியால அணி சார்பில் சஜீதரன் 4 இலக்குகளையும், தனுஷன் 2 இலக்குகளையும், நிரோஷன், துவாரகன் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

267 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய வவுனியா நெடுக்குளம் மகா வித்தியாலய அணி 46.3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து இலக்குகளையும் இழந்து 190 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது.

சகீதரன் 40 ஓட்டங்களையும், துவாரகன் 22 ஓட்டங்களையும் நெடுக்குளம் மகா வித்தியால அணி சார்பாக அதிகபட்சமாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய அணி சார்பாக யசோதரன் 4 இலக்குகளையும், அபூர்வன், பிரியந்தன், சுவிஷன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர். (ற-23-422)

## ஆணழகன் போட்டி இன்று

பருத்தித்துறை, ஜூலை 13
மலாயன் சாண்டோ நடராஜா உடற்பயிற்சிக் கழகம் வருடந்தோறும் வடமகாண ரீதியில் நடத்தும் உடற்பயிற்சிப் போட்டிகளின் வரிசையில் இந்த வருடம் சிறந்த ஆணழகன் தெரிவுப் போட்டி நடத்தபடவுள்ளது. இன்று சனிக்கிழமை மாலை 6 மணிக்கு பருத்தித்துறை திக்கமுனை மைதானத்தில் நடைபெறவுள்ள இந்தப் போட்டிக்கு பிரதம விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலர் சி.த.ஜெயசீலன் கலந்துகொள்ளவுள்ளார். (ற-34)

## இன்றைய ஆட்டம்



யாழ்ப்பாணம், ஜூலை 13
தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று சனிக்கிழமை கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம்:-
இளவாலை யங்ஹென்றிஸ் 'பி' அணி எதிர் மானிப்பாய் ரெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணி. (ற-23)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றிநவிலலும்



## அமரர் சரவணமுத்து பரம்சோதி

(உரிமையாளர்:- வெங்கடேஸ்வரா ஸ்ரோர்ஸ்)

**மலர்வு : 29.07.1959** **உதிர்வு : 13.06.2013**

சிறந்த குடும்பத் தலைவனாக இருந்தவரே
எங்கள் நினைவின் உயிரே
முறையாய் வாழ்ந்து அனைவரையும்
முறைப்படுத்தியவரே
அன்பின் கடலே பண்பின் சிகரமே
பேதமற்ற ஜீவன் உன்னால் அனைவரையும்
அணைத்து வழி நடத்தி உயரவைத்த ஏணியே
பிரிவு உங்கள் உடலுக்கே
உங்கள் நினைவுகள் என்றும்
எங்களுடன் தான் அப்பா
மாதம் ஒன்று ஆனாலும் உங்களை
வாசலில் நின்று எதிர்பார்ப்போம்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

கடந்த (13.06.2013) வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தோருக்கும், வெளிநாடு, உள்நாட்டிலிருந்து தொலை பேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் மூலமும் மலர்வளையங்கள் வைத்தும் துயர் பகிர்ந்தோருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (13.07.2013) சனிக்கிழமை மு.ப. 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

354/7 பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (C/10453)(2.6.3)

**குடும்பத்தினர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டோனியின் மிரட்டலுக்கு பணிந்தன சிங்கங்கள்







முத்தரப்பு ஒருநாள் தொடரின் இறுதியாட்டத்தில் அணித் தலைவர் டோனியின் அசத்தல் ஆட்டம் கைகொடுக்க, இந்திய அணி ஓர் இலக்கு வித்தியாசத்தில் இலங்கை அணியை வீழ்த்திக் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

மேற்கிந்தியத்தீவுகளில் நடைபெற்ற முத்தரப்பு ஒருநாள் தொடரின் இறுதியாட்டம் போர்ட் ஒப் ஸ்பெயினில் உள்ள குயின்ஸ் பார்க் ஓவல் மைதானத்தில் நடந்தது. அதில் இலங்கை, இந்திய அணிகள் மோதிக் கொண்டன. தொடையின் பின்பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக அணியில் இடம்பெற்றிருக்காத இந்திய அணித்தலைவர் டோனி இறுதியாட்டத்தில் களமிறங்கினார். முரளி விஜய், உமேஷ் யாதவ் நீக்கப்பட்டனர். வினய்குமார் இடம் பிடித்தார். இலங்கை அணியில் சுரங்க லக்மல், குசல் பெரேரா வாய்ப்பு பெற்றனர். நாணயச்சுழற்சியில் வென்ற டோனி, களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணியின் உபுல் தரங்க (11), மஹேல ஜெயவர்த்தன (22) ஆகியோர் புவனேஷ்வர் குமார் 'வேகத்தில்' வெளியேறினர். பின் இணைந்த சங்கக்கார, திரிமனே இணை சரிவிலிருந்து அணியை மீட்டது. இந்திய பந்துவீச்சை எளிதாக சமாளித்த சங்கக்கார, ஒருநாள் ஆட்டத்தில் தனது 77ஆவது அரைச் சதத்தைப் பெற்றுக் கொண்டார். மூன்றாவது இலக்குக்காக 122 எடுத்திருந்தபோது திரிமனே (46) அரைசத வாய்ப்பை இழந்து வெளியேறினார். இஷாந்த் பந்தில் தொடர்ச்சியாக இரண்டு பவுண்டரி, ஒரு சிக்ஸர் அடித்த சங்கக்கார (71) அஷ்வின் 'சுழலில்' சிக்கினார்.

அடுத்து வந்த குசல் பெரேரா (2), தினேஷ் சண்டிமால் (5), அணித்தலைவர் மத்யூஸ் (10), ஹேரத் (5), லசித் மலிங்க (0), சுரங்க லக்மல் (1) ஆகியோர் சொற்ப ஓட்டங்களுடன் வெளியேறினர்.

இலங்கை அணி 48.5 பந்தில் 201 ஓட்டங்களுக்கு அனைத்து இலக்குகளையும் இழந்தது.

இந்தியா சார்பில் ரவிந்திர ஜடேஜா 4 இலக்குகளையும், புவனேஷ்வர் குமார், இஷாந்த் சர்மா, அஷ்வின் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

இலகுவான இலக்கை விரட்டிய இந்திய அணிக்கு ஷிகர் தவான் (16) ஏமாற்றமளித்தார். அடுத்து வந்த விராத் ஹோக்லி (2) நிலைக்கவில்லை. ஹேரத்தின் பந்தை ரோகித் சர்மா பவுண்டரிக்கு விரட்டினார். மலிங்கவின் பந்துப்பரிமாற்றத்தில் தினேஷ் கார்த்திக் தொடர்ச்சியாக இரண்டு பவுண்டரி அடித்தார். தொடர்ந்து ஹேரத் சுழலில் தினேஷ் (23) வெளியேறினார். மலிங்க பந்துவீச்சில் இரண்டு பவுண்டரி விளாசிய ரோகித் அரைச் சதம் கடந்தார். தன் பங்கிற்கு லக்மல் பந்தை ரெய்னா சிக்ஸருக்கு பறக்கவிட்டார். அரை சதம் கடந்த ரோகித் 58 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ரெய்னாவும் (32) பவிலியன் திரும்பினார். பின்னர் களமிறங்கிய டோனி திறமையான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். மலிங்கவின் பந்துப்பரிமாற்றத்தில் தொடர்ச்சியாக இரண்டு பவுண்டரிகள் விளாசினார். ஹேரத்தின் பந்துப்பரிமாற்றத்தில் ஜடேஜா (5), அஷ்வின் (0) அடுத்தடுத்துச் சிக்கினர். இருப்பினும் தனி ஆளாக டோனி போராடினார். புவனேஷ்வர் (0), வினய் குமார் (5) நிலைக்கவில்லை.

எரங்கா வீசிய கடைசி பந்துப்பரிமாற்றத்தில் 15 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில், டோனி அதிரடி காட்டினார். முதல் பந்தில் ஓட்டங்கள் எடுக்கவில்லை. இரண்டாவது, மூன்றாவது பந்துகளில் முறையே தலா ஒரு சிக்ஸர், ஒரு பவுண்டரி அடிக்க, ரசிகர்கள் உற்சாகத்தில் மிதந்தனர். நான்காவது பந்தில் ஒரு இமாலய சிக்ஸர் அடித்து வெற்றியை உறுதி செய்தார்.

இந்திய அணி 49.4 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 203 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது. டோனி (45), இஷாந்த் சர்மா (2) ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது இருந்தனர். இலங்கை அணி சார்பில் அதிகபட்சமாக ஹேரத் 4 இலக்குகளை வீழ்த்தினார்.

ஆட்ட நாயகன் விருதை அணித்தலைவர் டோனி வென்றார். தொடர் நாயகன் விருதை இந்திய அணியின் புவுனேஷ்வர் தட்டிச் சென்றார். (ற)

# லிட்டில் மாஸ்டருக்கு அறுவைச் சிகிச்சை



பாகிஸ்தான் அணியின் முன்னாள் வீரர் ஹனிப் முகமதுவுக்கு புற்றுநோய்க்கான அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

பாகிஸ்தானின் முதல் நட்சத்திர கிரிக்கெட் வீரர் ஹனிப் முகமது (வயது78). டெஸ்ட்வரலாற்றில்நீண்ட நேரம் (970 நிமிடங்கள், 1957-58, எதிரணி- மேற்கிந்திய தீவுகள்) களத்தில் இருந்து விளையாடிய வீரர் என்ற பெருமை பெற்றவர். 'லிட்டில் மாஸ்டர்' என்று அழைக்கப்பட்ட முதல் வீரர் ஹனிப்தான், அதன்பின்தான் இந்தியாவின் சச்சினுக்கு இந்தப்பெயர் வந்தது. சமீபத்தில் கல்லீரல் புற்றுநோயால் அவதிப்பட்டு வந்து ஹனிப் முகமதுக்கு, இங்கிலாந்தில் உள்ள லண்டன் பிரிட்ஜ் மருத்துவமனையில் அறுவைசிகிச்சை செய்யப்பட்டது. இதுகுறித்து மருத்துவர் ரோபர்ட் ஹட்சின்ஸ் கூறுகையில், ''புற்றுநோய் ஆரம்ப நிலையில் தான் இருந்தது, வேறிடங்களுக்கு பரவவில்லை'' என்று தெரிவித்துள்ளார். (ற)

# மத்தியூஸுக்குத் தடை





இலங்கை அணித் தலைவர் ஏஞ்சலோ மத்தியூஸிற்கு 2 ஒரு நாள் ஆட்டங்களில் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்தியாவுக்கு எதிராக முத்தரப்பு தொடரின் இறுதியாட்டத்தில் குறித்த நேரத்தில் பந்து வீசப்படாததை அடுத்தே மத்தியூஸிற்கு இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதனால் இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாட உள்ள தென்னாபிரிக்க அணிக்கு எதிரான முதல் இரண்டு ஒருநாள் ஆட்டங்களிலும் அவர் பங்கேற்கமாட்டார். இவ்விரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ஒருநாள் போட்டி எதிர்வரும் 20 ஆம் திகதி கொழும்பு பிரேமதாச மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (ற)

# ஆக்ரோஷமானவர் விராட் ஹோக்லி



அணித்தலைவர் பொறுப்பில் கங்குலியைப் போல களத்தில் ஆக்ரோஷமாக செயல்படுகிறார் விராட் ஹோக்லி என்று தெரிவித்துள்ளார் அவரின் பயிற்சியாளர் ராஜ்குமார் ஷர்மா.

இந்திய அணிக்கு 19 வயதுக்குட்பட்ட உலகக் கிண்ணத்தை (2008) வென்று தந்தவர் விராத் ஹோக்லி. தனது சிறப்பான ஆட்டத் திறமையால், அணியில் நிலையான இடத்தை பெற்ற இவர், அணியின் துணை அணித்தலைவராக உயர்ந்தார்.

மேற்கிந்தியத் தீவுகளில் நடந்த முத்தரப்பு தொடரில் இந்திய அணித்தலைவர் டோனிக்கு காயம் ஏற்பட்டதால், அணிக்கு தலைமை தாங்கிச் செயற்பட்டார் விராத் ஹோக்லி. சிம்பாப்வே செல்லும் இந்திய அணிக்கும் அணித்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் விராட் ஹோக்லி பற்றிக் கருத்துத் தெரிவித்த பயிற்சியாளர் ராஜ்குமார் ஷர்மா,

''இயற்கையாகவே போராட்ட குணம் நிறைந்தவர் விராட் ஹோக்லி. இப்போது அவர் அணித் தலைமைப் பதவியில் இருக்கும் போதும் இந்த குணம் பிரதிபலிக்கிறது. என்னைப் பொறுத்தவரை இவர் முன்னாள் இந்திய அணித் தலைவர் கங்குலியை போல துணிச்சலாக, ஆக்ரோஷமாகச் செயல்படுகிறார்.

அதேநேரம், அது எல்லை மீறிப் போகாதவாறு பார்த்துக் கொள்வார் என்று நம்புகிறேன். தற்போதைய அணித் தலைவர் டோனி அசத்தலானவர். கிரிக்கெட்டில் இருந்து விலகும் வரை, டோனி தான் இந்திய அணிக்கு தலைமை தாங்க வேண்டும். அவரிடம் இருந்து ஹோக்லி நன்கு கற்றுக் கொள்ள வேண்டும். வாய்ப்பு வரும்போது, தலைமை பொறுப்பை ஹோக்லியிடம் வழங்கலாம்.

வயதுக்கும் தலைமைப் பதவிக்கும் எந்த தொடர்புப் இல்லை. போட்டி சூழ்நிலைகளுக்கு ஏற்ப திறமையை வெளிப்படுத்தி, அணியின் வெற்றிக்கு கைகொடுத்து, மற்றவர்களுக்கு எப்படி முன்னுதாரணமாக உள்ளாரா என்பது தான் முக்கியம்.

2008 பிரிமியர் தொடருக்கு முன்னர் சில பிரச்சினைகள் ஹோக்லிக்கு இருந்தது. இப்போது தனது தவறுகளை உணர்ந்து, கடினமாகப் போராடி நம்பிக்கையுடன் செயல்படுகிறார். நல்ல அனுபவ வீரர்களைப் போல அசத்துகிறார்.'' என்று தெரிவித்தார் அவர். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A/L
## பொருளியல் நூல்
**MCQ BOOK -3** ரூபா 70/=
**வே.கருணாகரன்**
பூபாலசிங்கம் புத்தகசாலை
அன்னை புத்தகசாலை



## வீடு வாடகைக்கு
கிளிநொச்சி நகரை அண்டிய பிரதேசத்திலுள்ள சகல வசதிகளினுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. (37480)
தொடர்பு: 0773944745 0776317618


# மரண அறிவித்தல்கள்

## எட்வேட் துரைராஜா சீமாம்பிள்ளை



கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பிலும் தற்போது கனடா, ஸ்காபுரோவில் வாழ்ந்து வந்தவருமான எட்வேட் துரைராஜா சீமாம்பிள்ளை கடந்த 11.07.2013 வியாழக்கிழமை இறைவனில் நிலை வாழ்வு பெற்றார். அன்னார் காலஞ்சென்ற சீமாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை (கரவெட்டி)- அன்னம்மா தம்பதியரின் புத்திரனும் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை, யோசப், அந்தோனிமுத்து, ராணி ஸ்ரனிஸ்லொஸ் மற்றும் எட்வின் குணரட்ணம் (சிக்காக்கோ) ஆகியோரின் சகோதரனும் சந்திராவின் (ராஜி) அன்புக் கணவரும் டன்ரன், டர்ஷன், டயாளன், ஆகியோரின் பாசமிகு தந்தையும் ராஜி, தனுஜா ஆகியோரின் மாமனும் தாரணி, தீபன், ஆகாஷ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் Chapel Ridge Funeral Home (8911 Woodbine Avnue, Markham) இல் 13ஆம் திகதி சனிக்கிழமையும் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் மாலை 5 மணி தொடக்கம் 9 மணி வரையும் திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து 9.45 மணிவரையும் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 15ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு 265, Alton Towers Circle இல் உள்ள Prince of Peace ஆலயத்தில் அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு Christ of King சேமக்காலையில் அடக்கஞ் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
**டன்ரன் துரைராஜா: 647-300-1973,**
**டர்ஷன் துரைராஜா: 647-248-1973,**
ethura@gmail.com

(சி/3494)

## திருமதி.புவனேஸ்வரி சுப்பிரமணியம்



இமையாணன், உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் G2/6, அன்டசன் தொடர்மாடி நாரஹென்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.புவனேஸ்வரி சுப்பிரமணியம் நேற்று 12.07.2013 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி- சின்னமணி தம்பதியரின் அருமை மகளும் காலஞ்சென்றவர்களான தம்பையா- தங்கமுத்து தம்பதியரின் மருமகளும், புஷ்பமாலா, இந்திரகுமார், புஷ்பவதனா, புஷ்பலதா ஆகியோரின் பாசமிகு தாயும் சிவலிங்கம், சித்ரா, சங்கர் இரட்னதுரை ஆகியோரின் அன்பு மாமியும் மாயா, மயுரா, விஷ்ணுகரன், ஐங்கரன், செந்துரன், அபர்ணா ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும் அருண், தரண் ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும் காலஞ்சென்ற குணரட்ணம், இராஜேஸ்வரன், புவனேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் மஹாலட்சுமி, தவமணி, சாந்தநாயகி ஆகியோரின் மைத்துனியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று (13.07.2013) சனிக்கிழமை காலை முதல் ஜெயரட்ண மலர்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் நாளை (14.07.2013) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு நடைபெற்று மாலை 5 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக பொரளை பொது மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**G 2/6, அன்டசன் தொடர்மாடி,**
**நாரஹென்பிட்டி. 0777590205** (30869)
**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## விஜயரட்ணம் மகாலிங்கம்



**(ஓய்வு பெற்ற மருந்தாளர் பிலிப்ஸ் நேர்ஸிங்கோம்)**

யாழ்ப்பாணம், பிறவுண் வீதி, நீராவியடியைப் பிறப்பிடமாகவும் தற்போது கொழும்பு இரத்மலானையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த விஜயரட்ணம் மகாலிங்கம் கடந்த (11.07.2013) வியாழக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஜயரட்ணம் - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும் லலிதாதேவியின் (முன்னாள் ஆசிரியை, யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை) அன்புக் கணவரும் பிரபாகரன், பிரதீபன், அனித்தா ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிறிவாணி, பவாணி, றமணன் ஆகியோரின் அன்பு மாமனும் சேஷாந்த், கேஷிகன், சுகநயன், பிரகர்ஷன், ஷாரிகா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான நடராசா - யோகரட்ணம் தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற ராஜரட்ணம், சண்முகநாதன், அசலாம்பிகை மற்றும் கமலாம்பிகை, ஞானாம்பிகை ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற யோகவதி, இராஜகுலசிங்கம், ஸ்ரீசந்திரமோகன் மற்றும் தெய்வானைப்பிள்ளை, குணராசா (செங்கையாழியான்), பத்மநாதன், சிறிதரன், லீலாதேவி, சுகந்தாதேவி, யசோதாதேவி, ஸ்ரீரஞ்சன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் விஜயதேவி, அன்பரசி, சிவப்பிரகாசம், குணபாலசிங்கம், கமலேஸ்வரன், கலாவாணி, காலஞ்சென்ற கதிர்காமநாதன் மற்றும் நவரத்தினம், சத்தியலட்சுமி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை 14.07.2013 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு கல்கிசையில் உள்ள மஹிந்த மலர்சாலையில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (சி/10441)

**38/3A, ஸ்ரீ சுமங்கல வீதி, இரத்மலானை. 0777698746** **தகவல்: குடும்பத்தினர்.**

## அடித்துக் காயப்படுத்திய 32 பேர் பொலிஸ் பிடியில்



அடித்துக் காயப்படுத்தினர் என்ற குற்றச்சாட்டில் கடந்த வாரம் 32 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜெப்றி தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இவர்களை விட கடந்த வாரத்தில் குடித்து விட்டு வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் 15 பேரும், விபத்து ஏற்படுத்திய 6 பேரும், சட்டவிரோதமாக மதுவிற்ற 9 பேரும், களவெடுத்த குற்றச்சாட்டில் 5 பேரும், கொள்ளையடித்த குற்றச்சாட்டில் 8 பேரும், சந்தேகத்தின் பேரில் 32 பேரும், அத்துமீறி வீடுபுகுந்த குற்றச்சாட்டில் 4 பேரும், பொது இடத்தில் இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் 10 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ங-4)

## ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் மன்றம் வருடாந்த பொதுக்கூட்டம்

காலம்- 28.07.2013 ஞாயிற்றுக்கிழமை
நேரம்- பி.ப 2 மணி
இடம்- ஹாட்லிக் கல்லூரி

மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம். பிரேரணைகள் 22.07.2013 ஆம் திகதிக்கு முன்னதாக தலைவர் இணைச்செயலாளர் களுக்கு அனுப்பி வைக்கவும்.

தலைவர்/ இணைச்செயலாளர்கள்,
ஹாட்லிக்கல்லூரி பழைய மாணவர் மன்றம்,
ஹாட்லிக்கல்லூரி, பருத்தித்துறை.


## இதுவும்திசைகாட்டியின் மின்னல் வெளியீடு
இவர்களும் கனடா சட்ட ரீதியாக செல்ல அருமருந்தன்ன வாய்ப்பு
★அழகுக் கலை கனடாவில்
படிக்க விரும்பும் ஆண்கள், பெண்கள்
உடனடியாக பயணிக்க சட்ட ஆலோசனை.
இவ்வாய்ப்பு 15.07.2013 வரை மட்டுமே.
எமது விசேட கரும பீடம் இதற்காக காலை 7 முதல் இரவு 9 வரை திறந்திருக்கும். உங்கள் தாமதம் பின்னர் உங்கள் உள்ளம் வாட வைக்கும்.
**திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்**
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (30808)
0212219016, 0215689090


# மரண அறிவித்தல்

## நமசிவாயம் சிவசுப்பிரமணியம்

கொட்டடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ந.சிவசுப்பிரமணியம் நேற்று (12.07.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நமசிவாயம்- செல்லாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராமையா -சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், மதிவதனியின் பாசமிகு கணவரும், குமரேந்திரன், காலஞ்சென்ற வாசுதேவன் ஆகியோரின் அன்புத் தந்தையும், அக்னஸின் அன்பு மாமனும், எலோமா அஸ்வினி, அஜீத்குமார் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.07.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி,
யாழ்ப்பாணம்.
மனைவி- 0779672828, மகன்- 0718495019
தகவல்:
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்கள்



## திருமதி இராசம்மா தம்பிராசா


நீர்வேலி மத்தியைச் சேர்ந்த திருமதி இராசம்மா தம்பிராசா நேற்று (21.07.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராசாவின் அன்பு மனைவியும், கந்தசாமி (இளைப்பாறிய ஆசிரியர்), சரஸ்வதி (நீர்வேலி மத்தி) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.07.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்கா நீர்வேலி சியாக்காடு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நீர்வேலி, மத்தி.
தகவல்: த.கந்தசாமி

## திருமதி லூர்த்தம்மா வின்சென்ரிபோல்



இல.40, பழைய பூங்கா வீதி, கண்டிக்குளியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட லூர்த்தம்மா வின்சென்ரிபோல் நேற்று (12.07.2013) வெள்ளிக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான சந்தியாப்பிள்ளை - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பேர்க்மன்ஸ் வின்சென்ரிபோலின் அன்பு மனைவியும் கிறிஸ்ரி மவுன்பெற்ரனின் அன்புத் தாயும் டாக்டர்.அன்ரன் சந்தியாப்பிள்ளையின் அன்புச் சகோதரியும் அருட்சகோதரி.மொனிக்கா (தி.கு.க.), லூர்த்து கலிஸ்ராவின் (ரோகினி), அன்பு மைத்துனியும் யூட் சேவியம் (கனடா), லக்ஷ்யாயினி (ஜேர்மனி), கிருஷாந்தி (ஜேர்மனி), சயானாறோஜி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று 13.07.2013 சனிக்கிழமை பி.ப. 3 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செலல்ப்பட்டு புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் அடக்கஞ் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.40, பழைய பூங்கா வீதி,
[illegible]பாணம். (30871)
தகவல்:
டாக்டர்.அன்ரன் சந்தியாப்பிள்ளை (சகோதரன்)





# IELTS
A1 B1 B2 KU Education
Quick Preparation Available Call: 0777302882
Visit: http://edu.kugroup.info/ielts
தனிப்பட்ட முறையில்,உங்கள் நேர வசதிக்கேற்ப கற்கக்கூடிய,அதிக அளவிலான சிறந்த பெறுபேறுகளை யாழ்மாவட்டத்தில் வழங்கிவரும் ஒரே நிறுவனம்.
K.U Education,No 75,Temple Road,Jaffna. IELTS Centre



## சாவகச்சேரியில் 3 பரப்பு காணி விற்பனைக்கு
ஐயர் ஒழுங்கை நுணாவிலில் (A9 வீதிக்கு அருகாமையில்) 3 பரப்பு காணி உடனடி விற்பனைக்கு உண்டு. பரப்பு 3½ இலட்சம்
தொடர்பு 0772687252


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.07.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org